
No. 15
ANANDA GUNA BODHINI
Regd. No. M. 2151
ஆநந்தகுணபோதினி.
கோபால் முதலியார்
கசாலைத் தெரு, மதராஸ்
பிரைட் ரிஜிஸ்டர்டு).

## விஷய அட்டவணை.


1. ஆனந்த தரிசனம் ... 121
2. தமிழ்ப்பாஷையும் தமிழ்ப் புலவர்களும் ... 126
3. சென்ற மாதம் ... 131
4. மதிப்புரை ... 135
5. கல்யாணே .. 13[illegible]
6. பெரியாரின் மொழிகள் .. 1[illegible]9
7. ஆங்கிலத் தமிழ்க் கடிதங்கள் 1[illegible]1
8. குழந்தைகள் பக்கம்—கேசவனின் எண்ணங்கள் 142
9. நமது கதாப் பிரசங்கி ... 144
10. பழமொழிகுறிப்புகள் அன்பு..
11. தேகதத்துவசூக்ஷ்மங்கள்... 1
12. மாதர் மனோரஞ்சிதம் ... 1
13. சிறுமணித் திரள் ... 159
14. கவிதா விலாஸம் ... 162
15. பிரபஞ்ச தரிசனம் ... 165
16. விகடப் பிரதாபன்—பணப் பேய்ச் சித்தர் பாடல்... 168
17. நெப்போலியனின் ஜீவிய காலம் ... 173
18. விநோதக் களஞ்சியம்... 176


## ஆநந்த குணபோதினியின் வருஷ சந்தா விபரம்

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா ரூபாய் 1. வெளிநாடுகளுக்கு ரூபாய் 1—4—0. தனிப்பத்திரிகை அணு 2.

ஒருவருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை. எந்த மாதத்தில் சேர்ந்தாலும், பயிண்டு செய்வதற்குச் சௌகரியமாய் அவ்வருஷ முதற் பத்திரிகையிலிருந்தே கணக்கிடப்பட்டு அப்பத்திரிகைகளையும் கூடச் சேர்த்து அனுப்பப்படும்.

கடிதம் எழுதுகையில் இவ்வருஷம் கொடுத்திருக்கிற தங்களின் புதிய நெம்பரைத் தெரிவிக்காவிடில் பதில் தரப்படமாட்டா. பதிலுக்கு ஸ்டாம்பு அல்லது ரிப்ளைகார்டு அனுப்புக. பத்திரிகை கிடைக்கப் பெறதோர் பிரதி தமிழ் மாதமும் 15-ம் தேதிக்குள் எழுதாவிடில் அனுப்பப்படமாட்டா. அன்னோர் விலை கொடுத்துப் பெறவேண்டும்.

## ஆநந்த குணபோதினி முதல் வால்யம்.

முதல் வால்யத்தின் 12 ஸஞ்சிகைகளையும் ஒன்று சேர்த்து நேர்த்தியான முழு காலிகோ பைண்டு செய்துள்ளது. விலை ரூ. **1—6.** 630 பக்கங்களுக்கு மேல் கொண்ட அருமையான அநுபவஞான நூலாகும். விரைவில் எழுதிப் பெறுக.

## நமது கிருப நேயர்கட்கு

☞ பத்திரிகையில் பிரசுரிப்பதற்கென்று வியாசங்கள் வரைவோரும், மதிப்புரைக்காக நூல்கள் அனுப்புவோரும் அடியில் கண்ட விலாஸத்தின்படி பத்திராசிரியருக்கே நேராக அனுப்ப வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பிப் பெற ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

*விலாசம் :—* *பத்திராசிரியர், " ஆநந்த குண போதினி " ஸ்ரீரங்கம்.*

☞ " ஆநந்த குணபோதினி " *க்குச் சந்தாதாராதல், சந்தா அனுப்புதல், பத்திரிகையின் சார்பான விவரங்கள் விரும்புதல், விளம்பரம்* செய்தல் *முதலிய நிர்வாக விஷயங்கட்கு தீ.* இராஜகோபால் முதலியார், " ஆநந்த குண போதினி " ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை, என்று எழுதுக

# பத்திரிகை வரத்தவறுதல்

இவ்விடமிருந்து அனுப்பப்பட்ட பத்திரிகைகள் கிடைக்கப் பெறாமல் தவறுதலென்பது தபாற்சேவகர்களின் அசிரத்தையாலோ, தபாற்சாலைகளின் பிசகுகளினாலோ, நேர்ந்திருக்கவேண்டும். எல்லோருக்கும் பத்திரிகைகளை யனுப்பிவிட்டு, சிலருக்கு மட்டும் நாம் பத்திரிகை அனுப்பாமலிருப்பதாக எண்ணுவது சரியன்று. பிரதி இங்கிலீஷ் மாதமும் 15-ம் தேதியன்று நமது பத்திரிகா பிரசுர தினம் என்று தபால் அதிகாரிகட்கு நாம் தெரிவித்துள்ளவாறு அந்தத் தேதியில் சந்தாதாரர்கள் அனைவருக்கும் சரிவரக் கணக்கிட்டுப் பத்திரிகைகளைத் தபாலுக்கு ஏககாலத்தில் அனுப்புகிறோம். ஒருஸமயம் ஞாயிற்றுக்கிழமையில் 15ம் தேதி வரின், மறு நாளாகிய 16ம் தேதி திங்களன்று நிச்சயமாக யாவருக்கும் போஸ்ட் செய்துவிடப்படுகிறது. இதை நாம் கண்டிதமாய் அநுஷ்டித்து வருவதால், மேற்கண்ட தேதியில் போஸ்டு செய்வதென்பது யாதொரு காரணத்தாலும் தடையாகாது.

ஆகவே, நமது சந்தா நேயர்கள் தங்களுக்கு வழக்கம்போல் கிடைக்கவேண்டிய தேதியில் பத்திரிகை வராவிட்டால், அந்த மாதம் ஞாயிற்றுக்கிழமையில் 15-ம் தேதி வந்திருப்பின் இன்னும் ஒரு தினம் பொறுத்துப் பார்த்துவிட்டு, உடனே தபாற்சாலையில் கண்டிதமாய் விசாரித்துப் பத்திரிகைகளைப் பெற்றுக்கொள்வதே உத்தமம். இவ்விதம் செய்வதுதான் உசிதமேயன்றி, பத்திரிகைகளை நாம் அனுப்பத் தவறினோமென்று பிசகாக எண்ணிவிடக் கூடாது. அவ்விதம் நினைத்துக் குறைகூறுவதும் சரியாகாது. பிரதி மாதத்திலும் குறித்த ஒரே தேதியில் சந்தா நேயர்கள் அனைவருக்கும் ஏக காலத்தில் ஒழுங்காகப் பத்திரிகைகள் அனுப்பிவிடப்படுகின்றனவென்று மீண்டும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

☞ நமது ஆநந்த குண போதினி"ப் பத்திரிகையை இப்பொழுது 56-பக்கங்களுடனும், அடிக்கடி படங்கள் சகிதமாகவும் நூதனமுறையில் வெளியிட்டு வருகின்றோம். ஒரே ரூபாய் சந்தாவில் இவ்வளவு அதிகமான பக்கங்களுடன் கூடிய பத்திரிகை தமிழ் நாட்டில் இதுகாறுமில்லை. அந்தப் பெருமையை வகித்துத் தமிழ் நாடெங்கணும் பரவிப் புகழ்வாய்ந்துள்ளது நமது "ஆநந்த குணபோதினி" ஒன்றேதான் பத்திரிகையின் பெரிய உருவத்திற்கேற்ப அதில் அடங்கியுள்ள விஷயங்களும் ஸர்வசிலாக்கியமானவைகளாய் நிகரற்று விளங்கும் வண்ணமாகப் பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். இவ் வுண்மையை யுணர்ந்த நமது அன்பிற்கினிய பத்திரிகா சிரேஷ்டர்கள் இப்பத்திரிகையின் அபிவிருத்தியில் விசேஷசிரத்தை கொண்டு பல புதிய சந்தாதாரர்களைச் சேர்ப்பித்துக்கொடுத்து பத்திரிகையை மேன்மேலும் விருத்திசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

பத்திராசிரியர்.

ஓம் பரப்பிரம்மணே நம:

# ஆனந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைப் பெருக்கி ஆனந்தத்தைத்
தரவல்லதான அநுபவ விநோத நீதிகள் நிறைந்த
உயரிய செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :—திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். "—*திருக்குறள்.*

| | | |
|---|---|---|
| கமலம் - 2. Vol. II | சென்னை : பிரபவ௵ ஆனி௴ 1௳ 1927-ம்௵ ஜூன்௴ 15௳ | இதழ் -15. No. 15. |

## ஆனந்த தரிசனம்

" ஆண்டா யுன்னைக் காண்பதோ ரருளெனக் கருளுதி. " பகவானே ! குளிர், வெப்பம், துக்கம், சுகம் இவை போன்றவைகளின் நிமித்தம் உமது திருவடியிணையை வணங்குவோனும் அல்லன். கும்பிபாகாதி பெரு நரகங்களின் துன்பத்தை நிவர்த்தித்துக்கொள்ளுதற் பொருட்டு நமஸ்கரிப்பவனுமல்லன். சுந்தரமாயும் மிருதுவான கொடிபோலும் சரீரத்தையுடைய ஸ்திரீகளுடன் ரமிப்பதற்காக வென்று உன்னை ஸ்தோத்தரிப்பவனுமல்லன். பின் எதற்கெனில், பிரதி ஜன்மத்திலும் இந்த ஹிருதயம் என்னும் வீட்டில் உன்னைத் தியானிப்பதற்கு உன் அருளை விரும்பியே உன்னைத் துதிக்கின்றேன்.

***

" சக்கையை மென்று சாற்றை யுமிழ்வது போல" உள்ளது நம் நிலைமை. கரும்பு தின்னுமல் வேம்பை விரும்புவது ஏனோ? நமக்கு நாதனும், புருஷோத்தமனும், திரிலோகங்களுக்கு ஏக சக்ராதிபதியும், சரீரத்தால் சென்று சேவிக்கவேண்டிய சிரமமின்றி மனத்தால் சேவிக்கத்தக்கவனும், நித்யானந்தமயமான தனது பதத்தைத் தருபவனும் ஆன பரமாத்மா இருக்கையில் அவனைத் துதிக்க நேரமில்லாமல், கேவலம் [illegible] வனும், அல்ப தனத்தைக் கொடுப்பவனுமான ஒரு [illegible] பொருட்டு வணங்கச் செல்லுகிறோம். இது ஆச்சரியமன்றோ? என்னே நம்

1. நகர்க்கழகு நதி, நங்கையர்க் கழகு கற்பு, நீர் நண்ணும் வாவிக்கு நளினம். (நளினம்=தாமரை)

அவிவேகம்! ஈச்வரா! ஆரோக்கிய ஐச்வரியங்களோ, அன்றி மோக்ஷமோ எதைக் கேட்கினும் தருதற்கு நீ வன்மையுள்ளவனாக இருக்கின்றாய். இப்படி நீ இருக்கையில் உன்னை ஆச்ரயிக்கோம். உன்னைத் துதிக்கோம். அங்ஙனம் துதியாதிருக்கினும் அதைத் தவறென்றும் எண்ணோம். நீ கொடுத்த இந்திரியங்களை உன் விஷயத்தில் உபயோகிக்கோம். ஒரு பிரபுவின் தயவை ஸம்பாதிக்க எண்ணி அவனிடம் நிஜமல்லாத ஸ்தோத்திரங்களைச் செய்வதற்குப் பதிலாக உன்னைத் துதிக்கின் நீ காப்பாற்றாயா? காமதேனுவை விட்டுக் கழுதைப் பால் கறக்கச் சென்றால், அது புறங்காலால் உதைக்கும். உன்னை விட்டு மற்றவர்களை ஆச்ரயித்தல் காமதேனுவை விட்டு கழுதைப் பால் கறக்கப் பார்ப்பதேயாகும்.

***

"கருணாகரக் கடவுளே" என்று தாயுமானவர் பாடியுள்ளார். கடவுளாவது அவருடைய பக்தர்களாவது உண்மையாகவே கருணையுடையவர்களாயிருந்தால் எல்லா ஜனங்களுக்கும் ஆத்மஞானத்தைத் தாராளமாய்ப் போதிக்காததேன்? ஒரு ஸ்திரீ தன் பர்த்தாவுடன் சல்லாபம் செய்து தான் அனுபவித்த ஆனந்தத்தைப் பிறருக்குச் சொல்ல வெட்கப்படுவாள். அவளை நிர்ப்பந்தித்தாலும் அன்னியர்களிடம் தான் அநுபவித்த சங்கதிகளைச் சொல்ல மாட்டாள். ஆனால் தன்னுயிர்த் தோழியைக் கண்டால் ரகஸ்யமான எந்த ஸங்கதியையும் சொல்லாமலிராள். தோழியினிடம் தான் அநுபவித்த இன்பத்தைச் சொல்லாவிட்டால் அவளுடைய மனது ஸமாதானமாயிராது. அதுபோல் பரம பக்தர்கள் தாங்கள் அநுபவிக்கும் பிரம்மானந்தத்தை ஸாமான்யர்களிடம் சொல்லமாட்டார்கள். உண்மையாகவே பக்தி நிறைந்த சிஷ்யர்களிடம் சகல ரகஸ்யார்த்தங்களையும் சாங்கோபாங்கமாய்ச் சொல்லுவார்கள். ஆதலின் நாம் பக்தர்களாயிராத தப்பிதம் நம்மிடமிருக்க, கருணையற்றவர்களென்று மகான்களைக் குறை கூறுவதில் என்ன பலன்?

***

"ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்." எங்கும் வியாபித்திருப்பதால் பகவானுக்கு விஷ்ணுவென்ற பெயர் உண்டாயிற்று. ஸர்வ ஜீவதயாபராகிய விஷ்ணுமூர்த்தி பள்ளிகொண்டிருக்கிறாரென்று புராணங்கள் கூறுகின்றன. அம்மூர்த்தி எடுத்திருக்கும் அவதாரங்களைப் பார்த்தால் அவருக்கு நித்திரை செய்ய நேரமில்லையென்று தெரியவரும். இதிகாஸ புராணங்களைப் படித்தால் மகா விஷ்ணு தேவர்களைக் காப்பாற்ற வேண்டியும், அசுரர்களை ஸம்ஹரிக்க வேண்டியும் அநேக அவதாரங்களை எடுத்திருக்கிறாரென்று தெரியும். ஆதலின் எப்போதும் பிராணிகளைக் காப்பாற்றும் விதத்தைப் பற்றித் திருமால் ஆலோசனை செய்வதற்காகவே பாற்கடலில் பள்ளி கொண்டாரென்று நினைக்கிறோம். இப்படி இடைவிடாது நிமிஷப் பொழுதையும் வியர்த்தம் செய்யாது பக்தர்களை இரக்ஷிப்பதிலேயே நோக்கம் கொண்டிருக்கும் கருணைக் கடலான நாராயணனை நாம் ஸதா தியானிக்கக் கடவோம்.

[illegible] இப்பத்திரிகையின் வருஷ சந்தாவான ரூபாய் ஒன்றை முன்பணமாகச் [illegible]வோர்க்குக் கிடைக்கும் லாபங்களை இப்பத்திரிகையை முற்றிலும் [illegible]ப்பதால் அறிந்துகொள்ளலாம்.

2. தாய் தந்தையோடு [illegible]கள் புரிந்திடர் தாயனொரு சென்மச் சனி.

169826
600 006



"காலத்தின் பெருமையே பெருமை." காலம் கர்வத்தை யடக்குகிறது. விரோதத்தைப் போக்குகிறது. துன்பத்தை நீக்குகிறது. காலத்தைப் பற்றி ஆங்கிலக் கவிகள் அதிகமாய் வர்ணித்திருக்கிறார்கள். இன்றைக்கு அபராதம் செய்தவனை சிக்ஷிக்க வேண்டுமென்று நாம் கொள்ளும் தீர்மானம் காலம் செல்லச் செல்ல மலின மடைகிறது. உலகத்தில் தோன்றும் பொருள்களெல்லாம் காலத்தால் அழிந்துபோகின்றன. ஆதலின் எவ்விதமான பகையும், பொறாமையும், கோபமும் நீடித்திரா. கொடுங்கோலர்களான எத்தனையோ அரசர்கள் செய்த அக்கிரமங்களெல்லாம் காலத்தால் பறந்தன. காலத்தால் உத்தியோகம் தொலைந்து கர்வ புத்தி மாண்டு முன் போல் ஜனங்களை ஹிம்ஸிக்க முடியாமற் போகிறது. பால்யத்தில் பரம துஷ்டர்களாயிருந்தவர்கள் கிழப்பிராயத்தை யடைந்து நடப்பதற்கும் சக்தியற்றுக் கிடப்பதும் காலத்தாலே தான். ஆதலின் பொறுமை யென்னும் பூஷணத்தைக் கொண்டால் காலமானது ஸகல காரியங்களையும் நன்றாய் முடித்து விடும். நமது ஸாந்தமும், பகவத் பக்தியும், பொறுமையும் எல்லா நலனையும் நமக்குக் கொடுக்கும்.

***

"நினைக்க நினைக்கத் தித்திப் பெனது நினைவிற் கொடுக்குதே." அது எது? ஈச்வர நாமம். எல்லாக் காரியங்களும் பகவத் ஆக்ஞைப்படியே நடக்கின்றனவென்பதை உறுதியாய் நம்புவோர் அனைத்தும் அவன் செயல் என்று சொல்லி சாந்த சித்தர்களாயிருப்பர். எவ்வித கலகங்களிலும் தலையிட்டுக் கொள்ளார். தேன் துளியினை ஈ யொன்று மொய்த்தது. ஈயைப் பல்லி பிடித்தது. பல்லியைப் பூனை பிடித்தது. பூனையை நாய் கௌவிற்று. நாயை மனிதன் அடித்தான்—என்ற மதுபிந்து கலகப்படி உலகத்தில் ஒவ்வொருவருக்கும் சத்துரு உண்டு. தேன் துளியை நக்குகிறோமென்று ஸந்தோஷம் ஈக்கு இருந்ததேயன்றி பல்லி பிடிக்கப்போகிறதென்பதை அது பார்க்கவில்லை. பல்லி ஈயைப் பிடித்தோமென்று ஸந்தோஷத்தை யடைந்ததேயன்றி பூனையாகிய சத்துருவின் வரவைக் கவனிக்கவில்லை. பூனை பல்லியைத் தின்பதில் நோக்கம் கொண்டதே யன்றி நாயின் வருகையைக் கவனிக்கவில்லை. நாய் மனிதனுடைய வரவை யறியாமல் ஸந்தோஷித்துக் கொண்டிருந்தது. இப்படியே ஒவ்வொரு மனுஷ்யனும் பிறரை ஹிம்ஸிப்பதில் பிரீதி கொள்ளுகிறானேயன்றி தனக்கு நேரிடப் போகும் வருங்கால வினையையோ, எமவாதையையோ கவனிக்கிறதில்லை. இம் மறதி தான் துஷ்டனாவதற்குரிய காரணம்.

***

"நீடிய சுகமுளோர் நிலத்தி லில்லையே" என்றார் நீதிநூலார். எத்தனையோ கிராமங்களில் குட்டிச் சுவர்கள் இருக்கின்றன. எத்தனையோ நகரங்களில் பாழான அரண்மனைக ளிருக்கின்றன. நடுக்காட்டில் செங்கற் பொடிகளும் கற்றூண்களும் இருக்கின்றன. இவற்றின் விருத்தாந்தத்தைக் கேட்டால் பலர் குபேர ஸம்பத்துடன் வாழ்ந்த கதைகள் வெளிப்படும். பாழான அரண்மனைகளில் நவாபுகள் தங்களுடைய பத்னீ புத்திரர்களுடன் வஸித்து வந்ததாயும், பின்னர் ஆங்கிலேயரிடம் நகரம் பிடிபட்டது முதல் அவ்வரண்மனை பாழாகி வௌவால்களுக்கு வாஸஸ்தானமாயிற்றென்றும் ஜனங்கள் சொல்லக் கேட்போம். நடுக்காட்டில் நிற்கும் கற்றூண்களும், சரிந்து கிடக்கும் செங்கற்பொடிகளும் முன்காலத்தில் அங்கிருந்த கோட்டை

3. இரவி யெழுமுனமே யெழுந்து புனல் மூழ்குக.

கொத்தளங்களைத் தெரிவிக்கும். இப்படியே உலகத்தில் தோன்றும் பொருள்களெல்லாம் நசித்துப் போகின்றனவே யன்றி நிலைத்திருப்பதில்லை. ஆதலின், அவற்றால் நாம் அனுபவிக்கும் சுகமும் நிலையல்லவென்றேற் பட்டது. அநித்தியமாகிய இச்சுகங்களை விரும்பாமல் நித்யமான ஆத்மாநந்தத்தையே அனுபவிக்க வேண்டும். இதுதான் விவேகிகளின் கடமை. மற்றவர்கள் அழுகிய வஸ்துக்களில் நெளிந்துகொண்டிருக்கும் புழுக்களைப் போல் ஸம்ஸார சுகத்திலேயே அழுந்திக் கிடக்கின்றனர்.

"கோடி பொன்னுடையவரெனினுங் கோமுடி
சூடிய வேந்தரே யெனினுந் துன்பொடுங்
கூடிய வாழ்க்கைய ரன்றிக் கூறுங்கா
னீடிய சுகமுளோர் நிலத்தி னில்லையே."

***

"அவரவர் தன்மை யுணர்ந்து ஒழுகுதல் அழகு." உலகம் பலவிதம். ஒவ்வொருவர் ஸ்வபாவமும் ஒவ்வொரு மாதிரி. தமக்கையிடம் செய்யும் பிடிவாதத்தையும் தொந்தரையையும் அவள் கணவனிடத்திற் செய்ய இயலா. தமக்கையின் கோப வார்த்தை மறு நிமிஷத்தில் மாறிவிடும். க்ஷணமே தம்பி என்று அன்புடன் அழைக்கச் செய்யும். அவளது பர்த்தாவின் சினமோ பல நாளைக்கும் ஊன்றி நிற்கும். ஆதலின் இடத்திற்குத் தகுந்தபடி நடக்க வேண்டும். ஸமுத்திரத்தில் கட்டை மிதக்கிறது. இரும்பு அமிழ்கிறது. இதனால் ஸமுத்திரத்திற்கு மிதக்க வைக்கும் சக்தியும் உள்ளே யமிழ்த்தும் சக்தியும் உண்டென்பது நிச்சயம். இது உண்மையோ? ஆம். ஆயினும் கட்டைக்கு ஸமுத்திரத்தை யநுசரித்து மேலே மிதக்கும் நல்ல குணம் இருக்கிறது. அதனால் அது அமிழவில்லை. இரும்புக்கு அக்குணமில்லை. அதனால் அது மிதக்கவில்லை. ஆகவே, ஸமுத்திரத்தின் மீது குறை கூறுவதில் என்ன பிரயோஜனம்? இதைப்போலவே ஒருவருடைய குணமறிந்து நடவாதவர் நஷ்டத்தையும் குணமறிந்து நடப்பவர் லாபத்தையும் பெறுகின்றனர். பர்த்தாவை யநுசரித்த ஸ்திரீ க்ஷேமமடைகிறாள். அவனை எதிர்த்துக் கொண்ட ஸ்திரீ துன்புறுகிறாள். நஷ்டமடைந்தோர் கெட்ட அபிப்பிராயமும், லாபமோ சுகமோ அடைந்தோர் நல்ல அபிப்பிராயமும் கொள்வதியல்பு. உலகம் நன்மையும் தின்மையுமாகக் காணப்படுவது அவரவரது மனத்தின் இயல்புக் கேற்றபடியாம். உலகப் புகழ்ச்சி ஒருபோதும் நம்பத்தக்கதல்ல.

***

"ஈவிலாத தீவினைக ளெத்தனை செய்தனன் கொல்!" உலகில் ஈச்வர நாமத்தை மறந்து மனுஷ்யன் செய்யும் தீவினைச் செயல்கட்கு அளவும் உண்டோ? பிரக்ஞையை இழந்த மனிதன் சவத்துக் கொப்பாகிறான். மாயை வயப்பட்ட மனிதன் வீணாகிறான். சாந்தம் தயை முதலிய நற்குணங்களை யிழந்து எப்போதும் கோபமும் நிர்த்தாக்ஷண்யமு முள்ளவன் மனோதிருப்தி யில்லாத தரித்திரனாகிறான். கோடிக்கணக்கான பொருளிருப்பினும அஸந்துஷ்டியுள்ளவன் வறிஞனேயாம்.

***

"சக்தியிடம் ஸதா பக்தி செய்" என்று முதியோர்கள் உபதேசிக்கின்றனர். உலகத்தில் எவ்விதமான கர்மத்தைச் செய்யவேண்டிய போதிலும்,

4. காசினிதனிற் கற்பிலோங்கு பெண்டிர்க்கெலாம் கணவன் மேலே நினைவு



சக்தியின் கிருபை அவசியம். தான தர்மம் செய்வதற்கு சக்தியில்லை யென்பவரின் தாத்பர்யம் யாது? பொருளில்லை யென்பதன்றோ? ஆகவே சக்தியென்பது திரவியத்துக்கு அதிதேவதையான மகா லக்ஷ்மியைக் குறிக்கிறது. ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை ஆராதித்துச் செல்வத்தை யடைவதைவிட அவருடைய பத்நியாகிய லக்ஷ்மியைப் பூஜித்து அவளுடைய கடாக்ஷத்தைப் பெறுவது சுலபம். இதற்கு முக்கிய நியாயமொன்றுண்டு. மக்களிடம் தந்தையைவிட தாய்க்குத் தான் கருணை அதிகம். ஆகா! உலகத்தில் தாயின் பிரீதிக்கு ஸமானமான பிரீதி வேறுண்டோ? இல்லை. இம்மாதிரியே ஒரு விஷயத்தை வாதிக்கிறவன் தனக்கு சக்தியில்லை யென்று சொல்லி வாதத்தை நிறுத்திவிடுகிறான். இங்கு சக்தி யென்பது வித்தையைக் குறிக்கிறது. ஆதலின் சக்தி யென்னும் பதம் ஸரஸ்வதிக்குப் பொருந்தும். உலக மாதாவாகிய வாணியின் கிருபையில்லையேல் எல்லோரும் ஊமைகளாக விருக்கவேண்டும். எந்த வேலையும் முடியாது. இவ்விதமே ஒருவரை வெற்றி கொள்வதற்கு சக்தி அவசியம். இங்கு சக்தி யென்பது பலத்துக்கு அதிதேவதையான பார்வதியைக் குறிக்கிறது. ஸர்வமங்களா வென்னும் திருநாமம் கொண்ட லோகஜனநியாகிய உமையின் கிருபை எல்லோருக்கும் அவசியம். ஜகத்தில் தகப்பனில்லாப் பிள்ளையை விட தாயில்லாப் பிள்ளையின் கதி பரிதாபமானது. ஸம்ரக்ஷிப்பதில் தாய்க்கு ஸமமான பந்து யாருமில்லாததால் ஸர்வ லோக மாதாவாகிய சக்தியை ஸதா தியானிக்கக் கடவோம்.

---

தமிழில் இப்பொழுது நான்கு தினசரிப்பத்திரிகைகள் நடந்துவருகின்றன. நான்கும் நான்குவிதமாகவே இருக்கும். ஆனால் வர்த்தமானங்கள் நான்கிலும் ஒன்றே தான். அவைகள் எழுதப்படும் முறைகள் மட்டும் வெவ்வேறாக இருக்கும். இந்த நான்கிலும் முன்னதாகச் செய்திகளை அறிவிப்பது எந்தப் பத்திரிகை யென்பது முக்கிய கேள்வியாக நிற்கும். இதன்றி அவ்வப் பத்திரிகைகள் தமக்கென்று கொண்டுள்ள தனி அமைப்புகளும் தனிக் கருத்துகளும் பார்க்கத்தக்கவைகளே யாகும். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சுவையை யுணரலாம்.

### உத்தியோக நிர்ப்பந்தம்.

எவ்வளவுக்கெவ்வளவு சம்பளம் உயர்கிறதோ அந்த அளவுக்குத் தகுந்தபடி மனசாக்ஷியை விற்று விடவேண்டுமாம்! அதுமட்டுமா?—உடல்—பொருள் ஆவிகளையும் உத்தியோக தேவதைக்கு அர்ப்பணம் செய்யவேண்டுமாம்! இல்லாவிட்டாலோ அந்த ஸ்தானத்துக்கு வேறு ஒரு ஆள் தயார்!

---

5. நூல்கருதுஞ் செழுந்தமிழ்ப் புலவர்க்கு நுட்பமாங் கற்பனையின்மீது நினைவு.

ஆநந்த குணபோதினி
பிரபவ௵ ஆனி௴ 1உ

# தமிழ்ப்பாஷையும் தமிழ்ப்புலவர்களும்

படித்தோர் என்று பல பட்டப்பெயர்களைப் பெற்ற தமிழரில் அநேகர், ஒரு விஷயம் தமிழில் எழுதப்பட்டிருந்தால், அதைத் தாங்கள் எளிதில் அறியக்கூடவில்லையென்றும், அதே விஷயம் ஆங்கிலத்தில் எழுதியிருந்தால், அதைச் சுலபத்தில் தெரிந்து கொள்ளலாமென்றும் சொல்லுகிறார்கள். கற்றோர் கருத்தே இப்படியாகுமானால் மற்றோருக்குக் கேட்க வேண்டுமோ? பாடசாலை மாணவர்களிற் சிலர், தமிழ்ப் பாடத்தைப் படித்தால் தலைநோயுண்டாகிற தென்றும், நித்திரை வருகிறதென்றும் பரிகசிக்கின்றனர். தமிழ்மொழியில் எத்துணைப் பாண்டித்திய மிருப்பினும், "இங்கிலீஷ் தெரியாதா?" என்று வினவி, அக்குறைவையே ஒரு பெரிதாக மதித்து அன்னோரின் தமிழ்ப் பாஷாஞானத்தை அலக்ஷியம் செய்வோ ரநேகர். இதைவிட வெட்கக்கேடு வேறென்ன வேண்டும்? கற்றோரும் மற்றோரும் தங்கள் சுயபாஷையைப்பற்றி இவ்வண்ணமாக நினைத்து, இவ்வாறாக அதை நடத்தினால் அந்தப் பாஷை எப்படி வளரும்? நமது நாட்டினர் நமது தமிழ்ப் பாஷையை இப்படி அலக்ஷியம் செய்வது வெகு கொடுமை. தமிழாசிரியர்களின் பெருமையை அறியாததே இதற்குக் காரணம். அவர்களின் பெருமையை சாமான்ய ஜனங்கள் உணருதற்பொருட்டாக இங்கு சுருக்கி எழுதுகின்றோம். ஆதிகாலத்துத் தமிழ்ப்புலவர்களின் மாண்பினை யுணர்ந்த பின்னரேனும் தமிழ்மொழிக்குள்ள கௌரவத்தைப் பாராட்டி மேன்மைப் படுத்துவாராக.

அகஸ்தியர்:—இவர் ஒரு பெரிய முனிவர். இவர் நைமிசாரணிய முனிவர் சங்கத்திலொருவர். ஒரு காலத்தில் சங்கத்தாருக்கும் இவருக்கும் உண்டான தர்க்கத்தினால் சங்கத்தார் அகஸ்தியரைச் சங்கத்தினின்றும் விலக்கினார்கள். அவர்கள் இந்திரனு லியற்றப்பட்ட ஐந்திரமென்னும் வியாகரணத்தை (இலக்கண நூலை) அனுஸரித்து வந்தார்கள். அவர்களுக்கு விரோதமாக அகஸ்தியர் புதிதான ஒரு பாஷையைச் சுப்பிரமணியக் கடவுளிடம் கற்று, அதற்குத் "தமிழ்" என்ற பெயரை இடப்பெற்று, அதில் நைமிசாரணியத்தார் அனுஸரித்துவரும் ஐந்திர வியாகரணத்திற்கு மாறாக, "பேரகத்தியம்" "சிற்றகத்தியம்" என்ற இரண்டு இலக்கண நூல்களையும், பின்னும் தமிழ்ப் பாஷையின் ஒவ்வொரு வகுப்பிலும் அநேக காவியங்களையும் அமைத்துத் தமிழைச் சிறப்பித்தார். ஆனால் அவை இப்போது கிடைப்பதில்லை. இவருடைய தமிழிலக்கணம் 12,000 சூத்திரமுள்ளதாம். தொல்காப்பியத்தில் மேற்கோளாகக் கொடுத்திருக்கும் சிலவற்றைத் தவிர, மற்றைய சூத்திரங்களை

6. வேசிகட்குப் பொருள் மிகத்தரும் பிரபுக்கள்மேலே விடாத நினைவு.



நாம் கண்டோமில்லை. மத விஷயமாய் 100000-பாடல்களையும், வாதத்தில் 100000-பாடல்களையும், வைத்தியத்தில் 200000 பாடல்களையும், சோதிடத்தில் அநேகமாயிரம் பாடல்களையும் பாடினார். குணசேகர பாண்டியன் காலத்தில் அவ்வரசனால் நன்கு மதிக்கப்பட்டு, இவர் அவனுக்குக் குருவாக இருந்தார். சிலர் இவர் காலம் கி. மு. 1500-வருஷ மென்றும், சிலர் கி. மு. 900-வருஷமென்றும் சொல்லுகிறார்கள். இன்னுமிவர் பொதிய மலையில் இருக்கிறார் என்கிறார்கள். இவருக்கு சீஷர் பன்னிருவர். அவருள் சிலரை இங்கு குறிப்பிடுகிறோம்.

தோல்காப்பியர் அல்லது திரணதூமாக்கினி என்பவர் சிறந்தவர். அவர் பிராமண மரபில் ஜமதக்கினி வம்சத்தில் மதுரைக்குத் தென்பாலுள்ள தொல்காப்பியக் குடியில் பிறந்தவர். அகத்தியருடைய சீஷராக இருந்தும், குருவுக்கும் சீஷருக்கும் ஒரு விவாதமுண்டாகி, அதனால் அகத்திய சித்தாந்தத்திற்கு நேர்விரோதமான ஐந்திர விதியை யநுஸரித்து, தொல்காப்பியம் என்னும் சிறந்த இலக்கணத்தை இவர் இயற்றினார். அகத்திய சீஷருள் ஒருவரான அதங்கோட்டாசிரியர் தொல்காப்பியத்தைக் கடுமையாய்க் கண்டித்தார். ஆயினும் அவர் எடுத்த ஒவ்வொரு ஆக்ஷேபத்திற்கும் தொல்காப்பியர் தக்க சமாதானம் சொல்ல, இந்நூலை யாவரும் ஒப்புக்கொண்டனர். ஆனது பற்றி இது மேலாகி, பேரகத்தியமும் சிற்றகத்தியமும் வழக்கத்திற்கு வாராமல் மறைந்தன. இப்பொழுதுள்ள இலக்கணங்களுள் தொல்காப்பியமே வெகு புராதனமானது. இதில் 1276-சூத்திரங்களுண்டு. இத்தொல்காப்பியத்திற்கு நச்சினார்க்கினியம், இளம்பூரணம், சேனாவரையம் என்ற மூன்று உரையுண்டு.

பனம்பாரனார் :—இவர் அகத்தியருடைய பன்னிரண்டு சீஷருள் மற்றொருவர். இவர் பனம்பாரம் என்ற ஊரார். இவருடைய இயல்பான பெயரும், தாய் தந்தையர் வரலாறும், பிறந்த காலமும் ஒன்றும் தெரியவில்லை. இவருடைய கிரந்தங்களுள் தொல்காப்பியத்தின் பாயிரமும், பனம்பாரனார் சூத்திரம் என்ற ஒரு இலக்கண நூலும் மாத்திரம் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இவர் செய்த பல செய்யுட்களுள் ஒன்றும் கிடைக்கவில்லை.

திருமூலர் :—இவர் சாத்தனூரில் யாதவ மரபிலுதித்தவர். இவர் அகத்தியர் காலத்தவர். திருவாவடுதுறையில் துறவறம் பூண்டு சைவ சமயத்தைச் சிறக்கச் செய்தார். திருமூலர் வைத்தியவாகடம், திருமூலர் மந்திரம் என்ற இரண்டு நூல்களை இவர் செய்தனர். இந்த திருமூலர் மந்திரத்தில் சைவாகமங்களையும், மற்றுமுள்ள அநேக நுட்பமான சங்கதிகளையும் சொல்லியிருக்கிறார். இவர் 63-சிவனடியாரில் ஒருவர்.

தேரையர் :—இவர் அகத்தியர் சீஷருள் ஒருவர்; வைத்தியத்தில் அநேக கிரந்தங்கள் எழுதியிருக்கின்றார். ஆயுர்வேதத்தில் இவர் அடைந்த சாமர்த்தியத்தை, இவருடைய குரு கண்டு பலதடவைகளில் பொறாமைப்பட்டாரென்று ஒரு ஐதீகமுண்டு. ஆயினும் அது கட்டுக்கதை என்று தோன்றுகின்றது. இவர் செய்த நூல்கள், சிகாமணி வெண்பா, நாடிக்கோத்து, நோயனுகா விதி முதலாய்ப் பலவுண்டு.

7. மெய்யான யோகிக்கு காசிநதி மேநினைவு.

## சித்தர்கள்.

சித்தர்களுள் நவநாதசித்தர், 18-சித்தர் என இரண்டு வகுப்புண்டு நவநாதர்கள் ஆவார் :—

1. சத்திய நாதர்
2. சதோக நாதர்
3. ஆதி நாதர்
4. அநாதி நாதர்
5. வறளிநாதர்
6. மதங்க நாதர்
7. மச்சேந்திர நாதர்
8. கடேந்திர நாதர்
9. கோரக்க நாதர்

என ஒன்பது பேர்கள்.

இவர்களைப்பற்றிய பெயரைத் தவிர நமக்கு வேறொன்றும் தெரியாது. இவர்கள் 18-சித்தர்களுக்கு வாதம், வைத்தியம், ஞானம் முதலியவற்றை உபதேசித்தவர்கள். 18-சித்தர்கள் வாதம், வைத்தியம், ஞானம், மதம் இவ்விஷயமாய் அநேக கிரந்தங்களை எழுதியிருக்கிறார்கள். இவர்களுள் சிலர் சிவபிரானையும், சிலர் பொதுவாகக் கடவுளையும் முக்கிய தெய்வமாக மதித்து, கடவுள் ஒருவரே என்னும் மதக்கோட்பாட்டைக் கைக்கொண்டு, அவ்வாறாகவே எழுதியு மிருக்கிறார்கள்.

**கொங்கணர்** :—இவர் 18-சித்தரில் ஒருவர். பெயரைக்கொண்டு இவர் கொங்கு நாட்டாரென்று எண்ணுகிறார்கள். பொதிய மலையில் அகத்தியரிடம் இவர் பல கலைகளையும் கற்றாரென்று சிலரும், இவர் திருவள்ளுவர் காலத்தவர் என்று சிலரும் சொல்லுகின்றனர். இவர் செய்த பல நூல்களுள், கொங்கணர் ஞானம், கடைக் காண்டம், துணவாகடம் இவை இப்போது வழக்கத்திலிருக்கின்றன.

**போகர்** :—இவரும் 18-சித்தரில் சேர்ந்தவர். இவர் திருநெல்வேலி ஜில்லா சதுரகிரி சிவகிரி முதலிய மலைகளில் வசித்தவரென்று தோன்றுகிறது. இவர் சுப்பிரமணிய உபாசகர். இவருடைய கவனசக்தியும் வைத்தியத் திறமையும் அதிகம். போகர் யோக மார்க்கம், போகர் சாக்துவைப்பு, போகர் எழுநூறு, போகர் திருமந்திரம், போகர் நிகண்டு முதலியவைகளை இவர் இயற்றியுள்ளார்.

**இடைக்காடர்** :—இவரும் மேற்சொன்ன சித்தர்களில் ஒருவர். இவர் செய்த பல நூல்களுள் சில இப்போதும் வழக்கத்திலுள. சாதியிலவர் யாதவர். பொதியமலைச்சாரலில் மாடு மேய்த்திருக்க, ஒரு நாள் நவநாதரில் ஒருவர் இவருக்கெதிரே தோன்றி, கொஞ்சம் ஆவின்பால் கேட்டனர். அதை அவருக்குக் கொடுக்கவே, அவர் அருள்கூர்ந்து, இவருக்கு உபதேசித்து ஞானப்பாலூட்டினர். அது முதல் ஞானோதய முண்டாகி இவர் பல பாடல்கள் பாடுவதானார். அவற்றுள் ஒன்றுக்கு இடைக்காட்டுச் சித்தர் பாடல் என்று பெயர்.

**கோரக்கர்** :—இவரும் ஒரு சித்தர். இவருக்கும் மற்றச் சித்தர்கள் போலவே வாதம் வைத்தியம் கவனம் இவ்விஷயங்களில் வெகுதிறமையுண்டு. கோரக்கர் வைப்பு நூறு செய்யுட்களடங்கிய நூல் ஒன்று இவரால் நமக்குக் கிடைத்திருக்கிறது. கஞ்சாவை நமது நாட்டு வைத்தியத்தில் இவர் தாம் முதல் முதல் பிரயோகித்தவர் ; அது பற்றி அந்த மூலிகைக்கு கோரக்கர் மூலி என்ற ஒரு காரணப் பெயர் கிடைத்தது.

---

8. வேந்தர்க்கு நீதி நினைவு.



**மச்சமுனி** :—இவர் அகத்தியர் காலத்தவர். இவருக்குக் கவனசக்தியுண்டு. இவர் பெரிய ஞானி. வாத நிகண்டு கூட இவர் ஒன்று செய்திருக்கிறார்.

அடியில்வரும் பாட்டால் 18-சித்தர்களின் பெயர் நன்றாய் விளங்கும்:—

பார்த்திடவே நந்தீசர் மூலத்தீசர்
பண்பான அகத்தீசர் சட்ட நாதர்
காத்திடவே இடைக்காடர் சண்டிகேசர்
கனராமர் போகர்சிவ வாக்யசித்தர்
சேர்த்திடவே கோரக்கர் பிண்ணாக்கீசர்
சிறப்பான மச்சமுனி பூனைக் கண்ணர்
வார்த்திடவே யூகிமுனி கொங்கணர்வான்மீகி
வராஷியார் தேரையர் காப்புத்தானே.

**ஔவையார்** :—தமிழில் ஒருமிகச் சிறந்தகவி. ஔவை என்றால் கிழவி என்று அருத்தம். இவர் சரிதம் யாவருக்கும் தெரிந்தது. இவருடைய இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. இவர் திருவள்ளுவரின் தமக்கையாருள் ஒருவர். திரிச்சிராப்பள்ளிக்கடுத்த உறையூர் சத்திரத்தில் பிறந்தவர். தாய் தகப்பன்மார் தனியேவிட்டுப்போன இக்குழந்தையை உறையூர்ப்பாணன் ஒருவன் எடுத்து வளர்த்துத் தகுந்த படிப்பு முதலியவற்றைச் சொல்லி வைத்து, வயது வந்தவுடன் தன் இனத்தாரில் ஒருவனுக்கு விவாகம் செய்து கொடுக்கக் கருதினான். ஔவையோ விவாகம் செய்துகொள்ள விரும்பவேயில்லை; ஆயினும் அவரது கருத்துக்கு மாறாகவே கல்யாணம் செய்விக்கக் கருதி, பந்து மித்திரர்கள் யாவரையுங்கூட்டி விவாகம் நடத்தும்படி நிச்சயம் செய்தான். பிள்ளை வீட்டுக்காரர் கொண்டுவந்த சேலையை ஔவை கையில் கொடுத்து உள்ளேபோய் அணிந்துவரச் சொல்ல, அங்ஙனமே ஔவையும் செய்தார். ஆயினும் அதிரூப லாவண்யமுள்ள சிறுமகளாயிருந்தவர் மணக்கோலச் சேலையை யணிந்து வெளியே வரும்போது ஒரு கோலையூன்றி, தலை நரைத்துத் தாடையொட்டித் தள்ளாத கிழவி போலக் கைகால்கள் நடுக்கமுற்றுப் பேச்சில் கிழவர் பேசுவதுபோலக் குழறிக்கொண்டுவந்தார். மணம்புரிய வந்தோனும் மற்றோரும் அவரைப்பார்த்து, இதென்ன கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதென்று சிலரும், பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததென்று சிலரும், கூத்துப்பார்க்கப்போன இடத்தில் பேய்பிடித்ததே என்று சிலருமாக பற்பலவாய்ச் சொல்லி ஆச்சரியப்பட்டு விவாகம் செய்யாமல் எழுந்துபோயினர். இதனாலேயே இவர் தெய்வாம்ஸமென்பது விளங்கும். பிறகு இவர் தம் வாழ்நாளெல்லாம் கல்யாணமில்லாமலே இருந்து கழித்தார்.

விவாகம் செய்துகொள்வது நன்மை என்று பிறருக்குச் சொன்ன ஔவை,தான் அதை மறுத்திருந்தது அதிசயம். திருவள்ளுவர் அறம்,பொருள், இன்பம் ஆகிய இம்மூன்றைப்பற்றி 1330-குறளில் சொல்லி யிருக்கிறாரே யன்றி, மோக்ஷத்தைப்பற்றிச் சொல்லவில்லை. மேற்படி குறளைக்கேட்ட ஔவை,

“ஈதலறந் தீவினைவிட் டீட்டல் பொருளெஞ் ஞான்றுங்
காதலிருவர் கருத்தொத்து—ஆதரவு
பட்டதேயின்பம் பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு”

---

9. கூடிடாத் திருடர்க்கிராவேளை கன்னமாங்கோல் வைத்து நுழையநினைவு.

என்று அம்மூன்றினுடனே மோட்சத்தையும் சேர்த்துப் பாடினுர்.

ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, கல்வியொழுக்கம், அசதிக் கோவை, நன்னூற் கோவை, நான்மணிக்கோவை, அருந்தமிழ் மாலை, தரிசனப்பத்து, ஞானக்குறள், பந்தனந்தாதி, வைத்தியநிகண்டு, விநயகாகவல் இவை முதலான பல நூல்கள் இவர் செய்திருக்கிறார்.

திவாகரன்:—சூரியனுடைய வரப்பிரசாதத்தா லுதித்தோன். திவாகரம் என்ற ஆதிநிகண்டு இவர் செய்தது.

பிங்கலன் :—இவரும் ஒரு நிகண்டு செய்திருக்கிறார். அதற்குப் பிங்கலை என்று பெயர். இவ்விரண்டையும் அநுஸரித்து மண்டல புருஷன் நிகண்டு செய்தார்.

சேரமான்பெருமாள் :—இவர் சேரதேச அரசரில் ஒருவர். சிம்ஹாஸனமேறினவுடனே ராச்சியத்தை நன்றாய்ப் பரிபாலித்துக் கவிஞர்களுக்கு வெகு பரிசு கொடுத்துவந்தார். அவர் காலத்தை விசேஷமாக சிவஸ்தலங்களைத் தரிசிப்பதில் கழித்துவந்தார். மும்மணிக் கோவை, கைலாசவுலா, பொன் வண்ணத்தந்தாதி முதலியவைகள் இவரால் செய்யப்பட்டன. ஔவைக்கும், சுந்தர மூர்த்தி நாயனுருக்கும் இவருக்கும் வெகு சிநேகம். இம்மூவரும் கைலாசம் போய் வந்தவர்கள். இவர் பாடிய மேல்சொன்ன மூன்றும் பதினோராந்திருமுறையில் சேர்ந்திருக்கின்றன. இவர் 63 சிவனடியாரில் ஒருவர்.

இவர்கள் மாத்திரமேயன்றிப் பின்னும் பல புலவர்கள் வைஷ்ணவ மதோத்தாரகர்களாகவும், சைவ சமயோத்தாரர்களாகவும் தோன்றித் தமிழ்ப் பாஷையில் தமக்கு இணை எவருமில்லை யென்னும்படியான தேர்ச்சிபெற்று, லோகோபகாரமாக ஞானமார்க்கத்தை வெளியிடுவதாய் நீதியும் ஈசுவர ஸ்தோத்திரமுமான பற்பல நூல்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றையெல்லாம் இங்கு விவரிக்க இடமின்மையால் இவ்வளவில் நிறுத்துகின்றோம். இவற்றையெல்லா முணர்ந்து இனிமேலாகிலும் நம்மவர்கள் தமிழ்ப்பாஷையினிடத்து உண்மையான அன்புகொண்டு ஆதரித்தும், அதிலுள்ள அருமை பெருமைகளை வெளியிடுவோரை அபிமானித்து உபகரித்தும் தங்களின் தமிழ்நாட்டிற்கு நன்மை விளைப்பார்களென்று எதிர்பார்க்கின்றோம். "யாமறிந்த மொழிதனிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்குங் காணோம்" என்றார் நமது பாரதியார்.

**உடையாத சிலேட்டு !**

பழய கற்பலகைச் சிலேட்டே மேல். அதில்தான் எழுத்துகள் நன்ருகத் தெரியும். இரும்புத்தகட்டில் வர்ணம் பூசிய சிலேட்டு பழயதாய்விடின் எழுத்துகள் நன்குதெரியா. இன்னும் அதில் துருப்பிடித்துவிட்டாலோ குப்பையில் எறியவேண்டியதே. புதுப் பொருளேல்லாம் மோசமே !

10. குணமொடு பழகாத மடையர்க்கு வம்புவாய்க்கொண்டு திரிகிறது நினை

# சென்றமாதம்

**இந்தியாவின் உண்மை நிலை.**

பிரிட்டிஷாரின் ஆளுகையில் சிலர் செல்வவான்களாயினர். அவர்கள் முக்கியமாய் உத்தியோகஸ்தர்களும் வக்கீல்களும் சில வியாபாரிகளுமேயன்றி மற்ற வகையினரல்லர். கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படும் பெரிய உத்தியோகங்களை யடைந்து ஏழைகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு இலஞ்சம் வாங்குதல் என்னும் அநியாய வழியால் பொருளைச் சம்பாதித்துத் தனவான்களாகிய கனவான்களும் சிலருளர். வாதி பிரதிவாதிகள் எனும் கக்ஷிக்காரர்களுக்குத் தைரியம் கூறி அவர்களிடம் பணம் பெற்று ஐச்வரிய ஸம்பன்னர்களாய் வாழும் வக்கீல்களும் பலருளர். அன்னிய தேசப் பொருள்களை விற்று செல்வம் படைத்த வியாபாரிகள் மூன்றுவதாவர். இவர்கள் நீங்கலாக மற்ற வகையினரெல்லாம் ஏழைகள் தாம். மேலேகூறிய உத்தியோகஸ்தர்களும் வக்கீல்களும் தேசத்திலுள்ள விளைபொருள்களை விழுங்கும் கடமையைக் கொண்டவர்களே யன்றி விர்த்தி செய்யும் தொழிலையுடையவர்களல்லர். பயிரிடும் குடிகள் சமைப்பவர்களாயும், பணக்காரர்களானமேற்சொல்லியவர்கள் போஜனம்பண்ணும் பாக்கியவான்களாகிய எஜமானர்களாயும் ஏற்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தியாவில் வறுமையென்னும் பிணியால் வாதைப்படுவோர் வியவஸாயிகளே. 100-க்குத் 90-பேர்கள் உழுது பயிரிடுங் குடிகள். அவர்கட்கு வியவஸாயத்தைத் தவிர வேறு தொழில் தெரியாது. தெரிந்தாலும் பயன்படாது. ஆகவே அவ்விவஸாயிகள் கஷ்டமின்றிச் சுகமாய் வாழ்ந்தால்மட்டும் இந்தியாவில் வறுமையில்லை யென்னலாம். தனவந்தர்கள் கொடுக்கும் வரியாலும், நூதனமாய்விதிக்கப்படும் வரியாலும் பொக்கிஷம் நிறைவதைப் பார்த்துஇந்தியர்களின் நிலைமை உயர்ந்ததென்று உரைப்பதுஅர்த்தமற்ற சொல்லாகும்.

***

தமிழ்ப் பத்திரிகைகளின்நிலைமை

**தமிழ்ப்பத்திரிகைகளின் பரிதாபஸ்திதி.**

மிக்க பரிதாபகரமான ஸ்திதியில் இருக்கின்றது. அநேக பத்திரிகைகள் அவற்றின் ஆசிரியர்களது கண் முன்பாகவே நின்று போகின்றன. "ஸ்ரீவாணீவிலாஸினி", "வித்யாவிஹாரிணி" போன்ற உத்தம பத்திரிகைகள் பல நின்று போயினமை எவ்வளவோ வருந்தத்தக்கது. மகா சிறப்பு பொருந்தி அநுபவ மணியாய்த் தமிழ் நாடெங்கணும் புகழ் வாய்ந்த "மஹாவிகட தூதன்" வாரப் பத்திரிகையிலிருந்து மாதப் பத்திரிகையாகி வெகு கஷ்டத்திலிருக்கிறது. பத்திராசிரியர்கள் எவ்வளவோ பிரயாஸைப்பட்டு நடத்தியபோதிலும் அவர்களின் காலத்திற்குப் பிறகு அது நடைபெறுவது அபூர்வமாகின்றது. ஸ்ரீமான் அ. மாதவய்யர் பி. ஏ. அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட "பஞ்சாமிர்தம்" என்ற உன்னதயான மாதஸஞ்சிகை அவருடன் மறைந்தது. திரிச்சியில் "நச்சி

11. மாசிலா நின்னன்பர் பேசாத மௌனமே வாழ்வுபெற நினைவென்பர்காண்

ஞர்க்கினியன்" என்ற பத்திரிகையை அதன் ஆசிரியர் வெகு நஷ்டத்துடனும் கஷ்டத்துடனும் நடத்தினர். வியாதிப்படுக்கையில் பேசவும் சக்தியற்றுக்கிடந்த நிலையிலும் பத்திரிகையைத் தவருது பிரசுரம் செய்துவந்தார். ஆயினும் என்ன, அவர் கண்மூடவே பத்திரிகையும் நின்றுபோகநேர்ந்தது. இதுகொடுமையிலும் கொடுமை. தமிழ்ப் பத்திரிகைகள் அவற்றின் ஆசிரியர்கட்குப் பிறகும் நடைபெறும் நற்காலம் என்று வருமோ ? ஆசிரியர்களின் காலம் வரையில் நடந்தால் அதுவே பெரிய காரியம் என்று நினைக்கும்படியான விதமாகவும் தற்போதைய நிலை இருக்கின்றது.

ஃ

**விதவா விவாகம்**

இங்கிலாந்தில் புருஷனை யிழந்த ஸ்திரீகள் மறுவிவாகம் செய்து கொள்ளும் ஸம்பிரதாயமுண்டு. ஒரு ஸ்திரீ மூன்று ஆடவர்களை அடுத்தடுத்துவிவாகம் புரிந்து அத்தனை பேர்களையும் எமன் கையில் ஒப்புவித்தாள். ஒவ்வொரு கணவனுக்கும் ஒவ்வொரு கல்லறை கட்டி அடிக்கடி அக்கல்லரைகளின்மீது புஷ்பங்களைச் சொரிந்து வந்தாள். ஒரு தடவை தன் பால்ய ஸ்நேகித னொருவனை யழைத்து வந்து அக்கல்லறைகளைக் காட்டினள். அப்போது அவனை நோக்கி—" நீயும் என்னையே விவாகம் செய்திருந்தால் இம்மூன்றில் ஒரு இடம் உன்னுடைய தாயிருக்கும் " என்றாள். அதற்கு அவன் "நல்ல வேளையாய் அந்த அதிர்ஷ்டம் எனக்கில்லாமற் போனதற்காகக் கர்த்தரைத் துதிக்கிறேன் " என்றான்.

***

**கோபால-நேசரத்தினம்**

யாழ்ப்பாணத்தில் சென்ற 38-வருட காலமாய் மிகு பிரக்யாதியுடனும் நடைபெற்றிலங்கும்வாரமிருமுறைப் பிரசுரமாகிய " இந்து சாதனம் " என்னும் சிறந்த பத்திரிகையில் "நேச ரத்தினம்" என்ெருரு கதை பல மாதங்களாகத் தொடர்ச்சியாய்ப் பிரசுரிக்கப் பெற்று மிகு திவ்யமாகமுடிவுற்றுளது. கதா நாயகியான நேசரத்தினம் ஒரு விதவை. அவளது தந்தை கிறிஸ்துமத போதகர். முன்பு ஹிந்து சமயத்திலிருந்தவர். கதா நாயகி கோபாலன் என்ற ஹிந்து வாலிபனெருவனைக் காதலிக்கிறாள். தந்தையோ தமது சமயத்திற்கேற்ப ஒரு கிறிஸ்தவ வாலிபனுக்கு அவளை மணம் செய்விக்க முயல்கிறார். கதா நாயகியின் பிடிவாதத்தால் அது நிறை வேருது போக, கடைசியில் அவள் பிரியப்படி கோபாலனையே மணக்கத் தந்தை சம்மதித்துவிட நேர்கிறது. கதாநாயக நாயகிகள் இருவர்தம் மதமும் வெவ்வேறு. ஆயினும் பந்துக்கள் அவ்வேறுபாட்டினை ஒரு பிரமாதமாகக் கருதாது பிராயச்சித்தத்தால் கதாநாயகியை ஹிந்து மதத்தில் சேர்ப்பித்துக் கொண்டு கோபாலனுக்கு அவளை விவாகம் செய்விக்கின்றனர். ஒரு கிறிஸ்துமதபோதகரின் பெண் ஒரு ஹிந்து வாலிபனை மணப்பதெனில் அது பெரும் பழிப்பாகுமென்று பாதிரியார் சினந்து, கதா நாயகியின் தந்தையை மதபோதக வேலையை விட்டு விலக்கி விடுகின்றார். எத்தனையோ வருடகாலமாய் அநேகரைக் கிறிஸ்துவத்திற் சேர்த்து உழைத்ததற்குப் பயன் இதுதானோவென்று கதாநாயகியின் தந்தை வெறுப்புற்று

12. ஏற்றபல சாத்திரம் கற்ருலு மெய்ஞ்ஞான மில்லாத கல்வி என்ன ?



அவரும் ஹிந்து சமயத்தில் சேர்ந்து விடுகின்றார். கதை வாசிப்பதற்கு வெகு உற்சாகமா யிருக்கின்றது. இவ்வளவிலும் ஒரு பெரிய விவாதத்துக்குரிய விஷயம் எவராலும் பிரஸ்தாபிக்கப் படாமலே, அது ஸர்வ சாதாரணமாய் எங்கும் நடைபெறுவதுபோலவும் சாமான்யமாய்க் கதையின் நெடுகக் காட்டப்பட்டுள்ளது. அதாவது கதாநாயகி "கன்யா விதந்து" என்கிற பாகம்தான். ஒரு விதவையான மங்கையை விவாகம் செய்யலாமாவென்று எவரும் தடுக்கவேயில்லை. கதையின் இறுதி வரையும் அந்த விஷயத்தையே எவரும் கவனிக்கக் காணும். விதவா விவாகம் சாதாரணமான விவாகம் போல் சகஜமாக நடந்தேறி வரும் மாதிரியில் கதை மிகு உன்னதமாய் ஸமத்காரமாகக் கற்பிதம் செய்யப்பட்டுள்ளது. விதவா விவாகத்தை ஆதரிக்கும் முறை நன்கு அமைந்துள்ளது. இது தனிப்புஸ்தக ரூபமாக அச்சிடப் படுவதால், இச்சிறந்த கதையை விரும்புவோர் " இந்து சாதனம் " பத்திராதிபர் யாழ்ப்பாணம் சிலோன்—என்கிற விலாசத்துக்கு எழுதிக் கொண்டால், அச்சிட்டு முடிந்ததும் வி-பி-யில் பெற்றுக் கொள்ளலாம். இவ்வித கதைகள் நாட்டிற்கு எவ்வளவோ பயன் நல்கவல்லது. இது கௌரவமான காதற்கதையாகும்.

***

**முனிசிபல் உத்தியோகம்.**

" ஓவன்ஹு " என்பவர் முனிசிபாலிட்டியில் சேர்மஹைஇருக்கையில் சிலர் அங்கு உத்தியோக நியமனம் பெறுகிறார்கள். பிறகு "ஓவன்ஹு" வின் காலம் முடிந்ததும், அவருக்குப் பதிலாக "ஊவன்ஹு" என்பவர் சேர்மன் பதவிக்கு வருகிறார். வந்ததும் முன்பு " ஓவன்ஹு" வேலையி லமர்த்தியவர்களை இந்த " ஊவன்ஹு " வாகிய புது சேர்மன் தமக்குப்பிடிக்கவில்லை யென்று விலக்கி விடுகிறார். எனவே, முனிசிபாலிடியில் உத்தியோகம் செய்வது அவ்வப்போது புதிது புதிதாய் உதயமாகி அஸ்தமிக்கின்றவர்களான சேர்மன்களின் அநுக்கிரகத்தைப் பொறுத்ததாயுள்ளதுபோலும் !

***

**சென்னையில் விபசார மனைகள்.**

ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷ்மியம்மாள் சென்னையிலுள்ள விபசார விருத்தியைப்பற்றியும், விபசார விடுதிகளைப் பற்றியும் கண்டனம் செய்து பத்திரிகைகளில் ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார். விபசரிக்கும் ஸ்திரீயை ஸமூகம் அழுத்தமாகக் கண்டித்துவிட்டு அதற்குத்துணைக்காரணமாக இருந்த ஆடவனின் செயலை வெறுக்காமல் கண்ணை மூடிக்கொள்கிறது என்றும் குறிப்பிடுகின்ருர். உள்ளுகுள் ஸமூகத்தை இவ்வாறு பல தவறுகளாலும் அழுகச் செய்துகொண்டு மேலுக்குமட்டும் தேசம் தேசம் என்று வெளிப்பேச்சு பேசுங்காலமாய்த் தற்போதைய நிலை உள்ளது. " இந்த வீடு வாடகைக்கு விடப்படும்—குடித்தனக்காரருக்கு இல்லை" —என்று பஹிரங்கமாய் விளம்பர எழுத்துகள் சென்னையில் சில வீடுகளில் காணப்படுகின்றன. அதாவது விபசரிப்போர்க்குமட்டும் அவ்வீடு வாடகைக்கெனப் பொருள்படும். மாமா, மாமா வெனப் பகிரங்கமாகக் கை காட்டி அழைத்தலும், நடுநிசியாகில் இது இன்னும் நெருக்கடியிலாகிவிடுவதும் சென்னையில் சாதாரண சம்பவம். இவற்றை யுடனே பரிகரிக்க மார்க்க மில்லா

13. இவ்வுலகிலே பிறந்திட்ட பின் கீர்த்திதான் இல்லாத சாவதென்ன ?

விடினும், அநேக வருஷங்கட்குமுன்பு செய்திருந்ததுபோல் விபசார வநிதைகள் யாவரும் வாரம் ஒரு முறை ஆஸ்பத்திரிக்கு வரவேண்டுமெனக் கண்டிதமான விதி யமைப்பது உத்தமமாகும். நாடகத்தில் சிறுமிகளைச் சேர்ப்பதும் கடைசியில் விபசாரத்துக்கு மார்க்கமாகவே முடிவதால் அதையும் தடுக்கவேண்டும். இதற்காகமுற்பட்டுச் செய்வதுயார் என்பது கேள்வி.

* * *

**சென்னையில் தொழிலாளர்கள் சுடப்பட்டனர்.**

**நமது நாட்டிலேயே நமது ஜனநிலை!**

தென் ஆப்பிரிக்காவில் ஒரு இந்தியரை ஆடாக மதித்து ஏதோ ஒரு குற்றத்துக்காகக் காதை யறுத்தெறிந்த கதை இந்த சமயம் நமது ஞாபகத்துக்கு வருகிறது. நமது ஜன்மபூமியிலேயே நமக்கு மதிப்பு இவ்வளவிலிருக்கிறது. சுட்டாலுங் கூட மறுபடியும் அங்குதானே போகவேண்டியுள்ள விதிவசத்தை நாம் மாற்றிக்கொள்வது எந்நாளோ!

* * *

**ஆலயங்களில் பிராமணர்களுக்குள்ள சமத்வத்தை**

**ஆலயப் பிரவேசப் பிரசாரம்.**

தைத்தாழும் விரும்பி அதற்கான ஒரு பிரசாரத்தை ஸ்ரீமான் ஜெ. என். இராமநாதன் கைக்கொண்டிருக்கின்றார். அவர் மாயவரம் கோயிலுக்குள் பிரவேசித்ததைப் பற்றிப் பத்திரிகைகளில் பெரிய முழக்கம்! ஸ்ரீரங்கம் திருவானைக்கா கோயில்களில் ஆதித்திராவிடர்களுடன் 14-5-27-ல் அவர் உட்புகமுயல்கையில், 144-வது பிரிவுப்படி அதிகாரிகளால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி அவர் தடைபடுத்தப்பட்டார். எப்படியோ நாட்டில் ஒரு கிளர்ச்சி! மனிதர்முன்பு ஆக்ரகப்படும் உள்ளம் பகவானைக் கண்டதும் பணிந்த தன்மையாதல் மிகு விசித்திரம்.

* * *

**வெளியேற்றப்பட்ட வங்க தேசசிரேஷ்டரான**

**சுபாஷ் பாபுவின் விடுதலை.**

சுபாஷ் சந்திர போஸ் எனும்புகழ் தோலுமான பின்னர் 16-5-27-ல் கல்கத்தாவில் விடுவிக்கப் பெற்றார். அவர் ஆதியிலேயே இவ்விதம் தேசம் ஒட்டி உலர்ந்து ஒரு அடி எடுத்து வைக்கவும் திறனற்றிருந்தால் அவர் இவ்வளவு கஷ்டப்படவேண்டியதாய் இருந்திராதுபோலும்! 'லோகப் பிரவித்தி' என்பது நீங்காத தொல்லையையும் அபாயத்தையும் தரவல்லதான ஒரு தீய வஸ்துவாகவும் சில சமயங்களில் மாறிவிடுகின்றது.

---

விதவா விவாக சபைத்தலைவர் ஒருவர் தமது பந்து ஜனங்கள் ஒன்று கூடியிருந்த சமயம் விதவைகளுக்கு விவாகம் செய்யவேண்டுமென்று பிரஸ்தாபித்தார். சிலர் மறுத்தனர். அதற்கு அவர் சமாதானம் கூறினர். சிலர் அதைச் சரியென்று ஒப்பினர்.. சிலர் மௌனமாகக் கேட்டுக்கொண்டுமட்டுமிருந்தனர். சிலர் மறைவில் தூற்றினர். இதற்குள் போஜனம் சித்தமாயிற்றென்று சொல்லவும் யாவரும் அவ்விஷயத்தையே அடியுடன் மறந்து எழுந்து இலையில் போய் உட்கார்ந்து கொண்டனர். விதவா விவாகப் பிரஸ்தாபமும் அத்துடன் பூர்த்திபெற்றது.

---

14. போற்றவரு புண்ணியம் பாவம் பகுக்காத புல்லருக்கிதமு மென்ன?




## இல்லற இரகசியம்

[ஸ்ரீமான் ஆ. வ. பதுமநாப பிள்ளை அவர்கள் இயற்றியது. விலை அணா 4.]

மனிதப் பிறவியின் மாண்பு, நிலையாமை, பரோபகாரம், இல்லறம், இல்லற ரகசியம், காமத்தின் இழிவு, உண்மைக் காதலின் உயர்வு, குறைவற்ற செல்வம், வாயு, உள்ளத்தூய்மை என்ற தலைப்புகளின்கீழ் இல்லறத்துக்குரிய விஷயங்கள் காணப்படுகின்றன. இதிலுள்ள பிழைகளை மறுபதிப்பில் திருத்துவது அவசியம். ஆசிரியரின் முதல் நூல் இதுவே யாதலின் எங்ஙனமும் அபிமானித்தல் நலம்.

* * *

## இந்திய தேசாபிமானிகளின் உபன்யாச
## செந்தமிழ்த் திலகம்

[இது இரண்டாம் பாகம். விலை அணா 6. ஸ்ரீமான் M.N. முத்துக்குமாரசாமிப் பாவலரவர்கள் இயற்றியது.]

ஸ்ரீமான் டாக்டர் நாயுடுகாரு, ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை இவர்களின் படங்கள் அடங்கியுள்ளன. இந்நூலாசிரியரின் படமும் காணப்படுகின்றது. இந்திய தேசபக்தர்களின்மீது கீர்த்தனை ரூபமான பாடல்கள், கும்மி முதலியவை அடங்கியுள்ளன. வாசிக்க இன்பமாயுள்ளது.

* * *

## அரிச்சந்திரா

[ஒரு தமிழ் நாடகம். நாடகாசிரியர் ஸ்ரீமான் M. N. முத்துக்குமாரசாமிப் பாவலர் அவர்கள் இயற்றியது. விலை அணா 12.]

தமிழ் நாடு செய்த நற்றவப்பயனாய்த் தோன்றிச் சில காலத்திற்குள் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்னுமாறு பிரக்யாதி வகித்த ஸ்ரீமான் ஜி. எஸ். முனுசாமி நாயுடுவின் காலத்தில் அவரால் நடிக்கப்பட்டுவந்த அரிச்சந்திர நாடகத்தில் வழங்கிய பாடல்களின் அமைப்பைத் தழுவியும், அவற்றினை இயன்றளவு ஒன்று சேர்த்தும் இந்நாடகம் ஆக்கப்பெற்றுளது. நாடகம் படிப்பதற்கு மிக்க நன்றாயுள்ளது. வசனரூபமாகவும் பாடல்களாகவும் இது புனையப்பெற்று நன்கு அமைந்துள்ளது. யாவரும் வாசித்தற்கேற்றது.

☞ இப்புஸ்தகங்கள் "ஆநந்த குணபோதினி" ஆபீஸில் கிடைக்கும்.

"ஆளுந் திறன் கெட்டு
அழகிய இல்லாள் படைத்தார்க்கு—
நாளும் துயர்படிந்திடும் ஞாலத்தில்."

---

15. பொருளீகை யில்லாத லோபிமேற் கவிதைபகர் புலமையாற் கனிசமென்ன?

# க ல் ய ா னை

வலிமையில் யானைக்கு இரண்டாவதான மிருகம் கல்யானை தான். அது கொஞ்சம் குறைய யானை அவ்வளவு பரிமாணமுள்ளது. அது ஏறக்குறைய பன்னிரண்டடி நீளமும் ஆறேழடி உயரமும் உடையது. அதன் கால்கள் குட்டையாயிருக்கும். அதின் தலையில் நாசியினின்று முளைத்த கொம்பொன்று உண்டு. அதன் மேலுதடு நீண்டு கூராயிருப்பதனால் அதன் இரையைக் கும்பலாய்ச்சேர்த்து வாயில் போட்டுக் கொள்ளப் பக்குவமா யிருக்கின்றது. அதன் உடம்பில் உரோமக் கவர்ச்சியில்லாமல் தோல்கள் மாத்திரம் மடிந்து மடிந்து தொங்குகின்றன. அந்த மடிப்புகளுள் தோளண்டையும், வாலண்டையும் இருக்கிற இரண்டு மடிப்புகள் மிகவும் முக்கியமானவை. அதின் தோல் கபில நிறமுள்ளது. அது அதிக கூர்மையுள்ள கத்திபோலிருக்கும். அதின் கொம்பானது ஒவ்வொன்றுக்கு மூன்றடிக்கு அதிகமாயும் நீண்டிருக்கும். அது அதிக உரப்பான எலும்பினின்று உண்டாகின்றது. இப்படிப்பட்ட ஈட்டிபோன்ற சிறந்த ஆயுதம் அதற்கிருக்கின்றமையால் அது சிங்கம் புலி முதலியவைகளைக்கூட லக்ஷியம் செய்கிறதில்லை. அதன் கல்லான தோல் அதி வலிமையான சிங்கம் முதலியவைகளின் நகங்களுக்குக்கூட அசையமாட்டாது. ஆதலால் கல்யானை யைப் பார்த்துப் பயப்படாத மிருகம் ஒன்றுமில்லை.

கல்யானைகள் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலுமுள்ள பெருமணல் வெளியான காடுகளில் இருக்கின்றன. யானைகளும் சிங்கங்களும் ஸஞ்சரிக்கின்ற காடுகளில் ஸாதாரணமாய் அகப்படும். இலை, தழை முதலியவைகள் தான் அவைகட்கு முதன்மையான உணவு. அதனால் அது இயற்கையாய் ஒன்றுக்கும் தீங்கு செய்யத்தக்கதன்று. தைரியத்தில் குறைந்ததென்கிறீர்களோ, அன்று. ஏதாவது வேறொரு ஜந்து எதிர்க்குமானால் பயந்தோடாமல் எதிரே நிற்கும். வேறொரு ஜந்து பிடுங்கிப் புசிக்கமாட்டாத முட்செடிகளையும் முள் தழைகளையுமே அவை முக்கியமாய்ப் புசிக்கின்றன. அவைகளைப் பிடிப்பது வெகு வருத்தம். அவைகள் தூங்கவும் நடமாடவும் உரித்தான சதுப்பு நிலங்களில் குட்டியோடு ஸஞ்சரிக்கிற தருணம் பார்த்து பெரியதை குண்டு வைத்து அடித்துக் கொன்றுவிட்டுக் குட்டியைப் பிடித்துப் பழக்க வேண்டும். அதன்தோல் குண்டுக்கன்றி மற்றொன்றுக்கும் அசையாமட்டாது.

கல்யானைகளை வேட்டையாடுவது வெகு வருத்தம். அவைகளைப் பிடிக்க எவ்வளவு முயன்றாலும் கையில் அகப்படுகிறதில்லை. அவை நடத்

16. ஆற்றல் என்பது கண்டடார்த்திடாப் பேடிகையி லாயுத மிருந்தென்ன ?



தலைப்பட்டால் அப்புறம் ஒருவர்க்கும் ஸாத்தியமன்று. பெரிய முட்புதர்களையெல்லாம் அலக்ஷியமாய் எழும்பித் தாவும். எவ்வளவு அடித்தாலும் அதன் உடம்பில் உறைக்கிறதில்லை. தேகத்தில் வெடிகுண்டுகள் போய்ப் பொத்திக் கொண்டாலும் அதையும் லக்ஷியம் செய்யாது. எதிர்த்தோடி வருமேயன்றி பின்வாங்காது. புஜம் இருதயம் முதலிய மர்மஸ்தானங்களில் அடிபட்டால் மாத்திரம் தாங்காது. இப்படிப்பட்ட வலிய மிருகத்தின் உருவத்தை இத் துடன் சேர்த்தனுப்பியிருக்கும் படத்தால் தெரிந்து கொள்ளலாம்.

## ஸ்திரீ சக்தியின் விசித்திரம்

இவ்வளவு பெரிய யானையையும் மனிதன் வசப்படுத்தித் தன் அடிமையாக்கி ஜெயித்து விடுகிறான். அத்தகைய புத்தி நுட்பம் வாய்ந்த மனிதனை அவனிலும் பன்மடங்கு பலம் குறைந்த ஒரு பெண் தனக்குத் தாஸனாகச் செய்துகொண்டு விடுகிறாள்! ஆச்சரியமே!

நாம் பிறர்க்கு உதவிபுரிவதால் நமக்கே உதவிசெய்துகொள்கிறோம். நமது நண்பர்களுக்கு நாம் உபகாரம் செய்கிறோம். பிறகு நமக்கே ஆபத்தான காலங்களில் நமக்கு அவர்கள் பக்கத்துணையாக வந்து நிற்கிறார்கள். நம்மை நம்பிய நமது குடும்பத்தினரை நாம் ஸம்ரக்ஷணை செய்கிறோம். அது நாம் வியாதிப் படுக்கையில் கிடக்கும்போது நமக்குத் துணையாகின்றது. இவ்விதமே உலகத்தார்க்குச் செய்யும் சகாயமும் பிறகு நமக்குத் திரும்பக்கிடைக்கின்றது.

## வீட்டுத் திருடர்கள்!

வெளித் திருடர்களுக்கே போலீஸ். வீட்டுத் திருடர்களைத் தெய்வந்தான் கேட்கவேண்டும். காணமற்போன பொருளை எடுத்தது யார்? எல்லாம் மிக மிக வேண்டியவர்களே. எவர் மீது சொல்ல? சொன்னாலோ கலகமே மிச்சம். போன பொருள் திரும்பி வரப்போவதில்லை. வீண் மனஸ்தாபங்களே லாபம். இது காணமற்போன பொருளுக்கு வட்டி போலும்!

18. பதியோடு மெதிர்நின்று கூசாது வாதுசெய் பாவையொரு பதர்.



கல்யாணியை வேட்டையாடிப் பிடித்தல்.

# பெரியாரின் மொழிகள்

(79-ம் பக்கத் தொடர்ச்சி.)

127. Trust no future how'er pleasant,
Let the dead past bury its dead. Longfellow.

அது எவ்வளவு இன்பமா யிருந்தாலும் இனி வரப்போவ தெதையும் நம்பாதே. அங்ஙனமே சென்றுபோன விஷயங்கள் புதைந்துபோகட்டுமாக. லாங்பெல்லோ.

128. Small curs are not regarded when they grin,
But great men tremble when the lion roars. Shakespeare.

சிறு நாய்கள் உறுமும்பொழுது எவரும் அதை லக்ஷ்யம் செய்வதில்லை. ஆனல் சிங்கம் கர்ஜிக்கும்பொழுது மகான்களும் நடுங்குகின்றனர். ஷேக்ஸ்பியர்.

129. Goodness consists not in the outward things we do, but in the inward thing we are. Chapin.

நன்மையென்பது நாம் செய்கின்ற வெளிக்காரியங்களில் இல்லை, நாம் இருக்கும் உள்விஷயத்திலேயே இருக்கிறது. சேபின்.

130. Good nature and good sense must ever join;
To err is human, to forgive divine. Pope.

நல்ல இயற்கையும் நல்லுணர்வும் என்றும் சேர்ந்திருக்கவேண்டும். தவறு செய்வது மனிதகுணம், அதை மன்னித்துவிடுவது தெய்வீக குணமாகும். போப்.

131. Errors, like straws, upon the surface blow,
He who would search for pearls, must dive below. Dryden.

தவறுகள், குப்பையைப்போல மேல் பாகத்திலேயே இருக்கின்றன முத்துக்களைத் தேடுபவன் இன்னும் ஆழமாகச் சென்று பார்க்கவேண்டும். ட்ரைடன்.

132. Man is not as God,
But then most Godlike being most a man. Tennyson.

மனிதன் கடவுள்மாதிரியில்லை, ஆனல் மிக உத்தமமான மனிதனை விட்டால் அனேகமாக கடவுளையொத்தவனுய்விடுகிருன். டென்னிஸன்

133. Men's judgements are
A parcel of their fortunes. Shakespeare.

மனிதர்களுடைய (விஷயங்களைப்பற்றிய) அபிப்பிராயங்கள் அவர்களுடைய சொத்தின் ஒரு பாகமாகும். ஷேக்ஸ்பியர்.

---

20. மதியோடு வரவுகண்டியாது செலவிட்டு வறுமை கண்டவனொரு பதர்.

134. Our moral feelings are so interwoven with our intellectual powers, that we cannot affect the one without in some degree addressing the other. Ruskin.

நம்முடைய சன்மார்க்க உணர்ச்சிகள், நம்முடைய புத்தி சக்திகளுடன் மிக நெருங்கிப் பிணைக்கப்பட்டிருப்பதால், ஒன்றை நாம் ஸ்பரிசித்தால் மற்றதையும் கொஞ்சமாவது தொடாமல் இருக்க முடிவதில்லை. ரஸ்கின்.

135. Envy not greatness: for thou mak'st thereby
Thyself the worse, and so the distance greater. Herbert.

மகத்துவத்தைப் பார்த்துப் பொறாமைகொள்ளாதே; அதனால் உன்னையே நீ இன்னும் தாழ்த்திக்கொள்கிறாய். உனக்கும் அதற்கும் உள்ள தூரம் அதிகமாய்விடுகிறது. ஹெர்பர்ட்

136. A little fire is quickly trodden out,
Which, being suffer'd rivers cannot quench. Shakespeare.

சிறிய நெருப்பு வெகு சீக்கிரம் அவிக்கப்பட்டுவிடக்கூடும்; அதை அங்ஙனமே விட்டுவிட்டாலோ பெரிய ஆறுகளும் அதை அணைக்கமுடியாது போய்விடும். ஷேக்ஸ்பியர்.

(தொடரும்)

R. ராமகிருஷ்ணன். B. A.

---

முன்னாட்களில் ஒருவன் முப்பது ரூபா சம்பாதித்தால் ஒரு பெரிய இடத்துக் கன்னிகையை சுலபத்தில் விவாகம் செய்துகொண்டு விடலாம். அந்த ஸம்பாத்தியத்திற்கு அவ்வளவு கௌரவமிருந்தது. மிகுதிப் படுத்திச் சேர்த்து வைக்கவும் முடிந்தது. இப்போதோ முப்பது ரூபாய்க்கு உத்தியோகமும் கிடைப்பதரிதாய், கிடைப்பினும் மதிக்கப்படாததாய், மதிக்கப்படினும், குடும்பச் செலவுகட்கே போதாததாய்ப் பாடானபாடு படவேண்டியதாய் இருக்கிறது.

## பழய கேழ்வரகு!

கேழ்வரகா ?—அது அநாகரீகம்! காபி டீயா—அது நாகரீகம்! கேழ்வரகின் குணம் தெரியுமா ? தோலைப் பற்றிய பிணிடோம், சிரங்குகள் வராது. எலும்புக்கும் வலுவு, தேகத்திற்கும் நல்லதிடன். கேழ்வரகு மாவின் ஜலம் குழந்தைக்கு நல்ல உணவு, எல்லாம் சரிதான்! ஆனால்—ஒரு கௌரவப்பொருளாய் அது இல்லையே என்கிறாள் நாகரீக ராணி!

19. வாழ்விலே பாலருக்கே கடன்வைத்து முன்சொத்தெல்லாம் பாழ்செய்
தந்தையொர் பதர்,

---

# ஆங்கிலத் தமிழ்க் கடிதங்கள்*

## LETTER IV.

### The Master's Answer.

Sir,

Ever since I first considered the state of human nature, or the difference between right and wrong, I have always preferred mercy to the severity of Justice. However seasonable your request may appear to yourself, yet to me it was really unnecessary. I am a father, sir, and can feel at least a part of what you suffer. My resentment against the young man is less than my anxiety for his happeness; and were I sure of his adhering to an uninterrupted course of vertue. I should have more real pleasure, than his acquiring me the revenue of a nabob.

In the mean time, that nothing may be wanting on my part, to make both you and him as happy as possible, all faults are from this moment forgotten; my house in open for his reception; and, if he will return, he shall be treated with the same indulgence, as if he had never committed any fault whatever.

I am sir, your affectionate friend,

T. RAJAGOPAL MUDR.

## 4-ம் கடிதம்

### அந்த எஜமானனின் உத்தரம்.

ஐயா,

குற்றமும் குற்ற மில்லாமையுமாகிய வித்தியாசம் இரண்டும் கலந்த மனிதர் சுபாவத்தினது தன்மையை நான் அறிந்த காலமுதல் நீதியின்படி தண்டிப்பதைக் காட்டிலும் மன்னிப்பதே பெரிதென்று எப்போதும் எண்ணியிருக்கிறேன். நீர் கேட்டுக்கொண்ட காரியம் நல்ல தருணத்தில் கேட்டதுபோல் உமக்குத் தோன்றிய போதிலும் உள்ளபடி எனக்கு அப்படி வேண்டியதாய் இருந்ததில்லை. நானும் பிள்ளைகளைப் பெற்றவன்தானையா. ஆகையால் நீர் படுகின்ற விசனத்தில் பாதியாகிலும் எனக்கு இருக்கத் தகும். அந்தப் பாலியன்மேல் எனக்குள்ள கோபம் அவன் சுகப்பட வேண்டுமென்கிற கவலைக்கு மிஞ்சியதல்ல. இனிமேல் என்றைக்கும் அவன் நன்மையாக நடப்பது நிச்சயமாக இருக்குமாகில் ஒரு நவாப்புக்கு உண்டான வரவை அவன் எனக்குச் சம்பாதித்துக் கொடுப்பதைக் காட்டிலும் உள்ளபடி எனக்கு அதிக சந்தோஷமே இருக்கும்.

ஆகையால் உமக்கும் அவனுக்கும் கூடியமட்டும் சந்தோஷம்உண்டாக்க என்னால் ஒரு குறைவும் இல்லாதிருக்கும்பொருட்டு செய்த குற்றங்கள் எல்லாம் இந்த நிமிஷமுதல் மறக்கப்பட்டன. அவனை வரவழைக்க என் வீடு திறந்திருக்கின்றது. அவன் மறுபடி வருவானாகில் ஒரு குற்றமும் செய்யாதவன்போல் அன்புடன் நடப்பிக்கப்படுவான். இங்ஙனம்:

ஐயா, அன்புள்ள உமது நண்பனாகிய

தி. இராஜகோபால் முதலியார்.

* All Rights Reserved to the Author.




## கேசவனின் எண்ணங்கள்

'நமது பாட்டனார் இருக்கிறார், நமக்கு என்ன குறைவு' என்று கேசவன் எண்ணிக்கொண்டான். அவன் பள்ளிக்கூடத்திற்குப் போய் வருவதற்கென்று ஒரு சிறு வண்டியும் இருந்தது. அதில் ஏறிக்கொண்டு பள்ளிக்கூடம் போவான். இப்படி யிருக்கையில் பாட்டனார் திடீரென்று காலமானார். பாட்டனார் கடன்பட்டிருந்ததால் சொத்துக்களில் பாதி போய் விட்டன.

கேசவனின் தகப்பனார் மிகுந்திருந்த சொத்துக்களை வைத்துக்கொண்டு அவரும் பணக்காரராகவே வாழ்ந்தார். கேசவன் தன் பாட்டனாருக்குப் பிறகு தன் தந்தையை நம்பியிருந்தான். சில வருஷங்களுக்குப் பிறகு தந்தை வியாபாரத்தில் நஷ்டமடைந்து ஏழையானார். ஆயினும் என்ன ? கேசவனின் அத்தை இப்பொழுது அவனைப் பிரியமாய் வளர்ப்பதானாள். 'நமது அத்தை இருக்கிறாள்—நம்மைக் காப்பற்ற' என்று கேசவன் நினைத்துக்கொண்டான்.

எவர்களும் ஒரேயளவாய் என்றைக்கும் பிரியம் வைக்கமாட்டார்கள். அத்தையின் பிரியம் இப்போது வரவரக் குறைந்துபோயிற்று. கேசவனைத் தன் வீட்டிற்கு வரவேண்டாம் என்று சொல்லிவிட்டாள். கேசவனின் தமக்கை தன் தம்பியைத் தன்னிடம் இருக்கும்படி வைத்துக்கொண்டாள். கேசவன் தன் அக்காவை நம்பி அவளிடம் இருந்துகொண்டு பாடசாலையில் வாசித்து வந்தான். இவ்விதம் மூன்று வருஷங்கள் கழிந்தன.

பெரியஇடத்தில் வாழ்ந்துவந்த கேசவனின் தமக்கை கால பேதத்தால் யாவும் இழந்து ஏழையாகிவிட்டாள். அவள் இப்பொழுது கேசவனை எப்படிக் காப்பாற்ற முடியும் ? அவளுக்கே ஜீவனத்திற்குக் கஷ்டமாயிற்று. இந்த நிலைமையில் கேசவனின் தந்தையும் கண்மூடினார்.

கேசவனையும், அவன் அக்காவையும் கேசவனின் பாட்டியார் தன் வீட்டிற்கு வரும்படி அழைத்துக்கொண்டாள். கடைசியில் கேசவன் தன் பாட்டியாரை நம்பி அவளுடைய கைச்சாதத்துக்கு எதிர் பார்க்கவேண்டியதாயிற்று. எத்தனை வீடுகள் தாண்டினான் பாருங்கள்! எத்தனை பெரிய குடும்பங்கள் காலவினையால் ஒடிந்து விழுந்துவிட்டதென்பதையும் சிந்தியுங்கள்.

பாட்டியும் சிலநாளைக்குப் பிறகு வியாதியில் விழுந்தாள். அவளிடம் இருந்த பணம் எல்லாம் செலவாய்விட்டது. ஆகவே, கேசவன் இப்பொழுது பாட்டியையும் அக்காவையும் காப்பாற்ற வேண்டியவனானான். பணமுள்ள

22. விதியோடு மணமான ரதி மாதை யணையாது விலைமாதை யணைவோன் பதர்.



பந்துக்கள் பலர் இருந்தும் இவர்களை எட்டிப் பார்க்கவேயில்லை. கேசவனை வாவென்று கூப்பிடுகிறவர்கள் ஒருவருமில்லாமற் போனார்கள். தரித்திரக் குப்பையை வாவென்று அழைப்பவர்கள் யார் ?

பலரையும் நம்பி ஏமாறிய கேசவன் முடிவில் தன் கையையே நம்ப வேண்டியவனானான். தன் படிப்பைக்கொண்டு இப்பொழுது ஒரு உத்தியோகத்தில் அமர்ந்து, மாதம் முப்பதுரூபாய் சம்பாதிக்கிறான். அதைக் கொண்டு தன் பாட்டியையும் அக்காவையும் காப்பாற்றி வருகிறான். கடைசியில் கேசவனின் கைதான் அவனுக்கு உதவிற்று. அவன் புத்திசாலித்தனமாய்ப் படித்துக்கொண்ட படிப்புதான் அவனுக்கு இப்பொழுது துணையாய் இருந்து வருகிறது. ஆனதால் பலபேர் இருக்கிறார்களென்றும், வேண்டிய பணம் இருக்கிறதென்றும் எண்ணி, படிப்பில் கவனமில்லாமல் இராதே. அவை யெல்லாம் நிச்சயமல்ல. நீ இப்போது படிக்கிற படிப்புதான் பிற்காலத்தில் உனக்குப் பெரிய துணையாகும். ஆதலின், உன் பாடங்களை நன்றாகப் படித்துக்கொள்.

---

நதி தீரத்தில் கருமகிரியைகள் செய்தால் பலருக்கும் தரவேண்டியிருக்குமென்று வீட்டில் நடத்துகின்றனர். ஆயினும் என்ன, பஞ்சாங்கப் பிராமணருக்கு அவரை வரும்படி செய்தி தெரிவித்ததும், அவர் தமக்குத் தெரிந்த நாலைந்து பேருக்கும் சொல்லிவிட்டு வந்து விடுகிறார். பிராமணர் வீட்டுக்கு வந்து மந்திரங்கள் சொல்லிக்கொண்டிருக்கையில் ஒருவர் பின் ஒருவராக அந்த நாலைந்துபேரும் வந்துவிடுகின்றனர். ஒவ்வொருவருக்கும் தனியே இலையிட்டு அரிசி காய் கறி தக்ஷிணை முதலியவைகளைப் படைத்து அனுப்பவேண்டி வருகிறது. இவ்விதம் தானம் பெறுவோர் அதை ஒரு வருமானம் போலவே எண்ணுகிறார்கள். தானம் கொடுப்பவனைப் பற்றியேனும், இறந்தவர்களின் ஆத்மா நற்கதியுறவேண்டுமென்றேனும் அவர்கள் சிந்திப்பது அபூர்வம்.

### அவசர சமயமே அதிர்ஷ்ட காலம்!

அவனுடைய அவசர சமயத்தில் எதையேனும் மறந்தோ, மூடாமலோ பூட்டுபோடாமலோ போய்விடுகிறன். பக்கத்திலிருக்கிறவனுக்குக் கொள்ளையிட அது அதிர்ஷ்டகாலம்! தாராளமாய்க் கை வைத்துவிடுகிறன். அவசரத்தில் மறந்த சொத்து பிறரது அதிர்ஷ்ட சொத்து! உலக அநுபவம் அப்படித்தானே ?

23. நல்லோர்கள் மனமெரிய வாய்வந்த தூஷணைகள் நவிலுவோன் முழு மூடனும்.

## நமது கதாப் பிரசங்கி

### உயிரை விடினும் கதரை விடேன்.

(110--ம் பக்கத் தொடர்ச்சி.)

சென்னை 'சென்ட்ரல்' ஸ்டேஷனில் ஏராளமான கூட்டம். அதில் மூன்றில் ஒரு பாகத்தார் நாகப்பூருக்குச் செல்லும் தேசியத் தொண்டர்கள். சென்னையிலாகட்டும், மற்றெவ்விடத்திலாகட்டும் ஒரு வாரமாக நாகப்பூரைப்பற்றிய பேச்சுதான் பிரமாதமாக இருந்தது. தேசியக் கக்ஷி எப்படியாவது வெற்றியடைய வேண்டுமென்று கடவுளை நோக்கித் தொழுபவர் பலர். சர்க்கார் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் "காந்தி கக்ஷியை" அப்படியே நசுக்கிவிட வேண்டுமென்று வாய்க்குள்ளே முணுமுணுப்பவருஞ் சிலர். ஒரு வாலிபனிடத்து கட்குடியால் மயங்கிய ஓர் வெறியன் ;

> "நீ எந்தவூரு அண்ணே ! நீ கூட "நாக்கப்புடுங்கா" வூருக்குத்தான் போறியா ? நம்ப ராசாவை பகைச்சுகின்னு சண்டை பண்றதின்னா லேசா? ஒரு குண்டுபோட்டு லோகத்தையே 'பூ' இன்னு ஊதிடுவாங்க. நீ அங்கே போவாதண்ணே ! போனா சன்னலு கம்பிக்குள்தான் முதல்லே நுழையவேணும்."

அவனுக்குச் சகபாடியான மற்றொருவன்; "ஆத்தாடி ; அம்புட்டோடு வுட்டுட்டா பத்தாதா ?.

> 'செயிலுக்குப் போனால், அண்ணே !—உன்னை
> வெயிலிலே வாட்டுவாங்கோ !
>
> மண்சுமக்கச் சொல்லுவாங்கோ !—உடம்பெல்லாம்
> புண்சுமக்கப் பண்ணுவாங்கோ !
>
> கட்டியடிப்பாங்கோ !—தலைதன்னை
> மொட்டை யடிப்பாங்கோ !
>
> பசிக்கும் வேளையிலே—சோறில்லை
> புசிக்கக் கூழ்தான் அண்ணே!'

என்று அவ்விருவரும் தம்முடைய "ராசபக்தி"யைக் காட்டிக்கொண்டனர். அவ்விளைஞன் அவற்றைத் தன்னை வழியனுப்பும் ஆசீர்வாதமாகக் கருதிக்கொண்டான். அவன் நமது கோபாலனே. வந்தேமாதர கோஷத்துடன் வண்டி சென்னையைவிட்டுப் புறப்பட்டது.

***

முன்பு தென்னாப்பிரிக்காவில் நடந்த 'சத்யாக்கிரகப்'போராட்டத்தில், நமது தமிழ்நாட்டு நாராயணசாமியும், நாகப்பனுமே முன்னணியில் நின்றது போல ; இந்த நாகபுரி போராட்டத்தில் நமது கோபாலன்தான் முதன்மை பெற்று விளங்கினான். அதனால் அவன் அப்போராட்டம் முடிவடைதற்கு முன்பே மகாத்மா கூறுகிறபடி "அரசாங்கத்தின் விருந்தாளி"யாகிவிட்டான்.

24. கற்கப்பழிக்கவே மற்கட்டி விவசார நாடினேன் வனமிருகமாம்.



கோபாலன் செல்வேலி புகைரத நிலையத்திருந்து அரசாங்கவிருந்தினனாகும்வரை, நாம் விஷயத்தைச் சுருக்கிவிட்டோமாயினும், அச்சம்பவங்கள் நிகழ்ந்தேற ஒரு மாதகாலம் பிடித்தது. மதுரையில் சுந்தரராஜமுதலியார் சொக்கலிங்கபுரத்திற்குச் சென்ற தன் குமாரனைப்பற்றி யாதொரு விஷயமும் தெரியாமையால், அன்று மாலை சொக்கலிங்கபுரத்திற்குப் புறப்படுவதாகத் தீர்மானித்திருந்தார். அப்பொழுது நடராஜமுதலியாரும், மரகதவல்லியும் தற்செயலாக அங்கு வந்து சேர்ந்தனர். ஒரு மாதத்திற்கு முன்பே சொக்கலிங்கபுரத்தினின்றும் புறப்பட்ட கோபாலன் மதுரைக்கு வரவில்லை என்ற விஷயம் அறிந்ததும் அவர்கள் அடைந்த மனோவேதனை எழுத்தால் எழுதமுடியாது. "கேஸ்களின்" மிகுதியால் தமக்கு வரும் "ஹிந்து"ப் பத்திரிகையைப் பார்ப்பதற்கும் ஒரு வாரமாக சௌகரியப்படவில்லை நமது கோபாலன் தந்தைக்கு. வேதனையோடு வேதனையாக மேஜையின்மேற் கிடந்த "ஹிந்து"வைப் பிரித்துப் பார்த்தார். அதில்,

"தேசபக்தர் - ஸ்ரீமான் S. கோபாலன்"

"நாகபுரி தேசியக் கொடி ஊர்வலத்திற்காக நிகழ்ந்த சத்யாகிரகப் போராட்டத்தில் இராப்பகலாக உழைத்து, அதன்பயனாய் சிறைப்படுத்தப் பட்டிருக்கும் ஸ்ரீமான் S. கோபாலன் அவர்கள் ; வடநாட்டுச் சிறைச்சாலைகள் முன்னரே தேசபக்தர்களால் நிரப்பப்பட்டுவிட்டமையால், அங்கு இடமில்லாமை கருதி, திரிசிரபுரம் மத்திய சிறைச்சாலையில் இரண்டாம் வார்டில் 30-ம் நம்பர் கைதியாக வைக்கப்பட்டிருக்கிறார்." என்று இருந்தது.

இச்சமயம் கோபாலன் குடும்பத்தாரின் மனோநிலைமை வர்ணிக்குந் தரத்ததா ?

***

சுந்தரராஜமுதலியார் திருச்சி ஜெயிலதிகாரிக்குத் தந்தியடித்துக் கேட்டார். "காந்தியின் அராஜக இயக்கத்தில் சேர்ந்து, காலாகாலத்தில் உணவில்லாமல் அலைந்ததால், அவன் உடல் நிலை நாளுக்குநாள் பலஹீனப்பட்டு வருவதைக் கருதி அரசாங்கத்தாரால் கருணைகூர்ந்து விடுதலை செய்யப்பட்டு ; திருச்சி பெரிய ஆஸ்பத்திரியில் சிகிச்சையிலிருக்கிறான்" என்று பதில் தந்தி வந்தது.

***

"கோபாலா ! இங்கே நிற்பவர் யார் தெரிகிறதா?" என்று உச்சிமுதல் உள்ளங்கால்வரை கதர் உடை தரித்திருந்த ஒருவர் திருச்சி ஆஸ்பத்திரியில், படுக்கையில் தன்னறிவு இழந்து கிடக்கும் கோபாலனை வினவினார்.

> "என்று இனி மதுரை காண்பேன்? எப்பகல் சவுந்தரேசன்
> தன் திருவடிகள் காண்பேன் ? தாயை எந்நான்று காண்பேன்?"

என்ற இனியகீதந்தான் அவன் 'கந்தரத்தி'னின்றும் மெல்லிய குரலோடு புறப்பட்டது. எனது அருமைச் செல்வமே! அப்பொழுதே உனது தந்தை கூறவில்லையா ? அவர் பேச்சைக் கேளாமல் நீ இவ்விதம் எங்களை மோசஞ் செய்ய

25. இல்லாத செல்வத்தை நிலையென்று கொண்டு அடியர் நெடிய பசிதீக்கவொவ்வான் நீசசண்டாளனும்.

லாமா ?" என்று கோபாலனைத் தழுவிப் புலம்பினள் அவனுடைய தாயார். மரகதவல்லி கண்களினின்றும் முத்துகள்போல் நீருகிரத் தேம்பியவண்ணம் நின்றாள். சுந்தரராஜமுதலியாரும் பிறரும் கற்சிலைபோல் அசைவற்று நின்றனர்.

"நீங்கள் அஞ்சவேண்டாம்; அவனுக்கு யாதொரு அபாயமுமில்லை; என் வீட்டிலேயே யானே சிகிச்சை செய்யலாமென்று கருதி யிருந்தேன். அதற்கு உங்கள் அனுமதி யில்லாமல் முடியாது. இப்பொழுது இவனை என் வீட்டிற்கு எடுத்துச் செல்வோம். ஒரு வாரத்தில் குணப்படுத்திவிடுகிறேன்," என்று அந்த கதருடை தரித்திருந்த புருஷர் கூறினர். வைத்தியத் தொழிலில் நிபுணரெனப் பெயர் வாங்கி யிருக்கும் அவரிடத்துக் கோபாலனை யனுப்புவதற்கு முதலியார்க்குச் சம்மதமேயாயினும்; அவர் தரித்திருந்த "உடையைப்" பார்க்கும்பொழுதெல்லாம் அவருக்குச் சிறிது அச்சமாகவே யிருந்தது; எங்கே தன் மகனைப் பழையபடி "கதர்ப் பித்தனைச்" செய்து விடுவாரோ என்று. ஆனாலும் அவன் உடல் நிலை சௌகரியப்படவேண்டுமே, அது கருதிச் சம்மதித்தார்.

இரண்டு வாரத்தில் கோபாலனுக்கு முற்றிலும் குணமாகிவிட்டது. "கதர்ப் பக்தரிட"த்துச் செலவுபெற்று யாவரும் மதுரை சென்றனர். சகோதரர்கள் அந்த "கதர் பக்தர்" யாரென அறிய ஆவலுள்ளவர்களா யிருக்கலாம். அவர்தான் நமது "காந்தி சீடர்" டாக்டர் S. S. ராஜன் அவர்கள்.

***

கோபாலனுக்குத் திருமணப் பேச்சு நிகழ்ந்தது. மணத்தைத் தடைப்படுத்தக் குறுக்கே நின்றதெல்லாம் அந்த "கதர்" தான். "எப்படியாவது கதரை விட்டுவிடு" என்று கோபாலனை மன்றாடினர் அவனுடைய தந்தை. "கதரை விடு" என்பதைக் காட்டிலும் 'உன்னுடைய உயிரை விடு' என்று கூறுவது மிகவும் நலமாயிருக்கும்" என்றான் கோபாலன். அவன் உறுதி கண்டு திகைப்படைந்த முதலியார்;—எனக்குப் பெருமையளிக்க வந்த திருமணியே! உன்னால் நானும் நல்லறிவு பெற்றேன். ஆ! நினைக்கும்பொழுது நான் எவ்வளவு கொடியவன்! பொருளீட்டுவதற்காக என் வாழ்நாளில் ஒவ்வொரு வழக்கிலும் நான் எவ்வளவு பொய், புனைசுருட்டுகளைக் கற்பித்தேன். உன்னாலன்றி மறுமையில் எனக்கு நற்கதி கிடைக்குமோ!" என்று மனங் கரைந்து கூறினர்.

***

சொக்கலிங்கபுரத்தில் தேசபக்தர் - கோபாலசாமி முதலியாருக்கும், மரகதவல்லி அம்மைக்கும் திருமணம் செவ்வனே நிறைவேறியது. கோபாலனுடைய நன்முயற்சியால் அங்கு வந்திருந்த யாவரும் 'கதரே' தரித்திருந்தனர். இப்பொழுது அந்தச் சிற்றூரில் ஒரு பெரிய கட்டிடம் "காந்தி கைத்தொழிற்சாலை" என்னும் பெயரோடு கோபாலனால் நிறுவப்பட்டு, "மான்செஸ்டரும்" தோற்றுவிடும்படி பதினாயிரக்கணக்கான ராட்டினங்களும்,

26. தாசிகோ வடிவீழ்ந்து சேர்ந்தவ னுயிர்ப் பிரேதமாம்.



கைத்தறிகளும் வேலை செய்து வருகின்றன. மான்செஸ்டரே அதற்கு ஈடாகாதபொழுது புதுப்பாளையம் 'காந்தி ஆசிரமும்' திருப்பூர் 'காதி வஸ்திராலயமும்' அதற்கு ஓர் எதிரா? "இவ்வளவு கீர்த்திவாய்ந்த கோபாலனைப்பற்றிப் பத்திரிகைகளில் பிரஸ்தாபமே காணோமே!" என்று நேயர்கள் இங்கு ஐயுறலாம். அந்த ஐயம் வேண்டாம்; கோபாலன் பத்திரிகை உலகில் வாழ்பவனல்ல; பேச்சுக்காரனல்ல; தொழிற்காரன்.

"பூதலத்திலே எந்தநாடுதான் இந்தியா எம் அன்னையே!
நீ படைத்த நல் சீர் படைத்தது இந்தியா எம் அன்னையே!
அற்றை நாள்முதல் இற்றை நாள்வரை
பெற்று நீவிடும் கொற்ற வீரரை,
உத்தமத் திறப் புத்தி மான்களை
ஒத்த பேர்கள் வேறு எத்தலத்து உளார்?
இந்தியா எம் அன்னையே!"

வாழ்க பல்லாண்டு, மகாத்மா வாழ்க பல்லாண்டு.

பெ. இராமாநுஜ ரெட்டியார்.

---

ஜீவன கஷ்டம் பெருகிவிட்டமையால் விசேஷச் செலவுகளும் சுருக்கமடைந்துவருகின்றன. முன்பெல்லாம் ஒரு பெண் பக்குவவதியாயின் அதைப் பத்து தினங்கள்போல் விசேஷச் செலவுடன் நடப்பிப்பது வழக்கம். இப்பொழுது கடைசி தினத்தன்றுமட்டும் பலருக்குச் சொல்லி நடப்பிப்பதாய் முடிந்துள்ளது. சிலர் இதையும் நிறுத்திவிட்டனர். மூன்றுநாட் கலியாணம் வீண் செலவென்றும், ஒரு தினத்துவிவாகமே உத்தமமென்றும் பலராலும் கருதப்பட்டு நடந்தும் வருகின்றது. காலத்திற் கேற்ற கோலம்!

## வாழைக்காய் கறியில் ஒரு ஞானம்!

உன்னொருவனுடைய வாய்க்கும் நாவுக்கும் நன்கு ருசிப்பதற்காக அந்த வாழைக்காய் என்ன பாடு படுகிறது தெரியுமா? அழகான தன்மேல் தோலையெல்லாம் அரிவாள்மனையிடம் பறிகொடுத்து, பல பல துண்டுகளாகி உப்பு, காரம் முதலியவற்றை யெல்லாம் தன் மேற் சுமந்து கொதிக்கும் எண்ணெயிலும் ஜலத்திலும் வெந்து தத்தளித்து படாத பாடு பட்டுப் பக்குவமாகி அப்பால் உன் வாய்க்கு வந்து கூரிய பற்களால் கடிபடுகின்றது. இவ்வளவு பாடும் தன் நன்மைக்காக அல்ல; உனக்கு ருசிப்பதற்காகவேதான். அதைப் போலவே நீயும் மற்றவர் இன்ப மெய்துதற்பொருட்டாக அவரின் பொருட்டுப் பாடு படு. அப்போது வாழைக்காயை நீ விரும்பி யுண்பதுபோல், உலகமும் உன்னை விரும்பி வரவேற்றுக் கௌரவிக்கும்,

27. வல்லாண்மை பேசி மானஞ்சிந்தி நிற்பவனுமடையர்கள் சிகாமணியனும்.




## 1. அன்பு.

(92-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 50. கடிந்த சொல்லிலும் கனிந்த சொல்லே நன்மை.
### 51. கடிந்தசொல் கேட்டால் காதுக்குக் கொப்புளம்.

இவ்விரண்டு பழமொழிகளும் அன்பு மாறியவர்களின் குணத்தை எடுத்துக் காட்டுகின்றன. முதற் பழமொழி அன்பு மாறியதன்பின் தோன்றிய கடிந்த தன்மையைக் குறிப்பிட்டுவிட்டு, அன்பு மாறாதிருந்த காலத்துனுடைய கனிந்த சொல்லை மறுபடியும் உபயோகிக்கப் பார்க்கும்படி தெரிவிக்கிறது. இரண்டாவது பழமொழியோ கடிந்த சொல்லின் கொடுமையை எடுத்து விளக்குகிறது. குரூரமான வார்த்தை சொல்வதைக் காட்டிலும் இனிய அதாவது அன்பான வார்த்தைகளுடன் பேசுவதே நன்மையென்றும், கடிந்த சொல் காது கொப்பளிக்கும் தன்மையாய் அவ்வளவு வருத்தமடைய வைக்கும் என்றும் விளக்குகிறது. வெகுநாட் காணாதிருந்த தன் அன்பினரைத் தேடி ஒருவன் அவர்களிருக்கும் ஊருக்குச் சென்று கண்டு களிக்கிறான். அந்த அன்பினரோ முன்போல இல்லை. பழைய அன்பு மாறிவிட்ட நிலையில் காணப்படுகிறார்கள். ஆயினும் இவன் அதைப் பொருட்படுத்தாமல் அவர்களுடன் குலாவி நிற்கிறான். இந்த சமயம் அவன் வெளியிற் செல்லுங்கால் தபாற்காரன் அவ்வீட்டினருக்கு ஒரு கார்டை இவன் கையில் கொடுக்கிறான். இவன் அதைத் தன் சட்டைப்பையிலிட்டுக்கொண்டு ஒரு நண்பரைக் காணப்போகிறான். போன இடத்தில் இவனது நண்பர் இவனது சட்டைப்பையிலுள்ள கார்டை எடுத்துப் பார்த்துவிடுகிறார். அதில் அந்த நண்பரையே கேவலமாக்கி ஒரு குறிப்பு எழுதப்பட்டுளது. நண்பருக்கு ஆத்திரம் பொங்கியும் அடக்கிக்கொள்கிறார். பின் அந்தக் கார்டைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குவந்து கொடுத்துவிடுகிறான். அந்த வீட்டுக்காரரை மேற்கண்ட நண்பர் மறுதினம் சந்தித்துத் தன்னைப்பற்றி இழிவாக எழுதிய கார்டொன்றை நேற்று கண்டதாகக் கூறுகிறார். உடனே வீட்டுக்காரருக்கு ஆத்திரம் பொங்குகிறது. ஊரிலிருந்து வந்தவனிடம் சென்று என் பேருக்கு வந்த கார்டை அவருக்கு ஏன் காண்பித்தாயென்று சிடுசிடுக்கிறார். ஊரிலிருந்து வந்தவரோ தான் வேண்டுமென்று காட்டவில்லையென்றும், தற்செயலாக அவரே படிக்கும்படி நேர்ந்துவிட்டதென்றும் சொல்கிறார். ஆயினும் அதை வீட்டினர் நம்பவில்லை. இனி ஜென்மத்துக்கும் இவன் முகத்தில் விழிக்கக்கூடாது என்று இன்னொருவரிடம் சொல்லிவிட்டு சினத்துடன் ஒதுங்குகிறார். இந்த சுடுவார்த்தை ஊரிலிருந்து வந்தவனுக்குக் கேட்டுவிட

28. வாழ்க்கைக்கடைப்படி மறந்து தருணந் தப்பி வரும் ஒரு ஆத்திரன் மட்டியாம்.



அவன் நெஞ்சம் புண்ணாகின்றது. நான் மனமறிந்து ஏதும் செய்யாதிருக்க, இதற்கு இவ்வளவு நிஷ்டூரமாவென்று மனங் கசந்துபோகிறான். தான் மனஸ்பூர்வமாயும் உண்மையாயும் அன்புகொண்டுள்ள இடத்தில் இவ்வித கடினசொல்லா என்று ஏங்குகிறான். கடிந்த சொல்லும், காதுக்குக் கொப்பளிக்கும் சொல்லும் எப்படிப்பட்ட தன்மைகொண்டதா யிருக்குமென்பதை இந்த உதாரணத்திலிருந்தும் கண்டுகொள்ளலாம். அன்பு மாறினால் இவ்வித கடின தன்மையில் வார்த்தைகள் ஆரம்பமாய் விடுகின்றன. உள்ளத்தில் உண்மையன்பு குடிகொண்டிருந்தாலோ என்ன தவறுதல்கள் செய்யினும் அது ஒரு குற்றமாகத் தோன்றாமலே போய்விடுகிறது. அதுமட்டுமல்ல, அன்பு பூரணமா யிருப்பின் ஒருவர் எத்தனைநாள் வந்து தங்கியிருந்தாலும் அது ஒரு கனமாகத் தோன்றுவதில்லை. அவர்களுக்குச் செலவிடுவதுவும் ஒரு செலவாகப் படுவதில்லை. அவர்கள் ஊர் செல்லுமளவும் அன்புச் சொற்களையே பிரயோகித்து, அவர்கள் ஊர் சென்றபின் வீடு காலிவீடு போலாய்விட்டதே, பெட்டியைத் திறக்கும் சப்தம் கேட்கவில்லையே, இந்த இடத்திலல்லவோ அவர்களின் பெட்டி யிருந்தது—அதை இப்போது காணோமே என்று உருகித் தன்னை யறியாமலே தோன்றும் கண்ணீரையும் துடைத்துக்கொள்ள வைக்கிறது. அன்பு குன்றி யிருந்தாலோ எல்லாம் இதற்கு எதிரிடை! ஒருநாள் தங்கினாலும் அது ஒரு பளுவாய்த் தோற்றுகிறது. அவர்களுக்குச் செலவிட்டதற்குக் கணக்கு பார்க்க வைக்கிறது. எப்போது தொலைவார்களோ வென்று எண்ண வைக்கிறது. வந்தவர்களிடம் முகம் கொடுத்துப் பேசுவதற்கே மனமற்றுப்போகிறது. இந்த நிலையில் இன்னும் சிலநாள் அவர்கள் தங்கிவிட்டாலோ காது கொப்பளிக்கும் வார்த்தைகளும் புறப்பட்டுக்கொள்கிறது. இவற்றிலிருந்தும் அன்பு செய்கிற வேலையும், அன்பு அற்றபோது தோன்றும் நிகழ்ச்சிகளையும் ஒருவாறு உணரலாம்.

### 52. அக்கினியாற் சுட்ட புண் விஷமிக்காது,

இது உண்மை. ஆனால் எதனால் சுட்ட புண் விஷமிக்கும் என்றால்,

### 53. நாவினால் சுட்ட புண் விஷமிக்கும்.

இந்த உண்மையையே மேலே 50, 51—பழமொழிகளில் நாம் விவரித்திருக்கிறோம். ஏதோ கோபம் பொங்கி இரண்டு அடிகள் அடித்தாலும், அதன் வலி அடுத்த நிமிஷத்தில் மாறிவிடும். இவ்விதமே நெருப்பாற் சுட்ட புண்ணும் ஆறிவிடும். ஆனால் நாவினாற் சுட்டபுண்ணோ, அதாவது அன்பற்ற கடிந்த சொல் சொல்லிவிட்டாலோ அதைக் கேட்டவன் அந்தச் சொற்களை ஒருநாளும் மறவான். அதிலும் அன்புடையார் அன்பு குறைந்து அவர்களிடமிருந்து அந்த சொற்கள் புறப்பட்டாலோ அதைவிட நரகவாதனை மேல் என்று தோன்ற வைத்துவிடும். தீயினாற் சுட்டபுண் உள்ளாறு மாறாதே நாவினாற் சுட்ட வடு.

### 53. குணம் உற்றவன் மணம் உற்றவன்; குணம் அற்றவன் மணம் அற்றவன்.

"அன்பு" என்ற குணமுள்ளவன்தான் வாசனை பொருந்தியவன். அதாவது, உலகத்தில் எல்லாராலும் நன்றாக மதிக்கப்பட்டு வாழத் தகுந்த

29. மல்லாடுவார் நடுவில் வந்து தண்டுதல் செய்யு மனக்கபடன் இவர்கள் குருவாம்.

வன். அவ்வித அன்பற்றவனே எல்லாராலும் அவமதிக்கப்பட்டு கபட குணஸ்தனென்ற இகழ்வுக்குரியவனாகி சீர்குலைந்து கஷ்டப்படுவான் என்றபடி.

### 54. அங்காடி விலையை அதிர அடிக்காதே.

நமது "அன்பு" எல்லாரிடத்திலும் இருக்கவேண்டியது மனித ஜென்மத்திற்கு அழகு என்பதை வெகு நுட்பமாய் இந்தப் பழமொழி எடுத்துக் காட்டுகிறது. அங்காடிக்காரியிடம் கூட, அதாவது காய் கறி விற்கும் பெண் பிள்ளையிடம் கூட ஆதரவும் அன்புமாய்ப் பேசவேண்டும். விசேஷமாய்க் காய் கறி விற்கவரும் பெண்பிள்ளை வெகு ஏழையாயும் பேதையாயும், அன்றைக்கு ஒரு மழை வந்தால் அந்தத் தினத்துப் பிழைப்புகெட்டு வயிற்றுக்கு உணவின்று வாடவேண்டியவளாயும், கஷ்ட ஜீவனம் செய்பவளாயும் இருப்பாள். அவள் நிலைமையைக் கண்டு அவளிடம் நமது அதிகாரம் செல்லுமென்று நினைத்து அவளை அதட்டி மருட்டினால் பயந்து நமது இஷ்டப்படி நமக்கு வேண்டியதைக் கொடுத்துவிடுவாள் என்ற கெட்ட எண்ணத்துடன் அந்தப் பேதையை மருட்டலாகாது. அவளிடமிருந்து வலிய இரண்டொரு காய் கறிகளை எடுத்து நமது கூடையில் போட்டுக்கொண்டால் அவள் என்ன செய்யமுடியும்; நமது கூடையிலிருந்து எடுக்க அவளுக்கு அவ்வளவு துணிவா என்றும் எண்ணக்கூடாது. நூறு நூறாகச் சம்பாதித்துவிட்டு ஒரு சொத்தைக் கத்தரிக்காய்க்குக் "கொசுறு" கேட்டு அவளிடம் சண்டைபிடித்து, அவள் ஏதாவதொன்று சொல்ல, தான் அதற்குப் பதிலாகக் கண்டபடி தூஷிப்பதென்றால் அது கொடுமையிலும் கொடுமை. தான் எவ்வளவு வைதாலும் செல்லும், அவள்பக்கம் நின்று கேட்பதற்குத் திக்கில்லையென்று அநியாயம் செய்யக்கூடாது. ஏதோ மானத்துக்கு அஞ்சி ஒரு பெண்பிள்ளை இந்தக் காய்கறிகளைக்கொண்டு கௌரவமாய் விற்றுப் பிழைத்துக் காலந்தள்ளுகிறாளேயென்று மேன்மையாய் எண்ணி, அவளிடம் அன்பாக நடந்துகொள்வதே உயர்ந்த குணமாகும். ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆபரணங்களை அங்கமெல்லாம் தாங்கிய பெண்களிற் சிலர் இவ்வித ஏழைகளிடம் அற்பத்திற்கெல்லாம் சண்டை பிடிப்பதைப் பல இடத்துங் காணலாம். பெண்ணுக்கே பெண் இரங்காவிடில் பின் யார் இறங்கி அன்பு காட்டப் போகிறார்கள்? இவ்வித கொடுமையின்றி அப்பேதைகளிடம்கூட அன்பாய் இருக்கவேண்டுமென்பது இப்பழமொழியின் கருத்து. அப்போதுதான் மற்றவர்களிடமும் 'ஜாஸ்தி' அன்பாயிருக்கும் குணம் நமக்கு வரும். அப்படி அன்பாயிருப்பதில் நமக்கு என்ன கஷ்டம்? நமது உத்தமகுணம் இன்னும் அதனால் பெருகவேசெய்யும். அன்பு ஒரு இடத்திலல்ல, தன் மக்கள்மீது மட்டுமல்ல, உலகத்தில் எல்லார்மீதும் கொள்ளவேண்டுமென்றும், விசேஷமாக ஏழைகளிடமும், தன்னை உண்மையாய் நம்பியவர்களிடமும் வைக்க வேண்டுமென்றும் இப்பழமொழி எடுத்துக் காட்டுகிறது.

### 55. அஞ்சலி வந்தனம் ஆருக்கும் நன்மை.

எல்லாரிடத்திலும் வணங்கி அவர்களிடம் அன்பாயிருப்பதினால், நமக்கு என்ன நஷ்டம்? இவ்வளவு அன்பும் வணக்கமும் நம்மிடம் இருக்கிறதா

30. தாரா[illegible]கோடி கூடினுமொரு தண்மதிய நிகராகுமோ?
(தண்ம[illegible]—குளிர்ந்த சந்திரன்.)



என்று எல்லாரும் ஆச்சரியப்பட்டு நம்மிடம் அவர்களும் அதிக கௌரவம் பாராட்டுவார்களே யல்லாது அதனால் நமக்கு ஒன்றும் குறைவில்லையே என்றபடி, இதுமட்டுமல்ல.

### 56. அல்லல் அருளாள்வாற்கில்லை.

"அன்பு" என்பதைப் பிரதான குணமாயுள்ள மானிடர்களுக்குத் துயரம் என்பதே கிடையாது. அன்புள்ளோர்க்குற்ற கஷ்டத்தை அனைவரும் தமக்கு வந்ததுபோற் கருதி அதைத் தீர்க்க முற்படுவார்களாதலின், எக்காலத்துக்கும் அவர்கள் ஒண்டி மரமாக நின்று தங்கள் துயரத்தைத் தாங்களே அநுபவிக்கும்படி நேராது என்றும் மற்றொரு கருத்து.

### 57. அவகுணக்காரன் ஆகாசமாவான்.

துற்குணமுள்ளவனும், அன்பு இருப்பதுபோல் நடிக்கும் சுயநலஸ்தனும் சூன்யமாய்ப் போவான் என்றபடி. ஆகாசம் என்றால் சூனியம்; ஒன்றுமில்லாமை. அன்பு பிரதானகுணம். அது அற்றவன் சூன்யமாவான் என்றபடி.

### 58. அன்பான சிநேகிதனை ஆபத்திலறி.

இப்பழமொழியின் கருத்து யாவருக்கும் தெரியும், எல்லாரும் நம்மிடத்தில் அன்பு பாராட்டுவார்கள். எல்லாரும் நம்மிடத்தில் சிநேகமாய் இருப்பதாகச் சொல்லுவார்கள். எப்போது பார்த்தாலும் கூட்டமாக நம்மிடம் உட்கார்ந்திருப்பார்கள். உடனிருந்தும் உண்ணுவார்கள். ஆனால் எவன் நமக்கு ஆபத்து வருங்காலத்தில் உண்மையாகத் தலைகொடுத்துக் கூட இருந்து காப்பாற்றுகிறானோ அவனே உண்மையான அன்பு நம்மிடம் வைத்தவன்; மற்றவர்கள் அன்பு உதட்டுமட்டில் தான். நமது வீட்டில் கஷ்டம் என்றால் அந்த சமயத்துக்கு வந்து உதவிக்கொள்ளாமல், அந்தக் கஷ்டம் தீர்ந்தபின்பு அதை ஒப்புக்கு விசாரித்து அநுதபிப்பதுபோற் காட்ட வருவார்கள். உண்மையான நண்பனுக்கோ நமக்குக் கஷ்டம் என்று கேட்ட மாத்திரத்தில் அவனுக்கு வேறு எதிலும் புத்திசெல்லாது. தன் வேலைகளை யெல்லாம் அப்படியே போட்டுவிட்டு நம்மிடத்துக்கு ஓடிவருவான். அந்த அன்பே உயர்ந்தது. உதட்டுறவு நேசர்களோ தங்கள் வாயில் வெற்றிலைப்பாக்கை மென்று கொண்டே நமது கஷ்டத்தைப் பற்றில்லா மனதோடும் கேட்கத் தொடங்குவார்கள்.

(தொடரும்.)

நாயுடு வகுப்பினருள் புது பழக்கமொன்று நடையாடுகின்றது. ஒருவர் இறந்து கருமகிரியை நிறைவேறின மறுநாள் அப்பியங்க ஸ்நானம் செய்வதும், முக்கிய உறவினர்கள் புதுவஸ்திரங்களை மரியாதையாகக் கொடுப்பதும் உண்டு. இவ்விதம் மரியாதைசெய்பவர்கள்மட்டுமே அன்றைய தினத்தில் அங்கிருந்து உண்பதும், மரியாதைசெய்யாதோர் அன்றைய புசிப்புக்குவாமலே நின்று கொள்வதுமான புது ஸம்பிரதாயம் இப்பொ[illegible]கின்றது.

31. தந்தி பலகோடி கூடினும் வீர கெம்பீர ஜயசிங்க நிகராகுமோ?
(தந்தி—யானை.)

[stamp, illegible] 169826

# தேகதத்துவ சூக்ஷமங்கள்

## 3—தாடைகள்—நாக்கு

(88-ம் பக்கத் தொடர்ச்சி.)

பற்கள் தாடை யெலும்புகளில் வெகு பக்குவமாய்ப் புதைந்திருக்கின்றன.

வில்லைவாய் இருக்கிற தாடையெலும்பு ஓரங்களில் குழிகளுண்டு. அந்தக் குழிகளில் பற்களின் வேர்கள் அசையாமல் புதைந்திருக்கும். ஒவ்வொரு குழியில் முளைக்கிற பல் பலகையிலடிக்கிற இரும்பு முளைபோல் அவ்வளவு உறுதியாய்ப் பிடிவண்டிருக்கும். பல்லீறுகளும் பற்களை அசையாமற் செய்து, பற்குழிக்கும், பற்சிகரத்துக்கும் மத்தியமிருக்கிற பல்லின் கழுத்தைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன.

சிரசு அசையாமல் மேல் தாடையெலும்பு அசையாது; ஆனல் கீழ்த் தாடை யெலும்பு மூட்டுகள், காதெலும்பிலிருக்கிற பள்ளங்களில் அமைந்து, கதவுகீலுபோல் மேலுக்குங் கீழுக்கும், முன்னுக்கும் பின்னுக்கும், வலது இடதுபக்கமாகவும் அசைந்து கொண்டிருக்கின்றன.

இவ்வித அசைவுகளினல் கீழ்ப்பற்கள் மேற்பற்களோடு உராயப்படும்; அதற்கு மெல்லுதல் என்று பேர். மெல்லும்போது போஜன பதார்த்தங்கள் மசிந்து மிருதுவாகின்றன.

***

### நாக்கு

நீர் பருகும்பொழுது நாக்கு எத்தனைச் சுறுசுறுப்பாய் அசைந்து பக்க வாட்டமாய்ப் புரண்டு, க்ஷணத்துக்கு க்ஷணம் வித்தியாஸப்படுகிறது பார். மெல்லும்போது பற்களுக்குத் தகுந்த பதார்த்தங்களைத் தள்ளிக்கொடுத்து உதவிசெய்து, மிருது பதார்த்தங்களை அன்னத்தின்மேல் வைத்து நசுக்கி, வாயிலூறுகிற உமிழ்நீரொடு செவ்வையாய்க் கலக்கும்படி செய்கின்றது. நாக்கானது மென்ற ஆகாரத்தை ஒன்றாய்ச் சேர்க்கத் தொண்டைக் குழியில் இறக்குகின்றது. ஒரு க்ஷணத்தில் ரூபம் மாறி, ஒரு க்ஷணத்தில் மூளை பிதுங்கி நீண்டு சிறுத்து, பிறகு நுனி பின்னுக்குப் போய்க் குறுகி அகன்று காண்டி போல் குவிந்து பின்னுக்குப் புரண்டுருளும். இவ்வித ஆச்சரிய தீவிர கதியாய் அசைந்தும், பற்கள் சந்திலகப்பட்டுக் காயம் படாமல் ஜாக்கிரதையாய்த் தப்பித்துக்கொள்ளுகின்றது. இதன்றியில் மாமிச மெத்தையாகிய இந்த நாக்கு தித்திப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, புளிப்பு ஆகிய அறுசுவைகளை உணர்ந்து நமக்குத் தெரிவிக்கிற குணம் இதற்குமாத்திரம் [illegible] தன் ணொர்ந்து சொல்லுவோர் இதுவரையில் யாருமில்லை. [illegible] ணருகிற தன்மை இருக்கிறதினல், வயிற்றுக்காகாத பண்டங்களை விழுங்கவிட்டாமற் செய்கிறது.

32. மடமாதர்க்கு மனமென்ப தேவர் அறிகுவார்?



வாயிலிட்டு மெல்லுகிற பதார்த்தங்கள் உமிநீருடன் செவ்வையாய்க் கலவாமலிருந்தால், அவை அன்னசயத்தில் செவ்வையாய் ஜீரணமாகா.

ஜ்வரம் கண்டு வருந்துகிறவனுக்கு நாவில் நீர்வறண்டு வாய்முழுதும் உலர்ந்து விடுகிறதினல், எதையும் புசிக்கக் கஷ்டமா யிருக்குமென்று நன்றாய்த் தெரியும். தாடை, நாக்கு, ஈறுகள், உதடுகள், மேல்வாய் ஆகிய இவ்விடங்களில், சருமத்துக்கடியில் ஒருவித கிரந்திகள் இருக்கின்றன. அவைகளில் நீர் சுரந்து குழல்கள் வழியாய் வந்து வாயில் விழுந்துகொண்டிருக்கும்; அப்படி விழாவிட்டால் வாய் உலர்ந்து அசௌக்கியம் நேரிடும். நாம் சாப்பிடாமல் சும்மா இருக்கும்பொழுது வாய் ஈரமாயிருப்பதற்கு எவ்வளவு உமிநீர் வேண்டியதோ அவ்வளவுமாத்திரமே அற்பமாய் சுரக்கும். போஜனம் செய்யும்போது ஆகாரத்துடன் பொருந்திக் கலக்க அதிக உமிநீர் வேண்டியிருப்பதினல், கிரந்திகளின் தொழில் அதிகரித்து, உமிநீர் அதிகமாய்ச் சுரந்து வாயில் வந்து விழுகின்றது. ஒரு வேளை போஜனத்துக்கு சுமார் 1½ ஆழாக்கு உமிநீர் சுரக்குமென்று சொல்லுகிறார்கள்.



இந்தப் படம் தோல் உரித்த முகத்தில் தாடைகளி லிருக்கிற கோளங்களைக் காண்பிக்கிறது.

1. உமிநீரை யுண்டாக்குகிற கோளம்.

2. உமிநீரை வாய்க்குக் கொண்டுபோகிற குழல்.

புசித்த பதார்த்தங்கள் ரத்தமாகிறதற்கு முன் முதலில் மசிந்து பக்குவமாக, வாயில் கருவிகள் ஏற்பட்டிருக்கிற விதத்தை இப்படத்தால் அறியலாம்.

ஆகாரமானது ஒரு குழலின் வழியாய் கீழுக்கிறங்கி, அன்னசயத்தில் வந்து விழுகின்றது. அந்தக் குழலுக்கு அன்னவாகி (அன்னக்குழல்) என்று பேர்; அது தொண்டையின் பின்புறத்தி லிருக்கின்றது.

சாப்பிடுகிற பதார்த்தங்கள் அன்னக்குழல் வழியாய் தற்செயலாய் இறங்குகிறதில்லை; கிருமி நகரும்போது, அதன் சரீரம் ஆடுவதுபோல், அந்தக் குழலுக்கு ஒருவிதக் கிருமிச்சலனம் உண்டு; அச்சலனத்தால் குழலுக்குள் இருக்கிற வஸ்து கீழ் இறங்கும். இவ்வித அசைவு இல்லாமல் பதார்த்தம் தன் கனத்தால் தற்செயலாய் இறங்கும்படியான வகை யிருந்தால், நாம் வாயிலிடுவதை விழுங்கும்போதெல்லாம் தலையை மேலுக்கு எடுக்கவேண்டியதாய் நேரிடும். மேலும் தலையை கீழுக்கிறக்கி வைத்துக்கொண்டு, ஆகாரம் அருந்துகிற மிருகங்களுக்கு விழுங்குவது கஷ்டமாகி அப்போது தலையை மேலுக் கெடுக்கவேண்டியதாய் நேரிடும். ஆகாரக் குழல், ஒரு சிறிய கவளத்தைப் படிப்படி மெதுவாய் கீழ் இறக்கவேண்டியதற்கு பருமன் எவ்வளவு இருக்கவேண்டியதோ, அவ்வளவே ஏற்பட்டிருக்கிறது; உணவை வாய்நிறையக் கொண்டு சீக்கிரமாய் விழுங்கப் பிரயத்தனப்பட்டாலோ, அன்னக்குழல்

33. வானவர்களாகிலும் பாதார கமனத்தை வைத்திடிற் கெடுவர் கண்டாய்

ஆட்டம் தடைபட்டு, வேதனையுண்டாகி, அசைகிற அசைவும் நின்றுவிடும். அப்போது பதார்த்தம் தொண்டையில் அடைத்துக்கொள்ளும்.

தொண்டையில் ஏற்பட்டிருக்கிற (மேல் விவரித்த) விசித்திரங்களைத் தெரியப்படுத்தாவிட்டால், ஆகாரம் வாயிலிட்டு விழுங்குவது சுலபமென்று எல்லோரும் அஜாக்கிரதையாய் இருந்துவிடுவார்கள். புசிக்கும்பொழுது ஜாக்கிரதையாய் இராவிடில் ஆகாரம் தொண்டையில் இறங்கும்போதெல்லாம் பிராணசங்கடம் சம்பவிக்கும். இதன்றியில் இன்னமொரு அபாயமுண்டு; அதாவது; ஆகாரக் குழல் அன்றி மற்றொரு குழல் அதனோடு சேர்ந்திருக்கிறது; அந்தக் குழலின்வாய் நாக்கின் அடியில் திறந்துகொண்டிருக்கும். ஆகாரம் வயிற்றுக்குள் இறங்கக் குழல் ஒன்று இருப்பதுபோல், காற்று மார்புக்குள் சுவாசப்பையில் இறங்கக் குழல் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சுவாசக்குழல் கழுத்தின் முன்பக்கமிருக்கும். இதனுடைய வாயைக் கடந்துகொண்டுதான் பதார்த்தங்கள் அன்னக் குழலுக்குப் போகவேண்டியது. ஆகையால், அன்னக்குழலுக்குப் போகவேண்டிய பதார்த்தம் ஒருவேளை தப்பி, சுவாசக்குழலில் இறங்கி, அது உடனே வெளிக்குவராமல் தங்கிவிட்டால், மூச்சடைப்பு கண்டு மரணமடைவது நிச்சயம்.

இவ்வித அபாயம் நேரிடாமலிருக்க, சுவாசக்குழலை யடுத்து அடிநாக்கைத் தொடர்ந்து ஒரு தட்டையான சவ்வு இருக்கின்றது. அதற்கு உண்ணாக்கு என்று பெயர். சாப்பிடுகிற வஸ்துக்கள் உள்ளுக்கு இறங்கும்போது உண்ணாக்கானது சுவாசக்குழல் துவாரத்தின்மேல் படிந்து அதை மூடிக்கொள்ளும்; பதார்த்தங்கள் உண்ணாக்கைக் கடந்து போனபிறகு, அந்த உண்ணாக்கு மேலுக்கு நிமிர்ந்து, சுவாசக்குழலின் வாயைத் திறந்துவிடும். துவாரம் திறந்துகொண்ட பிறகு சுவாசம் சாதாரணமாய் நடக்கும். இவ்விதமாய் ஏற்பட்டிருப்பதினால், எதையாவது விழுங்கும்போது சுவாசத்தை அடக்கும்படி நேரிடுகின்றது.

பேசும்போதும், சுவாசம் ஓடிக்கொண்டிருக்கும்போதும் சுவாசக்குழல் திறந்துகொண்டிருக்கும். ஆகையால் சாப்பிடும்போது பேசினாலும் நகைத்தாலும் அப்பொழுது சுவாசக்குழல் வாய் அகலத்தில் கொஞ்சம் திறக்கப்பட்டு, சிறிய அணுக்கள் அதிலிறங்கிவிடும். இறங்கிவிட்டால் ஓய்வு இல்லாத இருமல்கண்டு அதை வெளிப்படுத்திவிடும். சுவாசக்குழலின் வாய் செவ்வையாய் மூடிப் பத்திரப்படுத்தாமலிருந்தால், ஆகாரம் வழி தப்பி வேறு வழி சென்று, இருமல் முதலிய உபத்திரவங்கள் சம்பவிக்குமென்று நமக்குத் தெரிந்திருக்கவேண்டியது.

(தொடரும்)

### பலி கடவுளுக்குப் பிரீதியாகுமா?

இவ்வளவு அருமையான சூக்ஷ்மங்களுடன் அமைந்த சரீரமே மிருகங்கள், பக்ஷிகள் இவைகட்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஈச்வர நாமத்தை வீணில் வழங்கி, பலி, பலி என்று சொல்லிக்கொண்டு கதக்கென்று வாயில்லாப் பிராணிகளின் கழுத்தை வெட்டுகின்றார்களே! இது தெய்வ ஸம்மதமாகுமா? ஐயோ! என்ன அறியாமை!! எப்போது தொலையும் இந்தக் கொடுமை?




## அர்க்கள ராணியின் வீரச்செய்கை

பக்சார் என்று இப்பொழுது சொல்லப்படும் நகரத்திற்கு ஸமீபத்தில் அர்க்களம் என்று ஒரு ஸமஸ்தானம் பூர்வத்தில் இருந்தது. கௌதமன் என்பவர் அந்த அர்க்கள தேசத்திற்கு அரசராக இருந்தார். (About 1250-A. D.) அவருடைய மனைவியே இந்த விஷயத்தின் நாயகியாவாள். அரசர்கள் அநேகர் டில்லி சக்ரவர்த்திக்கு அடங்கியுட்பட்டுக் கப்பங்கட்டி வந்தனராயினும், கௌதமன் சிறிதும் பயமின்றிக் கப்பங்கட்டுவதில்லை யென்று தெரிவித்துவிட்டார். இதனால் சக்ரவர்த்திக்குக் கோபம் உண்டாகி அவர் அர்க்கள ராஜனுடைய ராஜ்யத்தைக் குறைக்க எண்ணி, தனக்கு இணங்கிய அரசரான அயோத்தியா நகரத்து மன்னனைச் சேனாதிபதியாய் நியமித்து அவர் வசமாய்ப் படையை யனுப்பினார். அர்க்கள ராஜனோ மகா பராக்கிரமமுள்ளவர். அவரது சேனையும் உத்தமமான நிலைமையிலிருந்தது. ஆதலின் டில்லி சக்ரவர்த்தியின் படை முற்றும் தோல்வியுற்றது. அதனிற் சிலர் மடிந்தனர். சிலர் போன இடமே தெரியாதபடி ஓடியொளிவாராயினர். அர்க்கள ராஜன் மிகுந்த வைபவம் கொண்டாடி தனது கோட்டையில் வெற்றிக் கொடியை நாட்டி உற்சாகத்துடனிருந்தான்.

***

இப்படியிருக்க, அமாவாசை ஸமீபிக்கவே ராஜபத்தினியானவள் கங்கா ஸ்நாநம் செய்ய வேண்டுமென இச்சைகொண்டாள். அவ்வாறு கங்கையில் மூழ்காவிடின் தமது குடும்பத்திற்கு க்ஷேமம் உண்டாகாதென்னும் பயம் அவள் மனதிற் பிறந்தது. கங்காநதிக் கரையில் பகையரசர்கள் இறங்கி யிருந்தார்கள். இந்த சங்கதியை யறிந்து ராஜபத்தினியானவள் அப்பகையரசர்கள் இறங்கி யிருக்கும் இடத்திற்குத் தூரமாயுள்ள ஸ்நாந கட்டத்திற்கு ரகசியமாய்ச் சில தாதிமாருடன் போய் ஸ்நாந விரத நியமங்களை நிறைவேற்றிக்

84. அனவரதமும் பெண்களனுசார வார்த்தையே அதிகமாய்க்கொண்டாடுவார்

கொண்டு வரவேண்டுமென்று தீர்மானித்தாள். அவ்வாறே தனது தாதிமாருடன் சேர்ந்துகொண்டு இரவில் நல்ல இருட்டுக் காலத்திற் புறப்பட்டுத் துரிதமாய்ச் சென்று கங்கையை யடைந்து கங்கா தேவியைப் பூசித்து அர்க்களராணி ஸ்நாநம் செய்தாள். இதுவரையில் அவளுக்கு யாதொரு தொந்தரவும் ஸம்பவிக்கவில்லை. இத்தகைய மகாராணி எவர்க்கும் தெரியாமல் ஸ்நாந கட்டத்திற்குப் போய் வருவது சாத்தியமான காரியமன்று.

***

அதற்கேற்ப, எவளோ குலீன ஸ்திரீயொருத்தி ஸ்நாநத்திற்கு வந்திருக்கிறாளென்ற சமாசாரம் சமீபத்தில் தங்கியிருந்த அயோத்தி மன்னனுக்கு எட்டவே, அவன் தீர்க்கமாய் விசாரித்து அவள் அர்க்களராணியே என்று தெரிந்துகொண்டான். அவன் உடனே அந்த ராணியை எவ்விதத்திலேனும் சிறைபிடிக்க வேண்டுமென்று நிச்சயித்துத் தனது சேனைகளுக்குக் கட்டளையிட்டான். அர்க்கள ராணி ஸ்நாநம் செய்து தனது தாதிமார்களுடன் கூடித் திரும்பி வருமளவில் மகம்மதீய சைன்னியம் இவர்களைச் சூழ்ந்துகொண்டது. ராணி உள்ளூரப் பயம்பிடித்து மனக்கலக்கம் உற்று கண்ணீர் உதிர்க்காமல் கோபமூண்டவளாகித் தன்னைச் சுற்றி நிற்குமாறு தாதிமார்க்குக் கட்டளையிட்டு, தனது பார்வையினாற் சத்துருக்களைத் திரஸ்கரித்துத் தனது கடாரியைக் கையில் ஏந்திக்கொண்டனள். தைரியசாலிகளான அவளுடைய தாதிமார் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு கடார்ரியிருந்தது. அவர்கள் தமது இடுப்பிலுள்ள ஆடையிற் சொருகியிருந்த கடாரிகளை விரைந்து எடுத்துக்கொண்டவர்களாகிச் சத்துருககளின் படையினுட் புகுந்து தமது துர்க்கத்திற்குப் போக முயன்றனர். இத்தக் காரியம் அசாத்தியமென்று சிறிது நேரத்தில் ராணி யறிந்து, "ஹிந்து தாய்மார்களிடத்தும் ஸகோதரிகளிடத்தும் பிரேமை பாராட்டும் அண்ணன் தம்பிகள் எவருமிலரோ?— எவரேனும் உளரேல் எங்களுக்குச் சகாயம் செய்ய வாருங்கள்; தெய்வ ஸாக்ஷியாய் உங்களைப் பிரார்த்திக்கின்றேன்" என்று கூவினள்.

***

இவளுடைய வாயினின்றும் இந்த வார்த்தைகள் வெளிப்பட்டவுடனே, பரிவாரங்களோடு ஸமீபத்திற் போய்க்கொண்டிருந்த அபயச்சந்த், நிர்ப்பயசந்த் என்னும் வீரர்கள் இருவரும் ஓடிவந்து உண்மையை யறிந்து வீராவேசங்கொண்டு மகம்மதீயர்களின் நடுவிற் பிரவேசித்து சத்துருக்களுடன் மிகுந்த தைரியத்தோடு போராடிக் கொண்டிருந்த அந்த ராணியின் அருகிற் சேர்ந்து, மிகவும் சிரமப்பட்டு சாகஸம்செய்து சத்துருக்களைவிலககி வழியுண்டாக்கிக்கொண்டு

35. வாசித்த கல்விதானென்ன தருமென்னிலோ மனத்தினல் லறிவுதருமால்.



அந்த ஸ்திரீ ரத்நங்களை அவர்களுடைய கோட்டைக்குக் கொண்டு போகப் பிரயத்தனப்பட்டார்கள். ஆயினும் அவர்களது முயற்சி ஈடேறாததாயிற்று. நிமிஷ நிமிஷத்திற்கும் ஹிந்துக்கள் மடிந்து கொண்டு வந்தனர். தைரியசாலியான நிர்ப்பயச்சந்தும் இன்னும் அநேக சூரர்களும் வீரசொர்க்கமடைந்தனர். இதற்குள் ஸகாயத்திற்காகச் சேனை வந்து சேர்ந்தது.

***

இவ்விடத்திய வர்த்தமானம் அர்க்கள ராஜனுக்குத் தெரிந்து அவரும் தம்முடைய சைன்னியத்தை யழைத்துக்கொண்டு விரைவில் வந்து சேர்ந்தார். கௌதமனையும் அவரது சைன்னியத்தையும் கண்டவுடன் மகம்மதியர்கள் பின்னடைந்து விலகிப் போய்விட்டனர். அன்றையதினம் ராணி செய்த சாகஸத்தை எவ்வளவு வர்ணிக்கினும் தகும். அபயச்சந்தின் சாகஸத்தைக் கண்டு சந்தோஷப்பட்டு கௌதமன் தனது செல்வ புத்திரியை அவனுக்கு விவாகம் செய்து கொடுத்தனன். பெண்பாலாரின் மீது படையெடுத்த அவ்வயோத்தித் தலைவனை எல்லோரும் ஏளனம் செய்வாராயினர். அவன் சாமளவும் இந்த அபகீர்த்தி அவனைவிட்டுப் போகவில்லை.

## II

# பெண்ணுலகு

ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களது அமிர்த மொழிகளின் ஓர் பகுதி :—

பெண்ணுலகு பெண் ஒரு பாதி, ஆண் மற்றொரு பாதி, இரண்டுஞ் சேர்ந்த ஒன்றே முழுமனிதத் தன்மை. அங்ஙனமாக வாழ்வின் ஒரு பாதி உரிமை கடிவது எத்தகை அறியாமை? உடலில் ஒரு பாதி குருதியோட்டங் குன்றினால் உடல் நிலை யென்னும்? பாரதமாதாவின் ஒரு பாதியாய பெண்ணுலகின் உரிமை கெடுத்தமையால், அவள் பக்க வாயுவால் பீடிக்கப்பட்டுக் கிடக்கிறாள். அந்நோய் நீங்கினாலன்றி அவளுக்கு உய்வில்லை.

***

"ஒத்த பண்பும் ஒத்த நலனும் ஒத்த. அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியுமுடைய ஒருவனும் ஒருத்தியும்" என்றார் நக்கீரனார். பெண்மகள் பண்டைநாளில் எல்லா வழியிலும் ஒத்து வாழும் உரிமை

36. மனத்தறிவுதானென்ன வந்து தருமென்னிலோ வஸ்துநிச்சயமது தரும்.

பெற்றிருந்தாள். அவ்வுரிமை யின்பத்தை மீண்டும் அவள் நுகருமாறு ஆண்மக்கள் நடந்துகொள்ளல் வேண்டும். பெண்ணுலகைக் கேட்டால் ஆணுலகுக்கும் பின்னை நாட்குமே ஊறு விளைந்துள்ளதை அன்பர்கள் கவனிப்பார்களாக. தாய்மைக்குரிய பெண்ணின் சிறுமை நாட்டின் சிறுமையாதல் இயல்பு. ஆதலால், பெண்ணலன் நாடவேண்டுவது நம் பெருங்கடமை.

***

பண்டைநாளில் ஆண்மகனோடு ஒத்த கல்வி பெற்றிருந்த பெண் இந்நாளில் அக்கல்வி ஏன் பெறுதல்கூடாது? நீண்டநாளாக நாட்டின் தாயாகிய பெண், கல்வி யிழந்தமையால் விளைந்த கேடுகள் எண்ணில; எண்ணில.

ஆண்மகன் 2, 3 பெண்களை மணஞ் செய்துகொள்வதும், பெண்மகள் உற்ற வயதடையா முன்னர் அவளைத் திருமணஞ்செய்து கொடுப்பதும், பெண்மகள் இளமையில் கைம்மை எய்தினால், வேறு களைகணின்றி, நரகிடை வீழ்ந்து வருந்துவதும், இன்னோரன்ன பிற நிகழ்ச்சிகளும் எத்தகைக் கொடுமைகள்! அன்பர்களே! உன்னுங்கள்; வழுக்கி வீழ்ந்த சகோதரிகள் நிலையை நினைக்கும்போது கண்ணீர் பெருகுகிறது. எல்லாத் துறைகட்கும் சாதி ஏற்பட்டதுபோல விபசாரத்துக்கெனவும் ஒரு சாதி நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. என்ன இழிவு! என்ன இழிவு! ஒருவன் ஒருத்தியுடனும், ஒருத்தி ஒருவனுடனும் வாழும் முறை ஏற்படல்வேண்டும்."

[இப்பொன்னுரைகளாலேனும் நாரியரும் நாடும் திருந்தி நலங்கொள்க. ப-ர்.]

## விநயம் அல்லது அடக்கம்

பிறர் நயமே கருதுபவர்களுக்கு எல்லா நன்மைகளும் தானே வந்து தோன்றும். அடக்கமுடையவனாய் இருப்பதனால் சில வருத்தங்கள் உண்டாவதாய்த் தோன்றினாலும், அவைகளுக்கெல்லாம் பின்னால் உண்டாகப்போகிற சிறந்த நன்மைகளே போதுமான ஈடாயிருக்கின்றன.

37. பூசிக்கு மப்பரமவஸ்து மேலா மித்ரபோக புண்யத்தைத் தரும்

# சிறுமணித்திரள்

(100-ம் பக்கத் தொடர்ச்சி.)

290. அதிர்ஷ்டம் என்பது எப்போதும் ஸ்திரமாக இருப்பதில்லை. அதிலும் எவ்வளவோ சொத்துக்கள் கிடைத்தும் இன்னும் பிறரை ஏமாற்றுவதிலேயே புத்தியுள்ளவனுக்கு அதிர்ஷ்டம் எவ்வளவு சீக்கிரம் வந்ததோ அதைவிட சீக்கிரமாக நசித்து விடுகிறது.

291. வஞ்சக புத்தியுடனும் சுயலாப திருஷ்டியுடனும் பிறருக்கு விருந்து படைப்போன் அந்தசமயம் லாபமடைந்தாலும், பிறகு அதற்கு இரட்டிப்பான நஷ்டத்திற்குப் பங்காளியாக இருப்பான்.

292. பிறர் தன்னை நம்பும்படி செய்து மயக்கிவிட்டு அப்பால் தன் காரியம் ஆனதும் மெதுவாக நழுவிக்கொண்டு பிறரை அலறவைப்பவனைச் சீக்கிரமே தெய்வம் அவன் வாழ்வில் அலறவைத்துவிடும்.

293. நிலைமை மகோன்னதமாக உயர்ந்தென்ன செய்ய? ஆதியில் அல்ப ரூபாய் சம்பளத்திற்குத் தாளம் போட்ட காலத்தில் இருந்த அற்ப புத்தியே தான் இப்போதும் இருக்கிறது. எவ்வளவு தான் அதை மூடிவைத்த போதிலும் தெரிந்து விடுகிறது.

294. பொறாமை என்பது அவனைப்போலத் தானும் அந்தக்காரியத்தை நிறைவேற்ற முடியாதென்று தோற்றுகிற பலஹீனமான இடத்தில்தான் தலைவிரித்தாடுகிறது.

295. திருப்தியடையாத மனுஷ்யன் அக்கிரமத்தில் கை நனைப்பான். அக்கிரமம் அதிகரிக்குந்தோறும் அவன் ஆயுள் க்ஷீணித்துக்கொண்டேவரும். முடிவில் தன் கண்முன்பே ஸர்வநாசமும் கண்டு நடுங்குவான்.

296. உத்தமர்களை வஞ்சித்த ஒரு பாவம், தன் செல்வாக்கினால் அவர்களை இழிவாகப் பேசின தூஷணைகளின் பலன், நல்லோர்கள் தங்களின் பாக்கிக்காக ஆயிரம் முறை தன் வீட்டுக்கு அலைந்து அலுத்து நொந்த துடி துடிப்பு—இவற்றின் தோஷங்களே இப்பொழுது தன் பணத்தைப் பாழுக்கு இறைத்து விருதா செலவில் வீணாக்க வைக்கிறது.

297. மற்றவன் உனக்குக் கெடுதிசெய்தானென்றும், துரோகம் புரிந்தானென்றும் ஆத்திரப்படுகிறாய். நீ இதுவரையில் எத்தனை பேர்களைக் கண்ணீர் விடும்படியும் கலங்கும்படியும் செய்திருக்கிறாய் என்பதற்கு ஒரு சிறு கணக்குபோட்டுப் பார். அப்போது எவனைத் தூஷிக்கிறாயோ அவனை விட நீயே படுபாவியாக இருக்கலாம்.

298. முகம்மது கஜனி என்ற முஸ்லிம் வேந்தன் ஏராளமானசெல்வங்களைக் குவித்து விட்டு, அந்தியத்தில் ஐயோ இவற்றையெல்லாம் விட்டுப் போகிறேனே யென்று அலறி அழுதான். ஹே அக்கிரமப் பிரவர்த்தகனே! முடிவில் உன் கதியும் இவ்விதமே.

38. பன்றி பல குட்டிகளை யீனல் போலுலகினிற் பலமக்கள் பெற்றுமென்ன?

299. "என் தாது உன் கையில்தான் இருக்கிறது. ஈசா! காப்பாற்று."
மகாத்மா.

300. குழந்தை தன் சிறுவிரலைச் சப்பிக்கொண்டு அதுவே தாயின் பாலினுடைய சுவையென ஏமாறுகின்றது. ஸாரமற்ற லோக சுகத்தை நம்பும் மாந்தரும் அவ்விதமே.

301. "நம்மாலாவது நமது சாமர்த்தியத்தாலாவது எதுவும் நடப்பதில்லை. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் எனக்கருதி மிதமிஞ்சிய உழைப்பிலிருந்து விலகி சக்தியானுசாரம் வேலை செய்வதே நலம்."
ஜே. ஆர். ரங்காராஜு

302. டில்லி:—22-2-1927. சாந்திதேவி இன்று கோர்ட்டில் தமது குழந்தைகளை அவற்றின் தந்தையிடம் கொடுக்கும் பொழுது—"ஆண்டவன் ஆக்ஞையால் எனக்குக் குழந்தைகள் கிடைத்தன; மனுஷ்யனுடைய சட்டத்தினால் அவை என்னைவிட்டுப் பிரிய நேர்ந்தன" எனக் கூறிக் கதறினள். ஈன்ற வயிற்றுக்காரிக்குத் தன் குழந்தை சொந்தமாகக் காணோமே!

303. ஒரு கடிதத்தின் ஆரம்பம்:—"என் அகத்தே என்றுங் குடிகொண்ட என் இனிய வாழ்வே! வாழ்வின் ஒளியே! என்னுள்ளங் கவர்ந்த பெருமானே! மறந்ததென்னே? மறப்பதுஞ் சரியோ? மறக்கவும் கூடுமோ? சென்ற நாட்களை நினைந்து நைவதோ? சென்றன சென்றனவே என்பதோ? நீதி யுடையார்க்கு இது நீதியோ?—அறமேயோ? தாங்கள் மறப்பினும் என்னால் மறக்க இயலவில்லையே! தங்களிடத்து என் அகமும் ஆவியும் கலந்தமைபோன்று பிறிதோரிடத்திற் கூடவில்லையே!"

304. பத்திராசிரியர்களும், நூலாசிரியர்களும் சற்றுத் தூர விலகி நின்றால்தான் வாசனையும் மதிப்புமாம். ஏனெனில் அவர்களுடன் அதிகம் கலந்து கொண்டுவிட்ட சிலர் அவர்களின் பெருமையை யறியாமல் அவர்களை சாமான்யமாகக் கருதிக் கேவலப் படுத்தத் தொடங்கிக் கொள்ளுவதால்தான்.

305. ஒருவரது ஸந்தேசம்:—"புண் மனத்தேன் ஆயினேன் யான். சிறு துயரம் ஒருநாள்—சிலபோது—படுவார் ஞாலமீது. என்றுமே அஃதாயின் இன்ப நுகர்வை எஞ்ஞான்றோ? நன்மை செய்தார் நலம் பெறுவரென்பார். அல்லலே காண்கின்றேன்—அனைத்தும் என்பால் பெற்றவர் தம்மிடத்திருந்தே. செய்து செய்து செல்லரித்ததன்றி செழுமை யுணர்கிலேன்! சிறுமைக்கே இடனாயினேன்."

306. தர்மத்தின் மூலமந்திரம் எது? அதுதான் தியாகம்.

307. இதை மறந்தால் ஒன்றும் நடக்காது. இதை உணர்தால் எல்லாம் கைகூடும். அது என்ன? அதுதான் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலே பிரவகித்து நிற்கும் அன்பு. அந்த அன்புதான் இல்வாழ்க்கைக்கு ஏற்ற காந்தமாகும்.





308. "ஸ்திரீகளை அவமதிப்பதை நான் சகிக்கவில்லை. ஒழுக்க ரீதியில் நியாயமாக விருக்கும் ஒரு காரியம் சட்டப்படி அநியாயமாகாதென நான் நிச்சயமாய் நினைத்தேன்."
—ஒரு வாக்கு மூலம்

309. காலப்போக்கு வழியில் என்னென்ன மாறுதல்கள் நேர்ந்திருந்தாலும், ஸத்தியம், தர்மம் முதலான மேலான நோக்கங்கள் இந்தியர் மனதை விட்டு நீங்கவே நீங்கா.

310. வேதம் நெறி பிறழ்ந்தாலும், கடல் நிலத்தைக்கொண்டாலும், மலை நிலை கலங்கினாலும்—சொன்ன சொல்லை மாற்றுவது என்பது மட்டும் கூடாத காரியம் என்பதாகக் கொண்டு சொல்லுறுதியுடன் நடப்பதே தருமம் என்பது இந்தியமக்கள் தொன்று தொட்டு அறிந்துவந்த ஒழுக்க முறையாம்.

(தொடரும்.)

---

பிறர்சொல்லிய ஒரு விஷயம் தன் மனதுக்குச் சரியென்று தோன்றினுங் கூட, ஆத்திர சிந்தையால் அதை மறுக்கப் புகுவோருக்குப் பதில் சொல்லிக் கொண்டிருப்பது அனாவசியம். அவர்களே கூச்சலிட்டு ஓய்ந்துபோகும்படி விட்டுவிடுவதே யுக்தம். தர்க்கத்திற்கு விடை கூறலாம். குதர்க்கத்திற்குப் பதில் சொல்லிப் பயனில்லை. ஒருவகையிலேனும் ஒப்புக்கொள்ளக் கூடியவைகட்கு ஆக்ஷேபமேனோ?

## விஷமித்துப்போன நெஞ்சு

ஒருகாலம் அன்பாயிருந்து பிறகு விஷமித்துப்போன நெஞ்சினர் மற்றவர் எவ்வளவு அன்பாக நடந்துகொண்டபோதிலும், சொட்டுச் சொல்லும் பேதபுத்தியும் குத்துவார்த்தைகளுமே அதிகமாகக் கொண்டு, பிரிந்த தன்மையே மிகுதியும் காண்பித்து, வெறுக்கிற மனதே அதிகமாகி வெளிக்குமட்டும் ஒப்பாரித்தன உபசாரவித்தை படிப்பார்கள். எவ்வளவு ஜாக்கிரதையுடன் நடந்தாலும் அந்த விஷமித்துப்போன நெஞ்சு, அங்குங்கூட ஒரு குற்றத்தைத் தோற்றுவித்து 'சுன்' என்று படவைக்கும். இவர்களின் மாறிய மனதைத் திருத்த எவராலும் முடியாது.

# கவிதா விலாஸம்



ராஜீய உலகில் சஞ்சரிக்கும் நமது தமிழ் நாட்டுச் சகோதரர்களில், கவிராயர்-சுப்பிரமணிய பாரதியாரை அறியாதார் அநேகமாக ஒருவரும் இரார். பாரத நாட்டின் ஒப்பற்ற அழகு, பெருமை, நம்முன்னோர் வாழ்ந்த சிறப்பு, தற்காலச் சிறுமை ஆகிய இவற்றைப் புதிய புதிய ராகங்களில், புதிய புதிய கருத்துகள் அமைத்து அச்சிறந்த புலவர் பாடியிருக்கிறார். சதா துன்பக் குழியில் ஆழ்ந்து சோம்பிக்கிடக்கும் நம் சகோதரர்களுக்கு அவர் ஓர்புதிய உணர்ச்சியைக் கொடுத்துத் தட்டி யெழுப்புகிறார். இது அவற்றுள் ஒரு கவி :—

### எண்சீர் விருத்தம்

சென்றதினி மீளாது மூடரே! நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனுங் குழியில் வீழ்ந்து
குமையாதீர்; சென்றதனைக் குறித்தல் வேண்டாம்
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவிர்
எண்ணமதைத் திண்ணமதா யிசைத்துக் கொண்டு
தின்று விளையாடி இன்புற் றிருந்து வாழ்வீர்
தீமையெலாம் அழிந்துபோம் திரும்பி வாரா.

"மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்று நாம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்த அந்த மொழியை, அவர் எவ்வளவு நன்றாக அலங்கரித்து அதை நமக்குத் திருப்பிக் கொடுத்திருக்கிறார் என்பதைப் பாருங்கள் :—

### அறுசீர் விருத்தம்

பேயா உழலும் சிறு மனமே!
பேணு யென்சொல் இன்றுமுதல்
நீயா ஒன்றும் நாடாதே
நினது தலைவன் யானேகாண்
தாயாம் சக்தி தாளினிலும்
தருமம் எனயான் உரைப்பதிலும்
ஓயாதே நின்று (உ) ழைத்திடுதி
உரைத்தேன் அடங்கி உய்யுதியால்.

பெ. இராமாநுஜன்.

40. பின்றினையதாமென்று பின்னே தினை வினையைப் பிறந்தா விருத்தமென்ன?



## II

## முருகர் பதிகம்

*அறுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.*

க. திருவார் முருகா பிரணவமுன் தேர்ந்தே யுரைத்த தேசிகனே
மருவார் சடையான் திருக்குமரா வடிவே லுடைய மாபதியே
குருவார் குடமா முனிக்கிசையே குலவுந் தமிழை யுரைகுகனே
பொருவார் அவுணர் பகைமுடித்த போதா கடைக்கண் பார்த்தருளே.

உ. பொன்னார் திருநன் மேனியனே பொலியீரா று காத்தோனே
மின்னார் வடிவே லுடையோனே வீரக் கழல் சேர் வித்தகனே
தன்னார் அமுதே கருணைமலர்த் தடமே அன்பர் பாலிங்கா
தன்னார் அகத்தே தானிருக்கும் அருள்சேர் திருநேத் திரகுகனே.

ங. பொருவார் அவுணர் களைச் செகுத்துப் புரந்த ரன்சீர் தானளித்த
திருவார் முருகா சுரருவக்கும் திறல் சேர் தொளிர்மூ விருமுகனே
உருவார் மயில்மா வாகனனே ஒண்டா மரைப்போ தாமிணைதான்
வருவார் தொழுவா ரவர்கட்கு மதிநன்கீயும் பெம்மானே.

ச. கார்மே கந்தான் வரக்கண்டு களித்தே மயில்கள் ஆடுதல்போல்
ஆர்மே தினியில் ஆன்மாக்கள் அகத்தே மகிழ்கொண் டார்ப்பதற்குப்
பார்மே லெழுந்த தேசிகனே பானூர் தந்த சேயோனே
சீர்மே விடுநற் பொற்பதியாம் திருச்செந்தூர்வாழ் செவ்வேளே.

ரு. செம்மை மேனிச் சிவனார்நேத் திரத்தி லுதித்த சண்முகனே
அம்மை வள்ளியுடன் அரியின் அழகார் மகளை மணந்தோனே
எம்மை யினுமின் முன்மறவா வெனையாண் டருள்வாய் ஏத்துசுரர்
தம்மைப் புரந்த தயாநிதியே தண்டார் அணிந்த குமரேசா.

சா. கந்தா காருண்யக் கடலே கற்ப தருவே காங்கேயா
அந்தார்க் களிற்றி னிளையோனே ஆர்ந்த ஞான வடிவோனே
சிந்தா குலத்தை நீயகற்றிச் சிறந்த கல்வி யெனக்கருள்
வந்தா தரிப்பா யடியேனை வடிவே லுடைய மாதேவே.

எ. ஒருகால் முருகா வென்பவர்க்கு முற்ற கவலை யொழிப்பவனே
இருகா விரதம் கொண்டவட்குத் தீமை யகற்றிக் கையளித்த
அருமா மறைதேர் அறுமுகவா அடியார் வேண்டும் பொருளெல்லாம்
தருவாய் அமரர் காவலனே தகுநின் றொளிர்மந் திரத்தானே.

41. பிடாரிபோற் புருடனோடு தெருவெலாஞ் சண்டைசெய் பெண்டிருந்து மென்ன?

௮. விண்ணோ ரமுதே நற்பாகே விழையுங் கனியே கற்கண்டே
தண்ணா ரகத்தாய் அருட்கடலே தயையிற் சிறந்த பன்னிரண்டு
கண்ணார்தேவே கண்ணிலுறு கருமா மணியே கண்மகிழ் செவ்
வண்ண சேவற் கொடியானே மருவார் கடம்பா வந்தானே.

௯. அண்டர் போற்றும் பெம்மானே அரக்கர் தாளை அழித்தவைவேற்
கொண்ட கரத்தோய் குலவுதமிழ்க் குகனே தினமும் அடியாவுக்
தொண்டர் மனத்தி விருளகற்றும் சுடரே தொண்டர்க் குறுதுணைவா
பண்டைத் தமிழால் பலரேத்திப் பண்கொண்டிசைக்கும் பரைபாலா.

௰ ஒப்பே யில்லா நன்மணியே உயர்வாம் ஞான தேசிகனே
செப்பற் கரிய பரம்பொருளே சீரார் பாதம் பாவுவர்க்கு
எப்போ தினுமின் பளிப்பானே எழிலே மிகுந்த தனிவடிவோய்
தப்பே அடியேன் புரிந்தாலும் தயவா யெனையாட் கொண்டருளே.

திரு. வ. ஏகாம்பரன்.

---

வர்ணங்களெல்லாம் மூன்றுபேதத்தில் அடங்கும். மூன்றுபேதமாவன :- பொன்மை, செம்மை, நீலம் என்பன. இவற்றின் கலவையே மற்றைய நான்குமாம். ஆரிய சாஸ்திரமும் வர்ணத்தை சத்துவம், ரஜஸ், தமஸ் என மூப்பாற்படுத்தும். சத்துவ நிறம் பொன்மையும் வெண்மையுமாம். ரசோ வர்ணம் செம்மையாம். தமோ வர்ணம் நீலமும் கருமையும் எனப்படும். ஆரியசாஸ்திரப்படி சோதி என்றும், தேயுவின் காரியமாகிய தேஜசு என்னும்சோதியென்றும் ஆக இரண்டாம். இத்தேயுவின் காரியமாகிய சோதியையே ஐரோப்பியர் லயிட் (Light) என்னும் சொல்லால் வழங்குவர். தேயுவென்பது அக்கினி மூலபூதம்.

## ஒருவரது குணம் கண்டறிய

ஒருவருடைய தன்மையைப்பற்றி யாதொன்றும் அறியாதவர்களாய் இருந்தாலும், அவருடைய முகத் தோற்றத்தினாலேயே நன்மையோ, தீமையோ, அவருடைய குணம் இததன்மையதென்று நன்றாகத் தீர்மானிக்கலாம். ஒருவனது உள்ளக் கருத்தை உணர்வதற்கு அவன் முகம் அதன் சித்திரம் போலவும், ஒருவனின் இருதயத்தைக் காண்பதற்கு அவன் கண்கள் கண்ணாடிபோலவும் இருக்கின்றன.

45. ஆத்திரப் புத்தியினர் தவறித் துயர வாரிதியில் வீழ்வர்.




ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரின் வசம் இந்தியா இருந்த காலத்தில் இத்தேசத்தில் என்னென்ன விசித்திரப் பொருள்கள் உண்டோ அவ்வளவையும் இங்கிலாந்துக்குக் கொண்டு சென்றுஒரு பொருட்காட்சிச்சாலையமைப்பதாயினர். அந்தந்த அரசர்கள் தோல்வியடைந்தபோது கிடைத்தவைகளை யெல்லாம் இப்பொருட் காட்சிச்சாலையில் சேர்ப்பித்தனர். அவற்றில் மைசூரில் திப்பு சுல்தான் அரசாண்டுவந்த காலத்தில் தன் விநோதத்திற்காகச் செய்வித்த அற்புதமான வேங்கையும் ஒன்றாகும். அந்த வேங்கை ஒரு இங்கிலாந்துப் போர்ச் சேவகனின்மீது பாய்ந்து கடித்துப் பீறுவதுபோல் மரத்தினால் செதுக்கி வெகு விநோதமான சித்திரவேலைகளுடன் முடிக்கப்பட்டிருந்தது. இதுவன்றியில் அதின் வயிற்றில் ஒரு யந்திரமுண்டு. மேலே வைத்திருக்கிற திறவுகோலை முடுக்கினால் புலி மனிதன் மேல் பாயும்படி உறுமுவதுபோலவும், அதைக்கேட்டு மனிதன் சிணுங்கி அழுவதுபோலவும், இரண்டுவகையாய்த் தொனி கிளம்பும். திப்புசுல்தான் தான் கண்டு களித்துவந்த இன்பமான விநோதங்களில் இதுவும் ஒன்று. அவர் அரசாக இருக்கையில் புலி மனிதன்மேல் பாய்வதாகவும் அதைக்கண்டு பகைவர்புலம்புவதாகவும் நினைத்துப் பேரானந்தமடைவார். அந்தப் பெருமை பொருந்திய புலியை 1794-ம் வருஷத்தில் சீரங்கப்பட்டணத்தில் திப்பு தோல்வியடைந்தவுடன் அவரது அரண்மனையிலிருந்து எடுத்து இங்கிலாந்திலுள்ள இந்தியப் பொருட்காட்சிச்சாலைக்கு அனுப்பினர்.

* * *

பம்பாய் நகரில் வசிக்கும் பார்ஸி ஜாதியார் மஹம்மதியரின் படையெடுப்புக் காலத்தில் பாரஸீகதேசத்தைவிட்டு பம்பாயில் குடியேறினரென்று சொல்லப்படுகிறது. பாரஸீகர்களில் யாராவதொருவன் இறந்துபோவானானால் அப்போது அவன் பக்கத்தில் ஒரு நாயை வைத்துக்கொண்டிருப்பார்கள். அந்தப் பிராணபாய காலத்தில் அவனுடைய பிராணனைக் கொண்டுபோகக் காத்திருக்கிற கெட்ட தேவதைகளை நாய்கள் ஓட்டிவிடுவதாய் அவர்களின் கொள்கையாம். இப்படி அவர்கள் நாய்களை மேலாய்க் கொண்டாடுவதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அவர்களுடைய முன்னோர்கள் சுதேசத்தைவிட்டுக் குடி பெயர்ந்து இந்தியாவுக்கு வருகையில் ஒரு ராத்திரி காடாந்தகாரத்தில் அவர்கள் ஏறிவந்த கப்பல் கூர்ச்சர தேசத்துக் கரைதட்டி அபாயம் நேருகிற தருணமாயிருப்பது கண்டு அந்தக் கப்பலில் இருந்த நாய்கள் அவர்களுக்கு எச்சரிக்கை செய்தனவாம். அதே காரணமாக அந்த ஜாதியார் பரம்பரையாய் நாய்களைக் கொண்டாடி வருகிறார்கள்.

42. நன்றிதனை நினையாது தீமையே புரிதற்கு நட்போரிருந்துமென்ன ?

பார்ஸி ஜாதியாருள் எவனாவது ஒருவன் மரித்தவுடனே அந்த உடலைச் சுத்தமான பழைய துணியால் சுற்றி இருப்புப்பாளையில் விட்டுச் சமாதிஸ்தானத்தில் கொண்டுபோய் அப்படியே வைத்துவிடுவார்கள். புதைப்பதுமில்லை, கொளுத்துவதுமில்லை. மூன்று நாள்வரையில் அன்னாகாரங்களைக் கொண்டுபோய்க் காட்டுவார்கள். அம்மூன்று நாளும் அந்த உயிர் மறுபடியும் அந்தத் தேகத்திலேயே வந்து சேரும்படி முயற்சி செய்கிறதாக அவர்களின் கொள்கை.

***

பாரஸீகர்களுடைய சமாதிகள் மிக்க விசித்திரமானவை. அந்த சமாதிகளுக்கு ஓசையற்ற கோயில் என்று பெயர். அவைகள் மேலே மூடாமல் குண்டாய் வளைத்து இரண்டு மூன்று அறையாய்க் கட்டியிருக்கும். அவைகளுள் மேற்றட்டு புருஷர்களுக்கும், இரண்டாவது பெண்களுக்கும், மூன்றுவது சிறு பிராயத்தினர்களுக்கு மாகக் கட்டியவை. அதில் கிணறுபோல் உள்ளே இறங்க வட்டமாய்ப் படி கட்டியிருக்கின்றது. யாராவது ஒருவன் இறந்தவுடனே அதில் கொண்டுவந்து வைத்துவிட்டால், அங்கே காத்திருக்கிற கழுகுகள் ஓடிவந்து அவ்வுடலைப் பிடுங்கத்தலைப்படும். முதல் முதல் கண்ணைப் பிடுங்கினுல், அந்த ஆத்மா நல்ல கதி யடையுமாம். மாமிசங்களையெல்லாம் பக்ஷிகள் பிடுங்கிப் புசித்தபின் எலும்புகளை யெல்லாம் அடித்தளத்தில் தள்ளிவிடுகிறுர்கள். அங்கே எலும்புகள் அதிகமாய்ச் சேர்ந்துபோனுல், அவைகளை வாரிக்கொண்டுபோகக் கீழே ஒரு வழி ஏற்படுத்தியிருக்கிறது. பாரஸீகர்கள் அதிபரிசுத்தமான நெருப்பில் அசுத்தமான உடம்பைப்போடக் கூடாதாகையால் கொளுத்துவது நியாயமன்று என்பர். நாம் பிழைத்திருக்கும்போது நமக்குப் பல பொருள்களைக் கொடுத்த பூமியைப் பிணத்தைப் புதைத்துக் கெடுக்கலாமா என்பர். ஆகையால் அவர்கள் தகனம்செய்வதுமில்லை. புதைப்பதுமில்லை. பாரஸீகர்கள் என்னதான் உடைகளில் மாறினுலும் தங்கள் ஜாதிக்கு அடையாளமான தலைப்பாகை அல்லது தொப்பியை மாத்திரம் விடார்.

***

பொறுமையும் க்ஷேமமும் புத்திசாலிகளுக்கே உரித்தானதென்றும் பேச்சு குறைவாயும் புத்தி நிறைவாயும் இருக்கவேண்டுமென்றும் நெப்போலியன் சொல்லுகிற வழக்கம். ஒரு மனிதன் அவனிடம் சென்று "பகல் முழுதும் வேலைசெய்தேன், வேலை முடியவில்லை, வீட்டிற்குப் போகிறேன்" என்றுன். அதற்கு நெப்போலியன் "அடே மூடா! இரவு எங்கேபோயிற்று? வேலையை முடிப்பதுமுக்கியம். காலம் ஒன்றைத்தவிர, நீ எதைக்கேட்டாலும் தருவேன். நித்திரை செய்யப்போகிறேன், எனக்கு ஓய்வுகொடு என்று மட்டும் கேளாதே. காரியத்தை முடித்துப்போ" என்றுன். இது நெப்போலியனின் விடாமுயற்சியைக் குறிக்கின்றது. ஒரு சமயம் சமாதானம் செய்வதற்காக ஜெனரல் கிரார்க் என்பவர் நெப்போலியனிடம் சென்றபோது அவன் 'நான் சொல்வதைக்கேட்டு நடக்க இஷ்டமானுல் உன்னிடம் எனக்கு ஸந்தோஷமுண்டாகும். அதற்கு இணங்காவிட்டால் உடனே இவ்விடமிருந்து போய்விடலாம்' என்றுன். உலகப்புகழ்ச்சியை ஒருபோதும் நம்பலாகாதென்று நெப்போலியன் சொல்வதுண்டு. ஆஸ்திரியா, புருஷியாமுதலிய தேசங்களை

43. நல்லவழியினடவாது சூதுசெய் யேவலர்கள் சாலெட்டிருந்துமென்ன?



ஜெயித்து அவன் பிரான்சுக்குத் திரும்பிவந்தகாலையில் பாரீஸ் நகரத்து ஜனங்களெல்லாம் அவனை எதிர்கொண்டழைத்து உபசரித்து ஆர்ப்பரித்தனர். நெப்போலியன் சிறிதேனும் அதை லக்ஷியம் செய்யாதவனுய்ச் சற்று சந்தோஷங்கூடக்கொள்ளாமல், "இப்பொழுது ஆர்ப்பரிக்கும் ஜனங்கள் என்னைத் தூக்கு மரத்திலேற்றும்போதும் இம்மாதிரியே ஆரவாரம் செய்யப் பின்னடையார்க" ளென்றுன். சைன்னியங்கள் படும் அவஸ்தையைத் தானும் பட்டு, அவர்களுடன் தானும் நடந்து, தன்னை உயர்வாக மதியாமல் எல்லோரிடமும் சமமான பிரீதிகொண்டிருந்ததால் சேனையிலுள்ள ஒவ்வொரு வீரரும் அவனிடம் அதிக விஸ்வாசம் பாராட்டினுர்கள்.

***

ஆக்ஸோன் என்னுமிடத்தில் நெப்போலியன் ஒரு நாவிதன் வீட்டில் தன் வாசஸ்தலத்தை வைத்துக்கொண்டிருந்தான். வெகு நாள் கழித்துப் பிரான்சியதேசத்து சேனுதிபதியாகி அந்த நகரின் வழியே வரும்போது தான் முன்பு குடியிருந்த நாவிதனின் வீட்டுக்குச் சென்று, "அங்கே சில நாளைக்குமுன் நெப்போலியன் என்றொருவன் குடியிருந்தானு" என்று கேட்க, அதற்கு அங்கிருந்த நாவித ஸ்திரீ, "ஆம், அப்பேருள்ள ஒருவன் இருந்தான்; எப்போதும் கதவை மூடிக்கொண்டே உட்கார்ந்திருப்பான். உற்சாகமாயிருப்பதில்லை; வெளியே வந்தால் யாருடனும் பேசுகிறதில்லை" என்று சொல்ல, நெப்போலியன் அவளை நோக்கி, "உன் இஷ்டப்படி நான் உற்சாகமாய் இருந்தால் இத்தேசத்து ஜெனரலாக ஆயிரேன்" என்று சொல்ல, அவளும் அங்கேயிருந்த மற்றவர்களும் மிகுந்த ஆச்சரியமடைந்தனர். இது நெப்போலியனின் ஸ்வபாவத்தை விளக்குகின்றது. மேதாவிகளான பெரியோர்கள் வாயாடிகளான மனிதர்களின் முன்னர் ஊமைகளைப்போலவே தோன்றுவர். அவர்கள் வெளிப்பார்வையில் செயலற்றுச் சோம்பி நிற்பதுபோற் காணப்படினும், அவர்களின் ஹிருதயம் ஒரு பெரிய காரியத்தில் திருஷ்டியாய் யோசித்துக்கொண்டிருக்கும்.

***

தென்னுப்பிரிக்காவில் 1900-ம் வருஷத்தில் நடந்த போயர் யுத்தத்தில் ஜெனரல் ஜோபர்ட் என்ற போயர் சேனுதிபதி யுத்தமத்தியில் இறக்கும்படி நேர, அந்த சமயம் அவர்—"ஹா! என் ஏழை தேசமே! என் ஏழை ஜனமே" என்று சொல்லிக்கொண்டே ஆவி பிரிந்தார். தேசாபிமானம் என்றுல் என்ன என்பதை இத்தகைய மகா புருஷர்களிடமிருந்து தெரிந்து கொள்ளவேண்டுமே தவிர, வாக்குகள் (ஓட்) விரும்பி அதற்காகக் கைப்பணம் செலவிடுவோரிட மிருந்தன்று.

44. சிறுகார்யமுந் நீரமுன் விசாரியாமல் செய்யார்க ளறிவோர்

| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | விகடப்<br>பிரதாபன்<br>(Registered.) | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |
|---|---|---|

# பணப்பேய்ச் சித்தர் பாடல்!



வந்தீர்களா! வாருங்கள் வந்தனம்; போகிறீர்களா! போங்கள் மங்களம்—என்று வீடு தேடிவந்தவர்களுக்கு மனச்சலிப்போடு ஒருகூழைக்கும்பிடுவந்தனமும், வீடுவிட்டுப்புறப்பட்டுப் போகிறவர்களுக்கு அதை ஆவலுடன் எதிர்பார்த்த வீட்டுக்காரர்கள் அவர்கள் செல்வதையே தங்களுக்கு ஒரு மங்களமும் ஒரு பளுவு தீர்ந்த சங்கதியுமாகக் கருதிக்கொண்டு அவர்களைப் போய்வரும்படி சொல்லி வழியனுப்புகிற உபசரிப்பான தந்திரமும் மிகுதியாக நடமாட்டத்திலிருக்கும் இந்த நாளில் விகடன் ஒரு பொல்லாத பணப்பேயைக் கண்டதும், அது விண்டதும், அதற்கு மேல் விகடன் விடைகூறத் தயாரானதுமான வரை சென்றசடவை விவரித்தேனல்லவா? அதற்குப் பின் இந்த விகடன் என் விகடஞான போதத்தை நன்னூல் இலக்கணத்தைத் தள்ளி என் விகட இலக்கணத்தில் கொட்டத் தொடங்கிக் கொண்டதை இங்கு ஆரம்பித்துக்கொள்கிறேன்—கேட்கிறீர்களா அதை!

***

அ! ஆ! பொல்லாத—பணப்பேய்—அகப்பட்டுக்கொண்டாயே!
ஓ! ஓ! நான் விகடன்—பணப்பேய்—தடி ஒளியாதே
பாடி யாடி வோடிவா—பணப்பேய்—பதுங்கிக்கொள்ளாதே (என்)
தடியைப் பார்த்தாயா—பணப்பேய்—தலையுடைத்திடுவேன் (என்)
கொடியைப் பார்த்தாயா—பணப்பேய்—(உன்) குண்டியில் குத்திடுவேன்
நீ கெட்டகேட்டுக்கு—பணப்பேய்—நீண்ட புகழுனக்கோ?
ஆ கெட்டேனே—குசப்பா—பணப்பேய்—அழும்பன் நீயல்லவோ?
சாமியை ஆட்டிடுவாய்—பணப்பேய்—சத்தியம் மாறவைப்பாய்

46. ஒருதிக்குமில்லாதபேருக்கு கன்மண மூவந்து செய்குவது தருமம்.



பூமியையும் வானத்தையும்—பணபேய்—புரன்தண்டங் கொடுப்பாய்
வேதம் விட்டு வேதம்—பணப்பேய்—வேண்டி குதிக்கவைப்பாய்
போதம் விட்டு போதம்—பணப்பேய்—பொய்யுரை கூட்டிவைப்பாய்
வேதங்களைக் கிளறி—பணப்பேய்—வெண்ணீரூற்றிடுவாய் (நீ)
ஜெபதப ஓமம்—பணப்பேய்—செய்தாலும் செய்ய வைப்பாய் (அந்த)
ஜெபம் ஓங்காமற்படி—பணப்பேய்—தட்டுகெட்டிடச் செய்வாய்
கோயில் குருக்களையும்—பணப்பேய்—கும்பிடு போடச்செய்வாய் (ஒரு)
பாவியே யென்றாலும்—பணப்பேய்—பாத்திரத் கேற்றிடுவாய்.

ஆண்டி சந்நியாசிகளும்—பணப்பேய்—அப்பா! பணமென்றால்
வேண்டி சரணம்பண்ணி—பணப்பேய்—மெல்லடி தாழவைப்பாய்
மூணுங் கெட்டவராய்—பணப்பேய்—முனிவரென்றாலும்
வேணும் துட்டென்று—பணப்பேய்—வேடிக்கை காட்டிடுவாய்
ஆசாபாசம்விடுத்து—பணப்பேய்—ஆண்டவன்போல் நடிப்போர்
காசாசைதான்பிடித்து—பணப்பேய்—கர்மிகளாக வைப்பாய்
வாய் பேச்சிலே மாத்ரம்—பணப்பேய்—மண்ணாசை விட்டோமென்பார்
ஆய் பார்த்தகல்யாணம்—பணப்பேய்—போய் பார்த்தாலே தெரியும்.

வைத்தால்குடுமியென்றும்—பணப்பேய்—(சி)றைத்தால் மொட்டையென்றும்
(நீ)வைத்தாலும் வைப்பாயே—பணப்பேய்—வாலறுத்தால் அறுப்பாய்
கொழுநன் பெற்றோரை—பணப்பேய்—கொன்றிடச் செய்திடுவாய்
சாமியில்லையென்றும்—பணப்பேய்—சபதத்தை மூட்டிவைப்பாய்
ஆணைபொய்சத்தியத்தை—பணப்பேய்—அஞ்சாமல் செய்யவைப்பாய்
பெற்றோர் சகோதரரை—பணப்பேய்—பேணாமல் பண்ணிவைப்பாய்
கொலைபகை வர்மங்களை—பணப்பேய்—கூசாமல் செய்யவைப்பாய்
வேசிகள் மேலாசை—பணப்பேய்—வெகுவாய் மூட்டிடுவாய்.

பொய்சாக்ஷி சொல்லவைப்பாய்—பணப்பேய்—புத்தியை மாற்றவைப்பாய்
அன்னியன் பெண்டிர்மேல்—பணப்பேய்—ஆசையை மூட்டிவைப்பாய்
ஒருவர் பொருளென்றால்—பணப்பேய் உப்பின்றி தின்னவைப்பாய்
பேன்களைப் பேணுக்கி—பணப்பேய்—பேனை பெருமாளாக்கி
சேனபணம் சேர்ப்பாய்—பணப்பேய்—திருடர்க்குத்தான் தொலைப்பாய்
எவ்வளவு சேர்த்தும்—பணப்பேய்—இதுபோதும் என்றொழியாய்
மொத்தம் சேர்ந்தபிறகு—பணப்பேய்—மோசம் வருமெனவே
ராப்பகல் தூக்கங்கெட்டும்—பணப்பேய்—லங்கணம் போட்டுவைப்பாய்.

புதையல் மேல்படுத்து—பணப்பேய்—பூதங்கள் காப்பதுபோல்
எதையும் கவனிக்காது—பணப்பேய்—இதையே சிந்தைவைப்பாய்
அண்ணன்தம்பி உறவோர்—பணப்பேய்—அடுத்து பார்த்திருந்து
என்றைக்கு கொல்லுவாரோ—பணப்பேய்—என்ற பயங்கொடுப்பாய்

47. உற்ற தொழிலுண்டாக்கி உரியசம்பாத்தியம் ஒருத்தர்க் களித்தல் தருமம்.

அங்காரங் கொள்ளவைப்பாய்—பணப்பேய்—அக்ரமஞ் செய்யவைப்பாய்
மோகத்தை மூட்டிவைப்பாய்—பணப்பேய்—முன்கண் மறைத்திடுவாய்
அறுத்த விரற்கு சுண்ணம்—பணப்பேய்ஐயோ— இடமாட்டாய்
செய்யாதுஞ் செய்யவைப்பாய்—பணப்பேய்—சிக்காதுதப்பவைப்பாய்.

பின்னிட்டு ஆடையின்றி—பணப்பேய்—பித்தன் போலாடவைப்பாய்
குண்டுணி கோள் உரைப்பாய்—பணப்பேய்—கூட்டிக்கொடுக்கவைப்பாய்
இன்றைக்கரண்மனையில்—பணப்பேய்—இருந்திடச் செய்திடுவாய்
அன்றைக்கேயோர் குடிசை—பணப்பேய்—அதில் இருக்கவைப்பாய்
நீதிநிலைகுலைப்பாய்—பணப்பேய்—நிச்சயத்தை மறுப்பாய்
அரசையடிமைகொண்டு—பணப்பேய்—ஆஸ்தான மூழ்த்திடுவாய்
அசையாது என்றுசொல்லி—பணப்பேய்—'அவுஸ்'களில் போடவைப்பாய்
அளவைதசொத்தெனினும்—பணப்பேய்—அபக்கென்று முழுங்கவைப்பாய்.

சூதாடி தோற்க வைப்பாய்—பணப்பேய்—சொந்தத்திற் கீயவிடாய்
'டபினார்ஸ்' 'பீட்டன்'கள்—பணப்பேய்—தடபுடாலாகவைப்பாய்
'மோட்டார்' 'பைஸிக்கல்'—பணப்பேய்—முடுக்காக ஏறவைப்பாய்
இருபுறம் லேடிகளை—பணப்பேய் இருந்திடச் செய்திடுவாய்
'பாலாட்'டம் 'கார்டன் பார்ட்டி'—பணப்பேய்—பலவேஷாய் ஆடவைப்பாய்
'அவ்-டு-யூ-டு' வென்று—பணப்பேய்—ஆனந்தம் பேசவைப்பாய்
பீர்-பிராந்தி-ரம்-விஸ்கி—பணப்பேய்—பெள்ட் ஜின்-ஷம்பொயினும்
கோலா ஜின்ஜர் ஹேல்—பணப்பேய்—குயினன்டானிக் ஆரஞ்ஜ்ஹேல்.

ஏரேடட் வாட்டர் ஐஸ்—பணப்பேய்—ஆடுமாடு இஸ்பஞ்ஜ்கேக் பண்ரொட்டி
ஹாமண்ட் பிஸ்கட் சர்பத்—பணப்பேய்—ஆடுமாடு கோழி
கூட்டம் பைகாட் பிரதர்—பணப்பேய்—கூடியே தின்னவைப்பாய்
தான்தேடாப்பொருளுக்குப்—பணப்பேய்—தானேது மாற்றுறைபோல்
தடபுடல் செய்யவிட்டு—பணப்பேய்—சட்டென்று போய்விடுவாய்
கைவறண்டானபின்பு—பணப்பேய்—கடன்கள் மேலுமிட்டால்
மானம் பொறுக்காமல்—பணப்பேய்—மயிர் போச்சுயிர் போனால்
என்று குளக்குட்டையில்—பணப்பேய்—இறக்கவீழ்த்திடுவாய்.

சொந்தோர் பசித்தோரை—பணப்பேய்—நோக்காதிருக்க வைப்பாய்
உண்ணுதடுக்காது—பணப்பேய்—உப்பு பாண்டத்தில் வைப்பாய்
முன்வட்டிக்காசைப்பட்டுப்—பணப்பேய்—முதலையிழக்கவைப்பாய்
இல்லாத எண்ணமெல்லாம்—பணப்பேய்—இப்போதே எண்ணவைப்பாய்
ஏமாற்ற அப்பொழுதே—பணப்பேய்—எங்கேயோ வோடிடுவாய்
லஞ்சக்கை ஏந்தவைப்பாய்—பணப்பேய்—லஜ்ஜைக்குள் மாட்டிவைப்பாய்
அஞ்சாநீரரையும்—பணப்பேய்—அடிமையாக்கி வைப்பாய்
முன்னே மறக்கடையில்—பணப்பேய்—மூக்காடு போடவைப்பாய்.

48. மாமண்டலத்திலே கற்புமிகு மாதர்களின் மகிமை யெவர் புகலவல்லார்!



அழகுபெண்தேடினவர்—பணப்பேய்—அகஞ்சோர்ந்த துன்னால்
B. A. M. A. L. L. D.—பணப்பேய்—பெரும் உத்தியோகம் செய்யும்
மாப்பிள்ளைவேணுமென்று—பணப்பேய்—மதித்த கன்னியர்கள்
ஆசை தோசைவடையாய்—பணப்பேய்—அம்பலத்தில்விடுத்தாய்
உன்மகிமையால் உள்ளுக்குள்—பணப்பேய்—உற்றரகசியங்கள்
வெளியே கிளப்பிவிட்டாய்—பணப்பேய்—மேல் நாற்றமாக்கிவிட்டாய்
வாழ்வுகள் கெட்டதுன்னால்—பணப்பேய்—மதிகுறைந்த துன்னால்
நோய்கொண்டாருன்னாலே—பணப்பேய்—நொந்தார்பலபேருன்னால்.

பித்தானார்களுன்னால்—பணப்பேய்—பிணமுமானாருன்னால்
ஐயோ சிவனேயென்று—பணப்பேய்—அழுகிறாருன்னாலே
எங்கே நீ போனாயென்று—பணப்பேய்—ஏங்கியழவும் வைத்தாய்
நீ செய்யுங்காரியங்கள்—பணப்பேய்—நினைக்கமுடியாது
எண்ணத்தொலையாது—பணப்பேய் ஏட்டிலடங்காது
வல்லானலாகாத—பணப்பேய்—வகையெல்லாம் நீ புரிவாய்
என்னென்று சொல்வேனான்—பணப்பேய்—எடுக்கிறேன் விகடன்
கடலைத்தரையாக்கி—பணப்பேய்—காட்டைக்கடலாக்கி.

மண்ணைமலையாக்கி—பணப்பேய்—மலையைப்பள்ளமாக்கி
குப்பையுயர வைப்பாய்—பணப்பேய்—கோபுரந் தாழவைப்பாய்
இணையில்லா சக்ரவர்த்தி—பணப்பேய்—ஏழையாய்ப் போகச்செய்வாய்
ஏழையை மற்றொருநாள்—பணப்பேய்—இந்திரனாக்கிடுவாய்
நனை ஏற்றிவைப்பாய்—பணப்பேய்—இட்டானைத் திட்டவைப்பாய்
தாழ்ந்தோனை உயரவைப்பாய்—பணப்பேய்—தனிகனைத் தாழவைப்பாய்
கற்புடை மாதர்களை—பணப்பேய்—கற்பிழக்கச் செய்யுவாய்
இன்னமும் என்னென்னமோ—பணப்பேய்—ஏறுமாறெல்லாஞ் செய்வாய்.

(வேறு)

உண்ணுவதுன்னாலே—பணப்பேய்—உறங்குவதுன்னாலே
சாஸ்திரங்களுன்னாலே—பணப்பேய்—சகமிருப்பதுன்னாலே
படையெடுப்ப துன்னாலே—பணப்பேய்—பவுஷங்களு முன்னாலே
ஒருவனுக்காய் பலபேர்—பணப்பேய்—ஒக்கமடிவது முன்னாலே
புருஷனைப் பறிகொடுத்துப்—பணப்பேய்—பூவைபுலம்புதலுன்னாலே
வீரசூரர் உன்னாலே—பணப்பேய்—விருதுகொடியு முன்னாலே
அரசனென்பது முன்னாலே—பணப்பேய்—அரசியென்பது முன்னாலே
நீதிஸ்தலமு முன்னாலே—பணப்பேய்—நியாயவாத முன்னாலே.

49. கூடசந்நியாசப் பேய்கள் மற்றுளோர் பேர்கெடுப்பார்.

கோர்ட்டுகச்சேரியு முன்னாலே பணப்பேய்—கூட்டங்கோஷ்டிகளுமுன்னாலே
வர்த்தகங்களும் உன்னாலே—பணப்பேய்—வணிகர் பிழைப்புமுன்னாலே
வாங்கினவிலை கூறுயல்—பணப்பேய்—வாயடி யடிப்பதன்னாலே
கட்டடங்களுன்னாலே—பணப்பேய்—கனகதண்டிகையுமுன்னாலே
சோதிடர்களுன்னாலே—பணப்பேய்—சுந்தரகவிகளுமுன்னாலே
பாடல்பெறுவது முன்னாலே—பணப்பேய்—பத்திரிகைகளு முன்னாலே
ஆட்டங்கூத்தும் உன்னாலே—பணப்பேய்—ஆலைகளு முன்னாலே
வயித்தியர்களு முன்னாலே—பணப்பேய்—மாந்திரீகர்களு முன்னாலே

மகன்மருமகன் உன்னாலே—பணப்பேய்—மாமியார் நாத்திமாருன்னாலே
அண்ணன்தம்பி யுன்னாலே—பணப்பேய்—அந்தந்த உறவுமுன்னாலே
பணத்தாலே பத்துவிதமென்பர்—பணப்பேய்—பார்த்தால்கோடிவிதமுன்னாலே
உயிர்கொல்லியென்று உன்னை—பணப்பேய்—உரைப்பதற்குஐயமில்லை
அறிந்துந்தன் மோசமெல்லாம்—பணப்பேய்—அகற்றுவோர் தானுமில்லை
இந்த அதிசயத்தைப்—பணப்பேய்—என்னென்பேன் நான்விகடன்
கோட்டிவித்தை கூட்டிக்கி—பணப்பேய்—குறித்திட்டாய் இப்படிக்கு
ஓடிவா எந்தனிடம்—பணப்பேய்—ஓம்—ராய்—சுபம்!—ஹு! சுவாஹா!!

---

இயேசு நாதர் தமது சிஷ்யர்கட்குச் செய்த உபதேசம்: கடவுள்பரமபிதா. மனிதர்கள் எல்லாம் ஸஹோதரர்கள் (The fatherhood of God and the brotherhood of men) என்பதாம். இவ்வுபதேசத்தைக் கவனிக்கவேண்டியது இயேசு நாதரின் கிறிஸ்து மதத்தைத்தழுவிய—தழுவச்செய்கிற ஒவ்வொருவருடையவும் இன்றியமையாத கடமையாகும். இதைப்போதிப்பதற்காகவே இந்திய கவர்ன்மெண்டார் நாற்பத்தைந்து லக்ஷம்ரூபாய்களை வருஷந்தோறும் செலவழிக்கிறார்கள். கிறிஸ்துமத போதகர்கட்குக் கவர்ன்மெண்டார் கொடுக்கும் பணம் இந்தியப் பொது ஜனங்களால் செலுத்தப்படுகிறது. ஆண்டுதோறும் 45-லக்ஷம் ரூபாய் செலவழிப்பதற்குப் பிரதிபலனாக மேற்படி குருமார்களின் உபதேசங்களை யேற்று ஐரோப்பியர்களும் பிறரும இந்தியர்களைச் சகோதரர்களாய்ப் பாவித்துப் பிரிது பாராட்டினால் வெகு நன்மையாயிருக்கும். அந்த பிரதி பலன் கிடைக்கவில்லையே யென்று வியஸனிக்கிறோம். இயேசுநாதரின் உபதேசப்படி இந்தியர்களை உண்மையான ஸகோதரர்களாகப் பாவித்திருப்பின் இதற்குள் இந்தியா ஸ்வராஜ்யம் பெற்றிருக்குமே.

## வீடு—ஒரு சிறைச்சாலையாதல்

சிறைச்சாலையில் கைதிகள் எத்துணை வித்யா பட்டதாரிகளாயிருப்பினும் அவர்களுடைய பட்ட கௌரவங்கள் மதிக்கப்படுவதில்லை. அவ்விதமே ஒரு வீட்டில் ஒரு பெண் தன் கணவனின் உத்தம குணங்களைப் பாராட்டி அதற்கேற்ப அவனை மதித்துக் கௌரவப்படுத்தாவிடில், அந்த வீட்டை அவனுக்கு ஒரு சிறைச்சாலைபோலவே அவள் ஆக்கிவிடுகிறாள்.

---

50. மகவு பெறு மருமையும் வளர்பின்னை யருமையும் மலடியறிவளோ?

# நெப்போலியனின் ஜீவிய காலம்

## II

(120-ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்படி யிருக்க, அவ்வாட்சிக்குத் தலைவனாயிருந்தவன் தோற்றுப் போகவே, நெப்போலியனைப் பிடித்துச் சிறைசெய்தார்கள்.
ஆயினும் அவன் எவ்விதமோ தந்திரமாய்ச் சிறையினின்றும் வெளிப்பட்டு
வீடுவாயில் இல்லாமல் வெளியே திரிந்து கொண்டிருந்தான். உடைமையும்
வறுமையும் ஒரு வழியில்லாதன்றோ? மறுபடியும் அதிர்ஷ்டம் அவன்பக்கத்தில்
வீசத் தொடங்கிற்று. அவனுடைய சாமர்த்தியங்களெல்லாம் அத்தேசத்
தாருக்கு முன்னமே தெரியுமாதலால், அவர்கள் அவனைத் தேடிப்பிடித்து
போர்ச்சேனைகளுக்குத் தலைவனாக நியமித்துக்கொண்டார்கள். அவ்வதிகாரம்
பெற்ற பிறகு நெப்போலியன் கலகக்காரர்களையெல்லாம் அடக்கிப் பகைவர்
களைவென்று, அத்தேசத்து அரசாங்கத்துக்குத் தான் இன்றியமையாத் துணை
யெனத் தெரியக்காட்டினான்.

***

இது நடந்த சில மாதங்களுக்குப் பிறகு (1796-ஞூ மார்ச்சுமீ)
நெப்போலியன் ரூபாவதியான ஓர் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு
அவளுடைய செல்வாக்கினால், இத்தாலியா தேசத்துச் சேனைகளுக்குத் தலை
வனாய் இருக்கும் ஓர் அதிகாரம்பெற்றான். அவனுடைய அதிர்ஷ்டம் நல்வழியில்
திரும்புவதற்கு இதுவே ஆரம்பமாயிற்று. ஒன்றின்பின் ஒன்றாய் அவன்சென்ற
இடமெல்லாம் சத்துருக்கள் தோல்வியடைந்து வெற்றியுண்டாகத் தலைப்
பட்டது. அவனுடைய வீர சவுரிய தைரிய பராக்கிரமங்களையும், சேனைகளை
நடத்துவதிலுள்ள சாமர்த்தியத்தையும் கண்டு அவன்பெயரைக் கேட்டளவில்
அவனுடைய எதிரிகள் எல்லோரும் அஞ்சினார்கள். ஒரு மாதத்துக்குள் அவன்
ஆல்ப்ஸ் மலையைக் கடந்துபோய்த் தன் படைகளைப் பார்க்கிலும் மிகப்
பெரிதான எதிரிப்படையைவென்று மூன்றுயுத்தங்களில் ஜெயம்கொண்டான்.
ஆஸ்திரியாதேசத்துப் படைகளை ஒரு செயலும் செய்ய வொட்டாதபடி அடக்கினான். ஸலடீனியா தேசத்துச் சேனையை எறக்குறைய முற்றும் நாசமாக்கினான். அதனால், இவ்வண்ணம் பிறதேசங்களிற் போய் ஜயம் பெற்று வெகு
சிறப்புடன் திரும்பிப் பாரீஸ நகரத்துக்கு வரும்போது, எப்படிப்பட்ட வீரர்
களுக்கும் மகா வீரன் இவனேயென்று ஆநந்தித்து அனைவரும் அவனைக்
கொண்டாடினார்கள். அவ்விதமான பெருமை முற்காலத்திலாயினும் தற்கால
த்திலாயினும் எத்தன்மையான போர்வீரனுக்கும் நடந்ததில்லை.

***

உலகத்துக்கெல்லாம் ஒளிதந்து அனைவருக்கும் மகிழ்ச்சியும் உல்லாஸமும் அளிக்கின்ற ஜோதிமயமான சந்திரனுக்கும் ஒரு களங்கமுண்டாயிருப்பது

---

51. தமிழ் மகிமை வித்வான்க டமதருமை வித்வானன்றி மற்றையோர் அறிவதுண்டோ?

போல், அத்தனை சிறப்பும் பெருமையுமாய்ப் புகழ்பெற்று வந்த நெப்போலியனுக்கும் அவ்வாரம்ப தசையிலேயே ஒரு களங்கம் உண்டாயிற்று. அதாவது, தான் அபஜயப்படுத்திய பிரஜைகளினிடத்தினின்றும் பொருள் பறிப்பதாம். திரவியம் ஒன்றுமாத்திரமேயல்ல, அவரவர்கள் தெய்வம்போலப் பாவித்துத் தங்கள் உயிரைப்பார்க்கிலும் பெரிதாக நினைத்துப் பரிபாலித்து வந்த சித்ரம், பிரதிமை முதலிய நிதிகளையும் அபகரித்தான். அவன் அவ்வாறு செய்ததனால் பிரஞ்சு தேசத்தாருக்கு ஒருவிதமான அபகீர்த்தி யுண்டாயிற்று. அவ்வண்ணமே நாநா தேசங்களிலுமுள்ள புதுமையான பொருள்களை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்க்கவேண்டுமென்ற பேராசைகொண்டு, அவர்கள் பாரீஸ்நகரத்தில் பல பொருட்காட்சிச்சாலையொன்று ஏற்படுத்தி, அதில் நெப்போலியன் அபகரித்துக்கொண்டுவந்த பொருள்களையெல்லாம் வைத்து அலங்கரித்தார்கள். ஆயினும் அப்பொருள்கள் நெடுநாள் அவர்கள் வசத்தில் இருக்கவில்லை. அநியாயமாய் அபகரித்துக் கொண்டுவந்த பொருள்களை யெல்லாம் பிரஞ்சுக்காரர் 1815-ம் வருஷத்தில் அவரவரிடம் திருப்பிக் கொடுத்துவிடும்படி நேரிட்டது.

***

பின்பு சிலமாத காலம் நெப்போலியன் அமைதியாய்ப் பாரீஸ் நகரத்திலேயே வசித்துக்கொண்டிருந்தான். ஆயினும் அவன் முதலில் ஒருதரம் வெற்றி பெறுவதில் உண்டான ரசத்தை ருசிபார்த்தவனாதலால் அமைதியாய் இருக்கப்பிடியாமல் பின்னும் பல இடங்களில் வெற்றிபெற வேண்டுமென விருப்பமுடையவனாகி, 4000-சேனைகளுடன் எகிப்து தேசத்தை ஜெயிக்க வேண்டுமெனக்கருதி அததேசத்துக்குச் செல்லக் கப்பலேறினான். அங்கிருந்து போகும் வழியில் மால்டா என்னும் தீவைப் பிடித்துககொண்டு, எகிப்துக்குப் போய் அங்கே ஒரு யுத்தம் செய்து அதில் ஜயமடைந்து ஸிரியா தேசத்தின் மேல் படையெடுத்தான். யோவா நகரத்தை முற்றுகைசெய்து அதன் குடிகளைக் கொலைபுரிந்து ஏகர் நகரத்தை முற்றுகை செய்ய முயன்றான். ஆயினும் ஸர் ஸிடினி ஸ்மித் என்பவரால் நடத்தப்பட்ட ஆங்கிலேயப் படைகளால் எதிர்க்கப்பட்டு எகிப்து தேசத்துக்குத் திரும்பி ஓடிப்போகலானான். அங்கே அவனுடைய சேனைகள் வழிநடப்பதனாலாகிய வருத்தம், பஞ்சம், கொள்ளை நோய் முதலிய துன்பங்களால் சங்கடப்பட்டனவென்றாலும், நெப்போலியனுடைய தைரியத்தினாலும், அவன் முன்நின்று மாதிரிகாட்டியதாலும் அபெகிர் நகரத்தில் மறுபடியும் ஒருயுத்தம் செய்து ஜெயம்பெற்றனன். இதற்கிடையில் அவனுடைய சேனையெல்லாம் நெல்ஸன் என்னும் சேனாதிபதியால் நடத்தப்பட்ட ஆங்கிலேயருடைய சேனைகளால் அநேகமாய் அழிக்கப்பட்டபடியால், ஒருவர்க்கும் தெரியாமல் நெப்போலியன் ஒளிந்தவண்ணமாகப் பிரஞ்சு தேசத்திற்கு ஓடிப்போகக் கப்பலேறினான். இது நடந்தது 1799-ம் வருஷம் அக்டோபர் மாதத்திலாகும். அப்படிப்போகையிலும் பிரஞ்சு தேசத்தார் அவனை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றுக் கொண்டார்கள். பின்பு ஒரு

52. சொல்லும் பணத்தருமைதான் மிகவதனையேதேடினோன்றி வருடம்



நால் அத்தேசத்தில் ஆட்சிமாறுதல் உண்டாக, அப்போது நெப்போலியனுக்கும் அத்தேசத்து ஆட்சிக்கு முதல் தலைவனென்றும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவ்வதிகாரம்பெற்று நெப்போலியன் அத்தேசத்தில் பல முக்கியமான திருத்தங்கள் செய்தானபிறகு, பின்னும் ஒருதரம் தன்னுடைய பராக்கிரமம் பெற்ற படைகளை யுத்தத்திற்கு நடத்தினான். இந்தத்தடவை அவன் மிகவும் பனிமூடிய ஆல்ப்ஸ் மலைத்தொடரின் வழியாய்ச் சேனைகளை நடத்திக்கொண்டு போனான். உலகத்திலுள்ள யுத்த சரித்திரங்களில் இது மிகவும் ஸாகஸமானதும் அனைவரும் அதிசயிக்கத்தக்கதுமாம். அத்தனை வீரத்தனமாகச் சேனைகளை நடத்திக்கொண்டுபோய் 1800-ம் வருஷத்திலே மாங்கோ என்னும் இடத்தில் மிகச் சிறப்புபெற்று இத்தாலியதேச முழுமைக்கும் அவன் தானே அதிபதியாயினான். (தொடரும்.)

ஆகாசத்திலிருக்கும் சூரியனுக்கும் பூமியிலிருக்கும் சுவானங்களுக்கும் என்ன துவேஷமோ தெரியவில்லை. பிரதிதினமும் உதயமாகும் சூரியனை உதயமாகாதபடி தடுக்கவேண்டியோ, அல்லது வேறு எந்த எண்ணத்தைக் கொண்டோ சுவானங்களெல்லாம் உலகத்துக்கே ஒளியைக் கொடுக்கும் திவ்ய தேஜோ ரூபனான ஆதித்தனை நோக்கிக் குரைக்கின்றன. இவ்வாறே இராக்காலத்தில் உதயமாகித் தன் குளிர்ந்த கிரணங்களை யெல்லாம் உலகத்தில் நிரப்பி பிரகாஸத்தைக் கொடுக்கும் சந்திரனைக் கண்டு நரிகள் ஊளையிடுகின்றன. இவற்றை நோக்குங்கால் மகா தேஜஸ்வியான சூரியனுடைய பிரகாஸமும் சந்திரனுடைய ஒளியும் நாய் நரிகளின் சப்தத்தால் குறையாதது போல் நல்லவர்களின் க்ஷேமலாபங்களும் கீர்த்தியும் துராத்மாக்களின் துஷ்டப் பேச்சுகளாலும், வீணான மறுப்புகளாலும், பொய் வதந்திகளாலும் குறையாவென்பதைத் தெளிவாய் அறியலாம். அன்று பிறந்த சிசுவைக் கொலை செய்தல் எத்தனை தோஷமோ அத்தனை தோஷம் நல்லவர்களின் நற்பெயரைக் கெடுத்துத் தூறு சொல்லுவோர்க் கென்பதை எவர்தான் அறியார்? ஐயோ! மூடனுடைய செய்கையை என்னென்றுரைப்போம். பிறர்மீது நிந்தனை வழங்குவது கொடும்பாவமென்பதை அவன் ஏன் அறியவில்லையோ?

### அக்குற்றம் உன் மீதே!

ஜீவாத்மாவே! நீ மரத்திலும் மிருகத்திலும் வசிப்பதே நன்மையினாக துஷ்டனுடைய தேகத்தில் வசித்து ஏன் அவதூறுக்கானாகிறாய்? உன்னை நிந்தனைக்குட்படுத்தும் நிலைமை நீ மூடனுடைய சரீரத்தில் வசிக்கும் தன்மையினாலன்றோ ஏற்பட்டது? ஆகவே நீ சீக்கிரம் அவ்வுடலைவிட்டகல்வது நலம். நீ ஒழிந்தால் பருத்தசரீரம் பருந்துக்கும் புழுவுக்கும் இரையாகுமேயன்றிப் [illegible] ஹேதுவாகாது. ஆகவே குற்றத்தை உன் மீதே சுமத்துவேன்.

58. காவன்றி வயிறு குசி யறியுமோ?

# விநோதக் களஞ்சியம்

**படிப்பை நிறுத்து :—**

தாயார் :—என்னடா விசேஷம் ? அவளுக்கு ஈஸ், பீஸ், என்று சொல்லித் தருகிறாயே ?

குமாரன் :—இங்கிலீஷ் கற்பித்துக்கொடுக்கிறேனம்மா.

தாயார் :—நீ பெண்ஜாதியைப் படைத்துவிட்டுத் தலைகீழ் விழுகிறாய், அவள் எல்லோரையும் திருப்தி செய்தாயிற்று. இனி இங்கிலீஷ் படித்துத் திருப்தி செய்வதுதான் பாக்கி ! போதும் போதும் படிப்பை நிறுத்து.

* * *

**வாய்ப்பேச்சுக்கு வாய்ப்பேச்சு :—**

கோபு :—அவ்வளவு பெரியமனிதனை ஒரு உபசரிப்பும் செய்யாமல் ஏதோ பேச்சு பேசியபடியே வெகு பிரியமாய் அனுப்பிவிட்டாயே ?

நாணு :—அவர் வீட்டுக்கு நான் போன போது எனக்கு நடந்ததும் இவ்வளவுதான்.

* * *

**மத்தியஸ்தம் வேண்டாம் :—**

எதிர் வீட்டுக்காரன் :—அப்படியல்ல, இந்த சண்டையிலே யார் முதலில் பேசியதென்றால்—

வீட்டுக்காரன் :—அப்பா உன்னை மத்தியஸ்தத்துக்கு அழைக்கவில்லை. என் வீட்டுச் சண்டையை நானே தீர்த்துக் கொள்ளத் தெரியும். நீ திண்ணையைவிட்டு எழுந்துபோ.

* * *

**ஏழைக் கேற்ற மொழி :—**

கன்னையா :—நான் கேட்டதற்கு ஒரு காசுமில்லையென்றாய். இப்போது வந்த விருந்தினர்க்கு இவ்வளவு தடபுடல் செலவு செய்கிறாயே ?

பொன்னையா :—நீ ஏழை, உனக்குத் தகுந்த பதில் அது. அவர்கள் தனவந்தர், அவர்களுக்குத் தகுந்த உபசாரம் அது. ஏழைக்கு ஏழை போலவும், பணக்காரர்களிடம் பணக்காரன்போலவும் காண்பிக்க வேண்டியிருக்கிறது !

* * *

**பணக்காரன் வார்த்தைக்கு ஒரு தனிமதிப்பு :—**

ஒரு உறவினர் :—(தன் பந்துவான பிரபுவை நோக்கி) தாங்கள் அந்தப் பத்திரிகையிலிருந்து இப்போது சொன்ன சங்கதி மகா ஆச்சர்யம் ! இதுவரை நான் கேட்டதேயில்லை.

வீட்டுச் சேவகன் :—(பிரபுவை நோக்கி) தாங்கள் வருவதற்கு முன்பு அப்பத்திரிகையிலிருந்த சங்கதியை இவருக்குச் சொன்னேன். அதை அலட்சியமாய்க் கேளாதவர் போலிருந்துவிட்டு, இப்போது தாங்கள் சொன்னதும் ஏதோ புதிதாய்க் கேட்டதுபோல் தங்களைப் புகழ்கிறார். பணக்காரரின் வார்த்[...]தற்கு ஒரு தனிக்கௌரவ மாக்கும் !

---

[...] ரை யிருந்தென்ன ?

---

"ஆநந்த குணபோதினி பிரஸ்[...], 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

169826
சென்னை-600 008

எமது கம்பெனியில் ஒவ்வொரு ஔஷதங்களையும்
பரிசோதனை செய்து தயார் செய்யப்பட்ட

# ஔஷத விளம்பரம்.

நமது ஔஷதங்கள் யாவும் உண்மையும் உத்திரவாதமும் அனுபவமுள்ள பேர்போன ஔஷதங்கள். இதை அனேகரால் எப்பொழுதும் வழக்கமாய் வாங்கி அனுபவித்து நற்சாக்ஷி பத்திரங்கள் அளித்திருக்கின்றனர். இவை அனுபவத்திற்கு வந்த ஔஷதங்கள். ஒருமுறை வாங்கிப்பார்த்தால் உண்மை விளங்கும். ஒவ்வொருமருந்துடன் உபயோகிக்கும் விதம் பத்திய நோட்டீஸ் அனுப்பப்படும்.

## முகப்பருக்களுக்கு மருந்து.

அழகிய முகங்களைக்கெடுத்து விகார ரூபத்தைக்கொடுக்கும் பருக்கள் தழும்புக்கள் அதிக வெயிலில் திரிவதால் உண்டாகும் கறுப்பு நிறம் முதலியவைகளைப் போக்கி முகத்திற்கு நல்ல அழகையும் காந்தியையும் கொடுக்கும்.

புட்டி 1-க்கு அணா 0 8 0

## ஸ்வாஸகாஸ சிந்தாமணி.



இந்நோய்க்கு முக்கிய காரணமாயுள்ள கபத்தைச் சங்கரிப்பதில் இம்மருந்து பிரசித்திபெற்றது. ஸ்வாஸகாஸமுடைய ரோகிகள், அதிக அவஸ்தையுற்று கண் கை கால்களை அசைக்க முடியாமல், பிராணன் போவதுபோல் பரிதாப நிலைமையில் இருக்கும் சமயங்களில், நமது ஔஷதத்தில் அரை தோலா கொடுத்து கையில் கெடியாரத்தை வைத்துபார்க்க பத்தே நிமிஷத்தில் நோய் சவுக்கியப்பட்டுப் போவதை கண்டறியலாம். இவ்வற்புத மருந்தை 20-நாட்கள் காலைமாலை இருவேளையும்உட்கொண்டால் மார்பிலும் விலாப் பக்கங்களிலும் குத்துதல், திணறித்திணறி மூச்சுவிடுதல், வயிற்றுப்பிசம், கர் ஞர் என்னும் சப்தத்தோடு கூடிய மேல்சுவாசம், ஓயாத இருமல், கபம் விழுதல் துர்பலத்தோடு கூடிய தீவிர நாடி தலைவலி ஆயாசம் குமட்டல், மூச்சடைப்பு ஏக்கம் முதலியவை முழுதும் குணமாக்கி திரும்பவும் இந்நோய் வரவொட்டாமல் தடுக்கும். பனிக்காலங்களிலோ அல்லது வாரம் மாதம் வருஷத்திற்கும் ஒருமுறை போய்வரும் இம்மாதிரி நோய்க்கு முன் ஜாக்கிரதையோடு இவ் ஔஷதத்தைச் சேவித்தால் நன்மையடையலாம்.

இதன் விலை டப்பி ரூபா 2 0 0

**தி. இராஜகோபால் முதலியார்,**
**302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.**

# இந்திராணிக்கிருதமும், சமய சஞ்சீவி லேகியமும்.



சூதக சம்பந்தமான வியாதிகளால் சரீரம் ஸ்தூலித்து, வீட்டுவிலக்கம் சரியான காலத்தில் உண்டாகாமலும், கர்ப்பந் தரிக்காமலுமிருக்கும் ஸ்திரீகளுக்கு இது திவ்ய ஔஷதம்.

சூதகம் கிரமப்படி வெளிப்படவேண்டியகாலங்களில் ஆகாமல் முப்பது நாற்பது அறுபது நாட்களுக்கு ஓர் தடவையாதல் சூதக காலத்தில் ரத்தம் சிறிது கண்டு மறைதல் சிலருக்கு சிறுவயதிலேயே சூதகம் நின்று சரீரம் ஸ்தூலித்தல் சூதகத்தில் உண்டாகும் உதிரத்தின்நிறம்மாறிவருதல், ஆயாசம், தலை இடி, தலைபாரம், மயக்கம். இடுப்புவிட்டுப் போதல் ஜீரணசக்திமறைதல், தொடை கணுக்கால் முதலிய இடங்களில் நோய் தீவிரமான ஸ்வாஸம், இரண்டடி நடந்ததும் மேல்மூச்சு உண்டாதல், சூதககாலத்தில் பொறுக்க முடியாதவயிற்று வலியால் புழு துடிப்பதுபோல் துடித்தல் முதலியறுவைகளை இந்த ஔஷதம் பற்றறப்போக்கி. மறு தாரத்தில் மேலேகண்ட நோய்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் இல்லாமற்செய்துவிடும்.

சில ஸ்திரீகளுக்கு அடிக்கடி கர்ப்பு அழிவு உண்டாதல், கர்ப்பந்தரித்தது போல் சூதகம் நின்று இரண்டு மூன்று மாதத்திற்குப்பின் உதிரங்கொட்டுதல், சிலருக்கு ஓர் குழந்தைபிறந்தபின் சந்தானமே இல்லாமற் போய்விடுதல் முதலிய கெடுதிகள் உண்டாவதுண்டு. அத்தகைய ஸ்திரீகள் இந்த ஔஷதத்தை சேவிப்பார்களானால் அவர்களுடைய மனக்குறை நீங்கி, பத்துமாதம் நிறைந்தபின் அழகான குழந்தையைப்பெற்று சந்தோஷமடைவார்கள். தேகத்தில் ஓடி ஓடி குத்துதல், கைகால் குத்தல், குடைச்சல்' இடுப்புவிட்டுபோதல், ஒரே பக்கத்தலைவலி, வாந்தி விக்கல், வயிறுகழிதல் வயிற்றில் கட்டி திரனம், மேக வாய்வு, ஓடுவாய்வு, கர்ப்பவாய்வு, பக்கவாய்வு ரோகங்களுக்கும் வரப்பிரசாதம் பெற்றது. இம்மருந்தை பந்தங்கட்டிப் பரீக்ஷிக்கலாம்.

கிருதமும் லேகியமும் அடங்கிய செட் 1-க்கு விலை ரூபா 2 8 0

---


நேயர்களே! தாங்கள் நெடுநாளாக தேடும் புத்தகம் எது?

## மனோவசிய இரகசிய சாஸ்திரம்

இப்புத்தகத்தில் ஹிப்னாடிசம், மெஸ்மெரிஸம், திடச்சித்தப் பயிற்சி, ஜனவசியம், மனோவசியம், மிருகவசியம், தூரதிருஷ்டி, தூரசிரவணம், நித்திரைபோன்ற மயக்கமடையச் செய்யத்தக்கசாதனம், இவைகளுக்குரிய மந்திரங்கள், பாம்பு, தேள்முதலிய விஷ ஜெந்துக்களின் விஷங்களை நீக்குதல், ஔஷதப் பிரயோகமின்றிப் பிணிகளைத் தீர்த்தல், அன்னியரின் ஆழ்ந்த இரகசியங்களை அறிதல் முதலான அபாரசித்திகள் அடங்கியிருப்பது மன்தி மனுஷிய வல்லமையின் பரமரகசியங்களை விளக்கியுள்ளது. ரூபா 1 0 0

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

# விக்டர் அண்டு கம்பெனி,

தபால் பெட்டி நெ. 164, மதராஸ்.

## இங்கிலீஷ் ஸ்டையல்

## ரோல்டுகோல்டு மங்களூர் வளையல்.



இது அமெரிக்கன் ரோல்ட் கோல்ட் பொன்னால் பல மாதிரி இலை, கொடி முன் பின் ஒன்றோடொன்று பின்னியது போல் வெகு அழகாயும் வேலைத்தரமாயும் செய்யப்பட்டு சீமையில் இருந்து வந்திருக்கிறது. இதைப் பார்ப்பவர்கள் பொன்னால் செய்த கைவளையல் என்றே **எண்ணுவார்கள்.** அநேக நாள் கருக்காமல் பளபளப்பாகவே இருக்கும்.

அசல் மங்களூர் பட்டைதீர்த்த வளையல் ஜதை 1-க்கு ரூ. 2.

ஷை பூனா மோஸ்தர் வளையல் விலை ரூ. 1.

## 8 மூலை ரிஸ்லெட் கெடியாரம்.



இது ஓர் புதுமாதிரியான 8 மூலை கன் தீர்த்த ரிஸ்ட்லெட் கெடியாரம். இதைப் பார்ப்பவர்கள் ஆச்சரியப் படுவார்கள். வெகுகாலம்வரை சுலோ பாஸ்ட் இல்லாமல் 'சரியாய் போகக் கூடியது. இதை உயர்தரமான சாமான்களால் செய்திருப்பதால் சரியான டைம் காட்டக்கூடியது. இதில் அனேக ரகங்கள் உண்டு இரவில் மணிபார்க்க எலக்டிரிக் ரேடியம் டயல்உள்ள கெடியாரமும் இருக்கின்றன.

நெ. 22-8-மூலை நிக்கல் ரிஸ்ட்லெட் கெடியாரம் உயர்ந்த சீமை தோல் பட்டையுடன் விலை ரூபா ... ... ... ... ... 7 0 0

நெ. 23. ஷை கெடியாரத்தில் இரவில் மணிபார்க்க ரேடியம் டயல் உள்ள கெடியாரம் ... ... ... ... ... ... 7 8 0

24. 8-மூலை பொன்கில்ட் கெடியாரம் ... ... ... 8 0 0

25. ஷை கெடியாரத்தில் இரவில் மணிபார்க்க ரேடியம் டயல் உள்ள கெடியாரம் 1-க்கு ரூபா ... ... ... ... ... 8 8 0

ஷை மாதிரியில் 4-மூலை கெடியாரங்களும் உண்டு. விலையெல்லாம் ஒன்றே.

**VICTOR & Co.,**

**Post Box No. 164, MADRAS.**

## தனித்தனி ரப்பர் இங்கிலீஷ் எழுத்துகள்.

இந்த ரப்பர் எழுத்துப் பெட்டிகள் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டியது, ஏனெனில் அச்சடிக்க முடியாத சில்லரை வேலைகள் இதனால் முடியலாம் அதுவுமல்லாமல் கார்டுகளிலும் கவர்கள் பேரிலும் கடிதங்கள் பேரிலும் அச்சடிக்கவும் இன்னும் அநேக சிறிய வேலைகளுக்கும் வெகுஅநுகூலமானது. நெ. 1. A. B. C. D. என்று இம்மாதிரியான எழுத்துக்கள்ஒவ்வொரு எழுத்திலும் 3-எழுத்துகளும் 1-செட் எண்கள் முதலியது 120-எழுத்துகள் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூபா .. ... ... 1 0 0

நெ. 2. A. B. C. D. என்று ஒவ்வொரு எழுத்திலும் 6-எழுத்தும் எண்களும் முதலியதும் 250-எழுத்து அடங்கியபெட்டி 1-க்கு விலை ரூ. 2 8 0

நெ. 3. 300 எழுத்துகள் அடங்கியது விலை ரூபா ... ... 3 8 0

இவ்வெழுத்து பெட்டியுடன் பியாட் சிராவணம், எழுத்துகள் அடுக்கிக் கொள்ள கம்போஸ் ஸ்டிக் இந்த 3-சமான் அனுப்பப்படும்.

---



## பாக்கட் சிகரட் லைட்.

சுருட்டு, சிகரட் முதலியவை உபயோகிப்பவர்களுக்கு வெகு அனுகூலமானது தீப்பெட்டி இருக்க வேண்டிய தவசியமில்லை இவை எரிய விடுவதற்கு எண்ணெய், திரி முதலியவைதேவையில்லை. இதிர்மேற்புறம் இருக்கும் சக்கரத்தை திருப்பினல் பக்கத்திலிருக்கும் திரியில் கொழுந்துவிட்டு எரியும்.

உபயோகிக்கும்விதம் யந்திரத்துடன் அனுப்பப்படும். இதன் விலை 1-க்கு ரூபா 1 0 0

## அம்பலவாணன் அல்லது
## கற்பகவனத்தில் நடந்த கடுங்கொலை.

இப்பேயர்கொண்ட செந்தமிழ்க்கதை அழகான தமிழ் நடையில், படிப்பவர் மனம் இன்பமடையும்படி எழுதப்பட்டிருக்கிறது. படித்து முடிக்கும் வரையில் புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது. படிக்கப் படிக்க இனிக்கும். வற்றாத இன்பம். விலை ரூபா 1 0 0

## அமராவதி அல்லது அறிவையின் அற்புதம்.

(ஒரு நவீன துப்பறியும்நாவல்.)

இதுசொற்சுவை, பொருட்சுவை முதலிய நவரசலங்காரங்களினாலும் ஆச்சர்ய சம்பவங்களாலும் சிறந்த வர்ணனைகளாலும் மனத்திடுக்கிடும் விஷயங்களாலும் மிக அற்புதமாய்ப் புனைந்தெழுதப்பட்டது. இக்கதா நாயகிதன் அதிவிவேக சாமார்த்தியத்தினால் கற்பையழிக்க முயன்றவர்களுள் ஆங்காரதன் என்பவனைக் கொலைசெய்வதும், காட்டில் வாழரக்காக்கனையும், ஒரு சிற்றரசனையும் துப்பாக்கியார் சுட்டு வீழ்வதும், கள்ளர் காவலிலிருந்து தப்புவதும் வாசிப்போரின் மனதைப் பிரமிக்கச்செய்யும். அன்றியும் இதில் துப்பறிபவன் சாமர்த்தியம் மிக மெச்சத்தகுந்தது. விலை அணா 12.

**VICTOR & Co.,**
***Post Box No. 164, MADRAS.***